TAMIL SPEAKING
Personal Injury Lawyer
INJURED IN A ROAD ACCIDENT ?
ACCIDENT AT WORK PLACE OR PUBLIC PLACE
WE ACT ON "NO WIN NO FEE" BASIS
YOU KEEP 100% COMPENSATION
FOR FREE ADVICE CALL
Ask for RAJ
NOTMYFAULT LAWYERS
M : 0781 089 7754
EMail : raj@notmyfaultlawyers.com
4, Prince Albert Drive, Ascot, SL5 8AG

BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER

FREE

PAPER - 10 ♦ ISSUE - 213 ♦ FRIDAY 07 MARCH 2014

LONDON ACCIDENT CLAIMS LIMITED
70 Windmill Road, Croydon, CR0 2XP
வாகன விபத்தா? உங்கள் தவறில்லயைா?
Driver / Passenger – within last 3 years
3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட
• Personal injury (Neck,Back & Shoulder Pain)
• Replacement Vehicle (Terms & Conditions Apply)
Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்
NO WIN NO FEE
Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM




SURREY PAWNBROKERS LTD
நகை அடைவு சேவை
Interest Rate Start from
£1000 → 2.5 %
We pay maximum gold price for your Jewellery for 1 grams around £21.00
WE BUY GOLD - BEST PRICE PAID
WE BUY EURO --- BEST RATE PAID
94 Tolworth Broadway, Surbiton, KT6 7HT
P : 020 8399 9176 M: 09847 579 682

• புதிதாக அகதி அந்தஸ்த்து கோருபவர்கள், விசா காலவதியாகி மற்றும் சட்டவிரோதமாக தங்கி இருப்போர்.
• ஏற்கனவே அகதி அந்தஸ்து கோரி Legacy (லெகசி) திட்டத்தின் கீழ் எவ்வித முடிவின்றி நீண்ட காலமாக காத்திருப்போர்.
• கைது செய்தல், தடுத்து வைத்தல், நாட்டுக்குத் திருப்பி அனுப்புதலை எதிர்கொள்வோர்
• அனுபவமுள்ள சட்டத்தரணிகள் குழுவினரால் ஆலோசனை மற்றும் விண்ணப்பம் செய்து தரப்படும்.
இலவச ஆலோசனைக்கு தொடர்பு கொள்ளவும்
வின்சென்ட் சொலிசிட்டர்
07870 763 570 / 020 8574 0666
11-13, South Road, Southall UB1 1SU
(ஹிமாலயா தியேட்டருக்கு எதிராக)

FM Carpets
சிலவில், தரத்தில், சேவையில் என்றும் முன்னணியில்
Special Offers for Landlord & Estate Agents
இலவச மதிப்பீடு, இலவச ஃபிட்டிங், நுட்பமான சேவை
Huge Stock Variety of Colours Fast Fitting
வீட்டிற்கும் தொழில் நிலையங்களுக்கும் ஏற்றவை
MANY OFFERS IN STORE www.fmcarpets.com
Tel : 020 8252 6433 / 07946 566 885
120 Aldborough Road South, Seven Kings, Illford, IG3 8EZ

IATA
SKY WINGS LTD
TRAVEL & TOURS
"WHERE THE SUN NEVER SETS"
Cheapest Worldwide Fares with the Best Service
We are authorised main agents for Srilankan, Jet Airways, Qatar, Kuwait, Oman...
Reservation:
Mob: 07850876921
02086729111
We accept all major credit cards
Colombo £170 + Taxes
Visa Service to Srilanka, Australia, India & USA
119,Tooting High street, London, SW17 OSY

குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்க 20 வருட அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்
HSFC offers comprehensive services in the areas of assisted reproduction (including IVF, ICSI, egg donation and egg sharing), gynaecology, and male infertility.
We have a flexible schedule, including appointments in the evenings and weekends.
தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
HSFC HARLEY STREET FERTILITY CLINIC
Director: Dr Geetha Venkat MD, FRCOG
134, Harley Street, London, W1G 7JY
Phone: +44 (0)20 7436 6838
Mail : info@hsfc.org.uk | Web:www.hsfc.org.uk

நீங்கள் லண்டனில் நீண்ட காலம் இருக்கின்றீர்களா? அல்லது உங்கள் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு விட்டதா? நீண்ட காலமாக விசா முடிந்த பின்னர் இந்த நாட்டில் இருந்துள்ளீர்களா? கவலையை விடுங்கள். மனித உரிமை சட்டத்தின் கீழ் விசாவை விண்ணப்பிக்கலாம்
Contact - Immigration Law Expert - Paul John & Co. Solicitors
020 8215 1205
இந்த விளம்பரம் கொண்டு வருபவர்களுக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்கப்படும்
எந்த விதமான UK விசா பிரச்சனைகளையும் உங்களுக்கு செய்து தருவோம்.
Paul John & Co. Solicitors
115a, The Grove, Stratford, E15 1EN
website - www.pauljohnandco.co.uk

சென்னையிலிருந்து UK விசா
தொழிலாளர் விசா
தங்கியிருக்கும் விசா
மாணவர் விசா
சுற்றுலா விசா
இந்தியாவிலிருந்து கொண்டு UK விசா செய்து தரப்படும்
UK Immigration Specialist
Poul & Minnaa 044 4261 3698
New No. 88, Old No. 150, 1st Floor, Dharma Towers
Nelson Manickam Road, Choolaimedu, Chennai 94

We may have herbal solutions for your problems !!
உங்கள் தாம்பத்திய வாழ்க்கையில் சிக்கல்களா?
காலத்தை வீணடிக்காமல் தொடர்பு கொள்ளுங்கள்.
ஆண்மைக் குறைவுக்கான சிகிச்சைகளும் எம்மிடம் உண்டு
சகலவிதமான மருத்துவ ஆலோசனைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்
Herbal Aid Health Centre
10 Park Avenue, Southall, Middx, UB1 3AQ
Tel: 020 8843 0330
www.herbalaidhealthcentre.co.uk | herbalaid@hotmail.co.uk

# Do you want to become an Accountant?

**Sage**

- We teach Sage for those don't have exposure to accounting package.
- Our approach will be more practical oriented and focused on the real accounting issues.
- We will teach the candidate to enable them to work in Sage independently.
- Our course includes the preparation of Trial Balance, Balance Sheet, Profit & Loss Account and VATcomputation including EU Sales Listing.

**Excel**

- We conduct classes for Basic and Advanced Excel (such as V-Lookup, H-Lookup, IF functions, Pivot tables, data worksheet consolidation, IRR & NPV computations) for complex modelling for accountants.
- You will get the chance to learn how to model practical case scenarios.

## AIKON ACCOUNTANTS LTD

CHARTERED MANAGEMENT ACCOUNTANTS

**Tel: 020 3585 3484, Mob: 077 1632 4331**

Email: accounts@a-accountants.com Web: www.a-accountants.com

# GYPS Pest Control Services

லண்டன் மாநகரில் முதல் முதலாக தமிழர்களால் தமிழர்களுக்காக தொடங்கப்பட்ட ஒரே நிறுவனம்



எலி
சுண்டெலி
மூட்டைப்பூச்சி
கரப்பான்
எறும்பு
மற்றும் பல பூச்சிகள்

இவை அனைத்தையும் அழித்து உங்களுக்கு நிரந்தர பாதுகாப்பும் நின்மதியான நித்திரையும் தருவதே எங்கள் சேவை.

உணவகங்கள், கடைகள், மற்றும் தொழிற்சாலைகளுக்கு Monthly or Quarterly Pest control vist மிகவும் மலிவான விலையில் ஆனால் மிகுந்த தரத்துடன் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு

**07983 589 993**
**07723 467 012**

# United College முதன்மை குடியுரிமை பெறும் பரீட்சைகள்



**C1, B1 & B2 Test**

**Our services:**

- ESOL with citizenship (B 1)
- Point Base Test
- Spouse Visa Test
- Multilingual Staff

You Pay Only Once,
We Train You until You Pass

பிரித்தானியா பற்றிய விடயங்களை ESOL பயிற்சி மூலமும் குடியுரிமை வகுப்புக்கள் மூலமும் அதியுச்ச பயிற்சி வழங்குகின்றோம். சனி மற்றும் ஞாயிறுகளிலும் வகுப்புக்கள் உண்டு.

நீங்கள் சித்தியடையும் வரை உங்களைப் பயிற்றுவோம்- மேலதிக கட்டணம் இல்லை

| | | | |
|---|---|---|---|
| உங்கள் பரீட்சைக்கு தயார் படுத்தும் வகுப்புகளுக்கு | £ 150 .00 மட்டுமே * Including Everything | Certificate only in six days | இங்கே சனி 10.00 மணிக்கு ESOL வகுப்புக்கள் உண்டு |

**Head Office - Croydon Tel: 0208 1509 953 | 0753 8933 261**
**14, Lombard Business Park, 2 Purley Way, Croydon CR0 3JP.**

REFRIGERATION - AIR CONDITION - SHOP FITTING





# UK COOL

AND SHOPFITTING Ltd.





168, Manor farm Road, Wembley, Middlesex, HA0 1DD, UK
MOB: 07788289281,07951854057(KUMAR) TEL: 02033710046 EMAIL: ukcool247@yahoo.co.uk





UK COOL & SHOP FITTING LTD

**REFRIGERATION**
Air Condition
Fridge
Freezer
Cold Room (New & Used)
Repairing & Installation

**SHOP FITTING**
Shelving
Flooring
Ceiling
Lighting & Wiring
Counter
CCTV Cameras
Shop Front & Shutter

**BUILDING WORK**
Roofing
Extension

**MOVING & DEVILERY**

UK COOL & SHOP FITTING LTD





**7 Days 24 HRS services & Repair**

URGENT REPAIR? CALL:07951854057

1 YEAR PARTS & LABOUR WARRANTY



# OM GURU SHAKTHI ASTROLOGICAL CENTRE

## GURUJI: KRISHNA SHASRI







இந்தியாவில் ஸ்ரிகாகுளம் மாவட்டம் அருகில் உள்ள பயங்கர வனத்தில் மூன்று குருமார்களிடத்தில் 5 வயது முதல் கானகத்தில் கடும் விரதம் இருந்து கடும் பயிற்சி செய்து 10 வருடங்கள் ஜோதிடம், வாஸ்து, குரு மந்திரங்கள் மூலம் பில்லி சூனிய நிவர்த்தி ஆகியவைகள் கற்று இந்தியாவில் பல பிரபலங்களுக்கு ஜோதிடம் பார்த்து அவர்கள் பெரிய பதவியை அடைந்துள்ளார்கள். பல நாடுகளுக்குச் சென்று வியாபார நோக்கு இல்லாமல் சேவை மனப்பான்மையுடன் மக்களுடைய பிரச்சனைகளைத் தீர்த்து வருகின்றார்.

உத்தியோக பிரச்சனை, வியாபார முன்னேற்றமின்மை, பில்லி சூனியம் மற்றும் எல்லாவித பிரச்சனைகளையும், மூலிகை மருந்து மூலலும், ஆயுர்வேத மருந்து மூலமும், டாக்டர்களால் குணப்படுத்த முடியாத வியாதிகளையும், மனப்போராட்டங்களை உங்கள் கைநாடி மூலம் கண்டுபிடித்து போக்கச் செய்வார்.

இவர் பல நாடுகளுக்கு சுற்றி இலண்டனுக்கு வந்துள்ளார். சில காலமே இங்கு வசிப்பார். அதற்குள் நீங்கள் அவரைத் தொடர்பு கொண்டு உங்கள் பிரச்சனைகளைக் கூறிப் பரிகாரம் தேடுங்கள்.

**21 LEE HIGH ROAD**
**LEWISHAM SE13 5LD**

Near: SIVAN TEMPLE, Opposite: KAVIAYA (SATHYAM) SUPER MARKET

**Tel: 07404567306**
**07506737606**

Open
7 Days a Week
9.30am to 8.00pm




## பழங்கள் பலவிதம்

பழங்கள் பலவிதம். உண்பது மட்டும் வேறுவிதம். கண்களைக் கவரும் பழங்களை கண்டவுடன் கடிக்கவேண்டாம். அதற்கும் சில விதிகள் உண்டு. அவ்விதிகளை கடைப்பிடித்து உணவில் சேர்த்துக் கொண்டால் தான் அதன் முழுப்பலனும் கிடைக்கும் என்பதே மாசிலாமணி அவர்களின் விளக்கமாகும். இக்கட்டுரையை யாராவது வாசிக்காது தவற விட்டிருந்தால் தவறாமல் ***ஒரு பேப்பர்*** சென்ற இதழில் 28ஆம் பக்கத்தைப் புரட்டவும்.

*- அன்புடன் உமா மகாலிங்கம்*

## மின்சாரக்கதிரை

ஐ. நாவுக்கோ, அல்லது அதன் துணை அமைப்புக்கோ போர்க் குற்றவாளி ஒருவரை மின் கதிரையில் இருத்திக் கொல்லும் அதிகாரம் இல்லை ! ஆனால், போர் வெற்றியின் பின்னர், இலங்கை சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம்தான் சொந்தமானது, ஏனையோர்கள் சிங்கள பௌத்தர்கள் கொடுக்கும் உரிமைகளையும், சலுகைகளையும் வைத்து வாழ்ந்துவிட்டுப் போகலாம் எனப் பேசியிருந்த இந்த முன்னாள் இராணுவத் தளபதியும், அரச கட்சியினர் போலவே 'மின்-கதிரை' தண்டனை பற்றி ஏமாற்றுப் பேச்சுப் பேசுகிறார் ! இந்த இனவாத-மதவாத இராணுவத் தளபதிக்கு ஜனாதிபதித் தேர்தலின்போது, தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கியதும் இங்கு அவதானிக்கத் தக்கது !

*- அபிமன்னசிங்கம் உதயகுமார்*

## கனவுலகில் வசிக்கிறார்களா?

'ஒரு துவக்கும் ஒரு மோதிரமும்' படம் மிகநன்றாக எடுத்திருக்கிறார்கள். படக்குழுவினர்களுக்கு எனது பாராட்டுக்கள். துவக்கு என்று தலைப்பில் இருந்ததால் துரத்தி துரத்தி சுட்டு எங்களுக்கு வெறுப்பேற்றப் போகிறார்கள் என்று பயந்தேன் அப்படி ஒன்றும் நடக்கவில்லை.

இப்ப தொலைக்காட்சிகளில் விளம்பரமாகப் போடப்படும் 'சிவசேனை', 'தமிழ் MI7' ட்ரெயிலர்களை பார்க்கும் போது இவர்கள் கனவுலகில் வசிக்கிறார்கள்போல் தெரிகிறது.

*- அன்ரன் பொஸ்கோ*

## அபிவிருத்திதான் முக்கியம்

ஜெனிவாத் தீர்மானம் பற்றி பென்சன் எடுத்த நீதவான் விக்கியிடம் கேட்க அவர் தனக்கு அரசியல் முக்கியமில்லை அபிவிருத்திதான் முக்கியம் எண்டு பதிலளிச்சிருக்கிறாராம். இது கொஞ்சம் பரவாயில்லை. எனக்கு ஒண்டும் முக்கியமில்லை என்ரை பிரேமானந்தா சாமியார் தான் முக்கியம் எண்டு அவர் சொல்லாதவரைக்கும் சரி. ஆனால் அபிவிருத்தி முக்கியம் எண்டுறவர் பசிலுடன் சேர்ந்திருந்தால், பென்சன் காலத்திலும் கொஞ்சதம் காசு பார்த்திருப்பார். வாசுதேவாவின் பேரப்பெடியளுக்கும் உதவலாம். பாவம் பிழைக்கத் தெரியாத மனுசன்.

*- எம்.பி. ஆறுமுகம்*

## ஊடகச் சதிராடி

யாழ் உதயன் பேப்பரின் முன்னாள் பிரதம ஆசிரியர் வித்தியாதரன் புதிதாக ஒரு இணைய தளம் தொடங்கியிருக்கிறாராம். தொடக்கி வைத்தவர்கள் வேறு யாருமில்லை அத்தியடி குத்தியன் மற்றும் இந்திய துணைத் தூதுவர் மகாலிங்கம். முன்னர் ஏதோ விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவானவர் என்று காட்டிக் கொண்ட இவர் இப்போது இந்தியா, சிறிலங்கா அரசாங்கங்களின் உத்தியோக பூர்வமற்ற முகவராக பணியாற்றுகிறாராம்.

*- சதீஸ்*

## ஜெனிவாச் சடங்கு

எனக்கெண்டால் ஒண்டுமாய் விளங்கேல்லை. இப்ப வருசம் பிறந்து பெப்பரிவரி மார்ச் மாசம் வந்துதெண்டால், எல்லாரும் ஜெனிவா நோக்கி காவடி எடுக்கினம். கொஞ்சப்பேர் லொபி செய்யிறம் எண்டு கோர்ட்டு சூட்டோடை பிளேனிலை போயினம். இன்னும் கொஞ்சப்பேர் மொத்தக் கோட்டுகளை போட்டுக் கொண்டு இந்தக் குளிருக்கிள்ளாலை நடக்கினம். இன்னும் கொஞ்சப்பேர் குடும் பத்தோடை கோர்ச் இல ஏறிப்போய் ஐ.நா. வுக்கு முன்னாலை ஆர்ப்பாட்டம் செய்யினம். ஆனால் கொண்டுவாற தீரமானங்களிலை 'தமிழ்' எண்ட சொல்லையே காணேல்லை.

*- ஜெயம்*

## அண்ணை றைற்

முன்னர் யாழ்ப்பாபணத்தில் பட்டி தொட்டியெல்லாம் ஒலித்தது கே. எஸ். பாலச்சந்திரனின் 'அண்ணை றைற்' தனிநடிப்பு. 'மத்தாப்பு' என்ற கலை நிகழ்ச்சியிலும் அவரது நிகழ்ச்சி ஒரு அங்கமாக இருந்தது. பின்னர் 'தணியாத தாகம்' வானொலி நாடகம், 'வாடைக்காற்று' திரைப்படம் என பல சாதனைகள் படைத்த கலைஞர் கே. எஸ். பாலச்சந்திரன். அவருக்கு எனது இறுதி வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*- வனஜா செல்வராஜா*

## தனிப்பட்ட விசயங்களில் தலையீடு

நாடுகடந்த அரசாங்கத்தில் அமைச்சர் ஒருவரும் அவரது கணவரான எம்.பியும் பிறந்தநாள் கொண்டாட்டம் ஒன்றில் நிற்கும் படங்களைப்போட்டு அவர்களை அவதூறு செய்துள்ளது ஒரு இணையதளம். அவரவர் தனிப்பட்ட விடயங்களில் தலையிடுவதை எமது ஊடகங்கள் நிறுத்த வேண்டும் எனத் தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன்.

*- அழகானந்தன்*

## சிறிலங்காவிற்கு எதிரானது அல்ல

ஜெனிவாவில் கொண்டுவரப்படும் தீர்மானம் சிறிலங்காவிற்கு எதிரானது அல்லது அதனை எதிர்க்க வேண்டாம் என சுமந்திரன் நீண்ட நாட்களாகவே கேட்டு வருகிறார். இப்போது வந்துள்ள தீர்மானத்தை பார்க்க அவர் சொன்னது சரியாகத் தெரிகிறது. சுமந்திரன் போன்ற ஒரு தேசாபிமானிக்கு இன்னமும் 'லங்கா இரத்தினா' விருது வழங்காதிருப்பது முறையல்ல.

*- கயல்விழி*

## பலவீனப்படுத்த வேணாமாம்!

ஜெனிவாவில் சிறிலங்காவுக்கு எதிராக அமெரிக்கா தலைமையிலான நாடுகளால் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானத்தை, பலவீனப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட வேண்டாம் என்று இந்தியாவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரவுள்ளதாம். இவங்கள் என்ன பகிடி விடுறாங்களோ? பலவீனப்படுத்திறதுக்கு இன்னும் என்ன இருக்கெண்டு விளங்கேல்லை !

*- இணுவை சி. இரங்கன்*

## அனுசூரியாவின் பயணம்

தங்கச்சி அனுசூரியாவிலை ஒரு பிழையும் இல்லை. எங்கடை கலைஞர்களை நாங்கள் மதிக்காவிட்டால், அவை இப்பிடித்தான் இருப்பினும். கலைஞர்களுக்கு அங்கீகாரம் முக்கியம் பாருங்கோ. அனுசூரியா ஒரு கலைஞரோ இல்லையோ என்பது எனக்குத் தெரியாது. ஆனால் பொதுவில் இப்படித்தான் நடக்கும்.

*- ஆன் பிரதாபன்*

*உங்கள் கருத்துக்களுக்கு.....*
**Tel : 020 7043 4314**

# "அமெரிக்க - பிரித்தானிய தீர்மானத்தின் நகல் வரைபு தமிழர்களை ஏமாற்றத்தில் ஆழ்த்தியுள்ளது"

**– பிரித்தானிய தமிழர் பேரவை**

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையின் இருபத்தைந்தாவது கூட்டத்தொடரில் அமெரிக்கா, பிரித்தானிய ஆகிய நாடுகள் இணைந்து சமரப்பிக்கவிருக்கின்ற தீரமானத்தின் நகல்வரைவு தமக்கு ஏமாற்றத்தைய ளிப்பதாக புலம்பெயர் தமிழ் அமைப்புகள் கருத்து வெளியிட்டுள்ளன. இது விடயத்தில் பிபிசி தமிழ்ச்சேவைக்கு கருத்துத் தெரிவித்த உலகத்தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரென் சுரேந்திரன், 'அமெரிக்க தீர்மான முன்வரைவு ஏமாற்றமளிக்கிறது இவ் முன்வரைவை வலுப்படுத்த அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளிடம் தொடர்ந்து எடுத்துச் சொல்வோம்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானியத் தமிழர் பேரவை வெளியிட்ட அறிக்கையின் முக்கிய பகுதிகளை இங்கு வெளியிடுகிறோம்.

'இலங்கை தொடர்பில் சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றின் அவசியத்தை தொடர்ச்சியாக வலியுறுத்த கோரி நின்ற நிலையில் ஐ.நா. மனிதவுரிமைப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நகல் வரைபானது உள்நாட்டில் மேலும் ஒரு விசாரணைப் பொறிமுறையினை உருவாக்கி செயற்படுத்த வேண்டும் என கோரிநிற்கின்றமை இலங்கை அரசை மேலும் ஒரு வருட காலத்தை கடத்தி வீணடிக்கச் செய்ய வழங்கும் சந்தர்ப்பமாகவே அமைகிறது. இலங்கை நீதியான முறையில் உள்நாட்டில் விசாணைப் பொறிமுறை ஒன்றினை மேற்கொள்ளும் அளவிற்கு வலுவினைக் கொண்டிருக்கவில்லை என மனித உரிமை ஆணையாளர் ஏலவே தமது அறிக்கையில் வெளியிட்டிருந்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

ஐ நா மனித உரிமை ஆணையாளர் இலங்கைக்கு மேற்கொண்டிருந்த விஜயத்தின் போது அவரை சந்தித்திருந்த ஆர்வலர்கள் உட்பட பலதரப்பட்டோர் இலங்கை அரசின் கண்காணிப்பிற்கும் மிரட்டலுக்கும் உள்ளாக்கப்பட்டு தொடர்ச்சியான நெருக்குவாரத்திற்கு உள்ளாக்கப்பட்டிருந்தமை தொடர்பில் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறிருக்க உள்நாட்டு நீதி விசாரணை என்ற பெயரில் இலங்கை அரசுக்கு வழங்கப்படும் கால இழுத்தடிப்பானது மேலும் உள்நாட்டில் அரசுக்கு எதிராக உள்ள சாட்சிகளை அழிப்பதற்கு ஏதுவாக உள்ளதை சர்வதேச சமுகம் மறந்து நிற்கிறது என பலரும் சாடியுள்ளனர். இதற்கு சான்றாக காணாமற் போனோர்கள் தொடர்பில் தேடிக் கண்டறிவதற்காக உள்நாட்டில் நிறுவப்பட்ட ஆணைக்குழுவையும் அதில் முறைப்பாடு செய்த அப்பாவிப் பொது மக்களின் நிலை குறித்தும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதுடன் குறித்த ஆணைக்குழுவில் காணாமற் போனோர் தொடர்பில் பதிவினை மேற்கொண்ட மற்றும் சாட்சியமளிக்கச் சென்றிருந்த மக்களது வீடுகளிற்கு சென்றிருந்த இலங்கைப் பாதுகாப்புப் படையினர் அவர்களை அச்சுறுத்தியிருந்தமையும் அவர்களது முறைப்பாட்டினை மீளப்பெற்றுக் கொள்ளுமாறு மிரட்டல் விடுத்திருந்தமையும் இங்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டியவை. இலங்கையில் இடம் பெற்ற யுத்தத்திற்கான மூல காரணம் குறித்து நகல் வரைபில் போதிய கவனமளிக்கப்படவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

2009 இல் இடம் பெற்ற யுத்தத்தின் இறுதியில் ஐ நா உட்பட சர்வதேசம் மீது கொண்டிருந்த நம்பிக்கையினை தமிழர்கள் இழந்திருந்தனர் என ஐ நா வின் பொதுச் செயலாளர் ஏற்றுக் கொண்டிருந்தார். ஐநாவின் இத்தவறை பொதுச் செயலாளர் பகிரங்கமாக ஏற்றுக் கொண்டது தமிழ் மக்களிடையே ஒரு புதிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. இந்த நிலையில் வெளியிடப்பட்டுள்ள நகல் வரைபு தமிழர்களது எதிர்பார்ப்பை தகர்த்துள்ளது.

இறுதி யுத்தத்தில் இலங்கையில் இடம் பெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பில் ஓர் சர்வதேச சுயாதீன விசாரணையினை மேற்கொள்ள வேண்டும் என பிரித்தானிய தமிழர் பேரவை தெளிவான ஓர் அழைப்பினை விடுத்திருந்தது. சர்வதேசரீதியாக பரந்துவாழும் ஒட்டுமொத்த தமிழர்களின் வேண்டுதலும் இதுவாகவே இருந்தது.

சுயாதீன சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றினை வலியுறுத்துவதாக பிரித்தானியப் பிரதமரும் அவரது அரசும் எமக்கு ஏலவே உறுதியளித்திருந்தனர். இதனை ஒத்ததாகவே சர்வதேச ரீதியாக பலரது குரலும் ஒலித்துக் கொண்டிருந்த நிலையில் மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பிகப்பட்டுள்ள நகல் வரைபு தமிழர்களை ஏமாற்றத்துக்குள்ளாக்கியுள்ளது. வரைபு தொடர்பில் எதிர்வரும் 26 ஆம் திகதி வாக்களிப்பு நடை பெற உள்ள நிலையில் பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமருன் தமிழர்களுக்கு அளித்துள்ள வாக்குதிகளை நிறைவேற்றி சர்வதேச ரீதியான ஒரு சுயாதீன விசாரணைப் பொறிமுறையினை அமைப்பதற்கு வழி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

TrainingConnect
www.trainingconnect.co.uk
E-mail: courseinfo@trainingconnect.co.uk Tel:+44(0)207 099 2400
Head Office: 694-712, London Road, Hounslow, TW3 1PG (SATNV TW31PX)
0207 099 2400




OUR 100% COMMITMENT
YOU PAY ONLY ONCE & WE TRAIN YOU UNTIL YOU PASS
Life in the UK Preparation Course
B1 Speaking and Listening
- All Applicants after 28th October 2013
- Indefinite Leave to Remain (ILR)
- British Passport / Naturalisation
IESOL Diploma (A1, A2, B1, B2, C1)
- Spouse Visa English Test
- Student Visa English Test
- Work Permit English Test
New rules applicable from October 28th
for British Citizenship and Indefinite Leave to Remain (ILR)
FREE INITIAL ASSESSMENT
Other Centres: Hounslow High Street, Wembley, Holloway Road, Whitechapel

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, MARCH 07, 2014, ISSUE 213

## நீண்டகாலச் செயற்திட்டமே காலத்தின் தேவை

ஐ.நா. மனிதவுரிமைச் சபையின் தற்போதைய அமர்வில் சமர்ப்பிக்கப்பட விருக்கும் தீர்மானம் சர்வதேச சுயாதீன விசாரணையைக் கோருவதாக அமையாது என்பது தமிழ் அமைப்புகளையும் செயற்பாட்டாளர்களையும் கலவரத்தில் ஆழ்த்தி யுள்ளதாகத் தெரிகிறது. தமது உரிமைக்காக போராடுகிற எந்தவொரு இனமும் சர்வதேச நாடுகள் தமக்கான ஒரு அரசியல் தீர்வினைப் பெற்றும் தரும் என்று வாழாதிருப்பதில்லை. இவ்விடயத்தில் ஈழத் தமிழினம் விதிவிலக்காக இருக்க முடியாது என்ற கற்பிதத்தினையே தற்போதைய நிலவரம் மீள உறுதிப் படுத்தியுள்ளது.

சர்வதேச அதிகார மையங்களின் ஆதரவினை எமக்கு சாதகமாக்கிக்கொள்வது என்பது அவர்களுடைய நிகழ்ச்சித்திட்டத்திற்குள் எம்மை முழுமையாகக் கொண்டு சேர்ப்பது என்பதானவே தற்போதைய தமிழ் அரசியல் தலைமைகள் புரிந்து வைத்திருப்பதாகத் தெரிகிறது. அவை காலனித்துவ மனோபாவத்துடன், அதிகார மையங்களை திருப்திப்படுத்துவதற்காக எமது அரசியல் இலக்குகளில் விட்டுக்கொடுப்புகளைச் செய்யவும் துணிந்துள்ளன. இவ்விடயத்தில் தியாகமும் அர்ப்பணிப்பும் நிறைந்த தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்தையும், மண் ணிற்காக மாண்ட மாவீரர்களையும் கொச்சைப்படுத்துவதற்கும் அவர்கள் தயங்கு வதில்லை. இத்தகையவர்கள் தமிழ்மக்களுக்கு எதனையும் பெற்றுத்தரப்போவ தில்லை என்பது மீண்டும் ஒருமுறை நிருபணமாகியுள்ளது.

தமிழ்ச் செயற்பாட்டாளர்களில் குறிப்பிட்ட தொகையினர் சர்வதேச அரசுகளை நம்பியிருக்க, ஒரு சிறுபகுதியினர் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற வகையில் மேற் குலகத்துடன் முரண்படும் கருத்துகளைக் கூறிவருகின்றனர். பொதுவில் இவர்கள் தாம் வரித்துக் கொண்ட கொள்கைகள் தொடர்பாக நடாத்தப்படும் விவாதங்களைக் கடந்து, ஈழத் தமிழரின் அரசியல் உரிமைகளை பெற்றுக் கொள்ளுவது, அவர்களது பாதுகாப்பினை உறுதி செய்துகொள்வது போன்ற முக்கிய விடயங்களில் ஒரு நீண்ட தூரச் செயற்திட்டத்தினையோ அவ்வாறான திட்ட வரைபு எதனையும் இவர்கள் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

அடிப்படைக் கொள்கைடிவிடயங்களில் உறுதியாக இருப்பவர்களும் அவ்வப் போது நடைபெறும் சம்பவங்களுக்கேற்ற பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அமைப்புகளாகவும், சம்பிரதாயபூர்வமான நிகழ்வுகளை நடாத்துபவர்களாகவும் தங்களது செயற்பாட்டுத்தளத்தினை குறுக்கிக் கொண்டுள்ளனர்.

இந்நிலையில், இருக்கும் மட்டுப்படுத்தப்பட்ட வலுவினை விரையம் செய்யாது தமிழ் மக்களின் விடுதலைக்கான நீண்டகாலச் செயற்திட்டம் பற்றிய விடயங்களில் தமிழ் அமைப்புகளும் செயற்பாட்டாளர்களும் கவனம் செலுத்துவது அவசியமாகிறது.

## ஒரு பேப்பர்

*வணக்கம் !*

*ஈழத்துக் கலைஞர்களில் தனக்கெண்டு ஒரு இடத்தைப் பிடித்துக்கொண்ட கே. எஸ். பாலசந்திரன் என்கிற பாலா அண்ணை பெப்பிரவரி இருபத்தியாறாம் திகதி தவறி விட்டார் எண்டதை கேள்விப்பட்டிருப்பியள். தனது வாழ்க்கை அனுபவத்தை அவரின்ரை முசுப்பாத்தியளோடை* ***ஒரு பேப்பர்*** *ல் 'கடந்தது நடந்தது' எண்டு ஒரு பத்தியை எழுதி வந்தை முந்திப்பிடிச்சு* ***ஒரு பேப்பர்*** *ஐ வாசிக்கிற ஆட்கள் அறிஞ்சிருப்பியள். அவரது அனுபவக் கட்டுரைக்காகவே* ***ஒரு பேப்பர்*** *ஐ தேடி வாசித்தவர்கள் ரொறொன்ரோவிலும், இலண்டனிலும் இருந்தார்கள். இடையில் அவருக்கு கடும் சுகயீனம் வந்ததாலை எழுதிறதை நிப்பாட்டிடார். அந்தத் தொடர் பிறகு 'நேற்றுப் போல இருக்கிறது' எண்டு புத்தகமாக வந்தது.*

*பாலா அண்ணை* ***ஒரு பேப்பர்*** *ல் எழுதிறதிறக்கு ரைட் எண்டு சொன்னபோது நாங்கள் அடைஞ்ச மகிழ்ச்சிக்கு அளவில்லை. ஏனெண்டால் அப்பவெல்லாம்* ***ஒரு பேப்பர்*** *ல் எழுதிறதுக்கு பிரபலமானவர்கள் பின்னடித்தார்கள். தங்கடை விற்பன்னத்தை காட்டுறதுக்கு இது சரியான இடமில்லையெண்டு அவர்கள் நினைத்திருக்கக் கூடும். அப்படி முன்னுக்கு வந்த ஒரு சிலரும், விமர்சனங்களுக்கு முகம் குடுக்க முடியாமல் ஒண்டு இரண்டு பேப்பரோடை ஓடிட்டினம். ஆனால் தொடர்ந்து எழுதியவர்கள் இரண்டுபேர் ஒராள் சிவநாயகம் ஐயா, மற்றவர் பாலா அண்ணை. இப்ப இரண்டு பேருமே எங்களுடன் இல்லை.*

*பாலா அண்ணை தனிய எழுத்திலையும், நடிப்பிலையும்தான் கலகலப்பாயிருப்பார் எண்டில்லை அவருடன் பேசுவதும் பம்பலாக இருக்கும், நேரம் போவது தெரியாது. ஆட்களை மகிழ்ச்சியாக வைத்திருக்கிறது அவருடன் கூடப்பிறந்தது. போயிட்டு வாங்கோ பாலா அண்ணை.*

*எங்களுக்கு ஆக்கங்களை அனுப்பிப்போட்டு உடனையே பேஸ்புக்கில் அல்லது உங்கடை வலைப்பதிவுகளில் தரவேற்றுகிற ஆட்களுக்கு ஒண்டைச் சொல்லோணும். இப்பிடியான ஆக்கங்களை பிரசுரிக்கிறதிலை நாங்கள் அதிகம் அக்கறைப்படுறதில்லை. ஏனெண்டால் இவை ஏற்கனவே வெளிவந்துவிட்டவையாகத்தான் நாங்கள் பார்க்கிறோம்.*

*ஒரு பேப்பரிலை கலை, இலக்கியம், மாற்று சினிமா போன்ற விசயங்கள்பற்றி அதிகம் ஆக்கங்கள் வாறதில்லைத்தான். இந்த விசயங்களில் எங்களுக்கு அக்கறை இல்லையெண்டில்லை ஆனால் ஆக்கங்கள் வாறது குறைவாக இருக்கிறது. நீண்ட கட்டுரைகளாகவோ அவை திறனாய்வுப் பாணியில் இருக்க வேணும் எண்டதோ அவசியமில்லை. உங்களுக்கு மனசிலை படுகிறதை வழமையான தமிழில் எழுதி அனுப்பினாலே போதுமாயிருக்கும்.*

*லண்டனில் இயங்கும் சில ஊடக நிறுவனங்களுடன் இணைந்து இந்த மாசம் 29ம் திகதி நடைபெறவுள்ள குறும்படவிழாவுக்கு* ***ஒரு பேப்பர்*** *ஆதரவு வழங்குகிறது. இந்த விழாவில் கலந்து கொண்டு எமது கலைஞர்களை ஊக்கப்படுத்துவியள் எண்டு நம்பிறம்.*

*வேறை என்ன சந்திப்பம்....*

***ஒரு பேப்பர்*** *காரன்கள் + காரிகள்*

# An international investigation is long overdue



'Tamil Guardian' Editorial

As the armed conflict on the island of Sri Lanka drew to an end in May 2009, over 70,000 Tamils were massacred in what has since been acknowledged as gross violations of international law, with the Sri Lankan government overwhelmingly responsible for the mass slaughter. Almost five years since, no one has been brought to account, over 140,000 Tamils remain unaccounted for, and the repression of Tamils who remain in the North-East, now living under effective military occupation by a virtually ethnically pure Sinhala military, is intensifying. No sooner did the fighting cease in 2009, than did Tamils, along with international NGOs, begin calling for an international independent investigation. Sri Lanka cannot investigate itself: the allegations are too grave, and the state's record on providing justice to the Tamils too abysmal for any internal inquiry. Indeed, as the High Commissioner for Human Rights Navi Pillay noted in her report released last month, the Sri Lankan government has failed to credibly investigate any allegations. As the 25th session of the UN Human Rights Council commences in Geneva today, looking set to see the third Sri Lanka-specific resolution in as many years, meaningful international action towards justice and accountability is yet to be seen, whilst impunity catalyses on-going abuses. A resolution calling for an international commission of inquiry is long overdue.

Sri Lanka, as it has persistently sought to do, will attempt to block any avenues to justice for the Tamil people. Its cries of 'foreign interference' and 'imperialism', together with its liaisons with equally unscrupulous states, are disingenuous efforts to stall concerted international action. It is the Tamil people, abroad and at home, that have led the calls for an independent, international investigation, arguing that what took place in 2009 and what continues to unfold in the Tamil homeland of the North-East, is a genocide. This was the resounding mandate given by the Tamil people to the TNA during their landslide provincial council election victory last year and was duly reflected by the Council's passing of a resolution calling for precisely that. It is also the unanimous call by Tamil politicians, activists and civil society in the North-East and the world over. As the session begins today, there is no doubt that the Tamil people, together with Tamil voices in Tamil Nadu in India, international NGOs, and an increasing number of member states, want to see genuine accountability through an international investigation.

The overwhelming and vehement rejection of any such resolution by Sinhala polity, media, judiciary and the wider public highlights the deepening ethnic polarisation taking place on the island. Indeed, in recent weeks, it is plainly evident that Tamil unity on the need for a resolution calling for an international investigation, is well matched by Sinhala unity on a rejection of it. Whilst Tamils debate how to make such a call stronger, including looking into the crime of genocide and increasing the mandate for international intervention in order to provide immediate relief to Tamils in the North-East, the prevailing Sinhala discourse is on how best to deflect, stall or weaken any investigation, with government and opposition parties putting aside their differences to work together on this common goal of safeguarding the state from foreign scrutiny. This deepening divide underscores why nothing short of an international, and therefore truly independent process will be able to satiate the desire for accountability and justice, which is central to any future peace or stability on the island.

It is worth reflecting, that in this fifth year of 'peace', as states look to draft and agree on the details of a resolution this session, reports of intimidation, sexual violence, abductions and killings of Tamils by the Sri Lankan military remain the order of the day. Tamil resentment at this is rising. Defying government threats and intimidation, Tamils in the North-East, have been vociferous in their call for international action, and in their condemnation of what they deem is the Sri Lankan state's on-going genocidal activities through coercive birth control and militarised colonisation of Tamil lands. Just last month, the Northern Provincial Council passed a resolution condemning the ongoing ethnic reconfiguration of the North-East. Yet the state's machinery continues with its onslaught on the Tamil people. Without decisive international action, Sri Lanka's crisis will deepen and intensify, and as the International Crisis Group (ICG) concluded in its briefing note released last week, without such action, there is a risk of renewed conflict.

It is in this context of mass atrocities, impunity and simmering crisis on the island, that the UNHRC member states will meet over the next four weeks to discuss what to do with Sri Lanka. Having established in the international arena that Sri Lankan government has proved itself unwilling to credibly investigate the allegations, most recently through the High Commissioner's report, there can be no compromising on the mechanism of international inquiry needed to ensure accountability and delivery of justice. There is no grey when accounting for mass atrocities on this scale. Justice is either pursued and delivered in its entirety, or it has not been sought at all, and impunity is left to reign supreme. Anything short of a robust international mechanism with a mandate to enforce, impose and carry out an investigation into crimes that occurred during the armed conflict as well as crimes that continue to take place today, and ultimately deliver concrete avenues of justice based on its findings, is a green light to the Sri Lankan state to continue rolling out Sinhala hegemony across the Tamil territory. A resolution, inclusive of the establishment of a Commission of Inquiry is a crucial step, not only in advancing accountability, but also in restoring in Tamils' much worn faith that the international community can ensure and safeguard a just and peaceful future for them.

# The West's Draft Resolution: Reject Or Engage?



**By : Dayan Jayatilleka**

If (and only if) the 'leaked' draft of the US-UK resolution, scooped by the website Colombo Telegraph, is accurate, it represents both a trap and a last best chance for Sri Lanka. The purported draft does not call for an INTENATIONAL independent inquiry. It calls for an independent and credible inquiry. More accurately it calls upon the Government of Sri Lanka to institute such an inquiry. If the Government fails to do so, the draft resolution points to the 28th session as the moment when the international inquiry will be triggered.

Thus the Western draft resolution is very smart. It takes a step back in order to take two steps forward. It seeks to occupy the moral high ground, by holding the international inquiry in reserve for the moment while calling for an independent and credible inquiry.

> if the Sri Lankan government representatives nit–pick and stonewall, then there will be far fewer votes

One may speculate as to the reasons for the Western sidestep, but it amounts to a skilful manoeuvre; a flanking move. It is possible that the US-UK has recalibrated so as to bring the Geneva prong of their strategy more in line with a viable political endgame. The inclusion of an explicit reference to the 13th amendment and political reconciliation with the Northern Provincial Council and its Chief Minister may indicate India's moderating hand behind the scenes, in exchange for the inclusion of references to devolution, or it could be the West's attempt to secure Japan's, India's and South Africa's support in the Council by adopting this more graduated escalatory approach rather than go in for a 'Big Bang' as the Diaspora and civil society activists called for. The references to issues of governance, human rights and coercion of religious and ethnic minorities also indicates an astute 'thickening' of the West's resolution and therefore a broadening of its appeal internationally as well as within Sri Lanka, rather than a ' thin' uni-dimensional, single issue focus of an international inquiry into war crimes allegations.

The draft resolution puts the ball squarely in the moral court of the Sri Lankan government. The threat to Sri Lanka does not reside so much in the text of the draft resolution itself but rather in the possible— or probable— 'rejectionist' response of the Sri Lankan government.

If the Sri Lankan government rejects the draft out of hand, it will fall into the trap set for this country. This draft, which holds back the term international, is capable of getting quite a few votes more than a resolution which would have called for an international inquiry. If the Sri Lankan government rejects this draft which seems reasonable and moderate, certainly on the face of it; if the Sri Lankan government representatives nit–pick and stonewall, then there will be far fewer votes for Sri Lanka than there would otherwise be.

Many states occupying the middle ground, which might have had misgivings about an intrusive international inquiry, will have very little problem in voting for this draft.

If the Sri Lankan side rejects it frontally, then the margin of victory for the US-UK will be greater and the margin of defeat for the Sri Lankan side much wider, than it otherwise would have been.

How then should Sri Lanka respond? The draft takes the moral high ground. Sri Lanka must try at the least to share that moral high ground. The worst thing for Sri Lanka to do would be to relinquish the moral high ground by rejecting the draft in its totality and basing our argument on the concept of the 'purely domestic', 'purely internal' or 'purely national'— a concept which has no place in the United Nations or in the global reality of the 21st century.

If one can win the majority of votes one need not negotiate with a text that is critical. However, Sri Lanka has placed itself in such a situation that victory is hardly likely. Thus it is prudent to engage, negotiate, and demonstrate flexibility.

Sri Lanka must try to draw this game by sharing the moral high ground which the Western draft resolution seeks to occupy and monopolize. This can be done by engaging with the text and attempting to influence it. This cannot be done by Sri Lanka alone and must not be attempted by Sri Lanka alone. It is always better to move as part of a broad front.

> It also contains tendentious statements such that which alleges that the demonstrators at Weliweriya attempted to seize the weapons of the soldiers! The UK-US draft resolution, shorn of the call for an intrusive INTERNATIONAL inquiry, is much smarter; far better targeted. It is also not morally repugnant in any obvious sense

The current Sri Lankan regime's notion of self sufficiency verges on isolationism. By stark contrast, even when Sri Lanka had accumulated an overwhelming preponderance of forces at the UN Human Rights Council in May 2009 at the special session, it chose at a certain point of the process, to shift gear, to move to the next level and to interface with the West not as a single sovereign state, but with the support of the Quartet, comprising the then Chairperson of the Non Aligned Movement ( Cuba) , the incoming Chairperson ( Egypt), and Sri Lanka's two most important neighbours (India AND Pakistan). Thus the profile presented by our negotiating team was 'Sri Lanka Plus' — that is, Sri Lanka plus the Quartet.

> Engage means do not reject. It means converse constructively. It means struggle against the negative aspects but converge with the positive and strive for a synthesis

Today, in March 2014, we are on the defensive. We should engage with the UK-US draft text through the mediation of our friends in the Council, belonging to regional and cross regional groupings, such as the Non Aligned group, the Asian Group, the Organization of the Islamic Conference (OIC) and the Group of Like Minded states.

Engage means do not reject. It means converse constructively. It means struggle against the negative aspects but converge with the positive and strive for a synthesis. Working with the Office of the High Commissioner even to the extent of making it a minority shareholder as it were, is far better than having to accept an international inquiry the next time round, at the 28th session of the UNHRC. However, the relationship with the High Commissioner's Office has to be negotiated. Here our friends in the UNHRC can help us hammer out a better equation than suggested in the US-UK draft resolution.

Let me be brutally frank. A comparison of the UK-US draft resolution as has been leaked, and the official Sri Lankan government response to the Navi Pillay report, does not place Sri Lanka in a favourable position. The Sri Lankan response to Navi Pillay is one of stonewalling and simple denial on all counts.

It also contains tendentious statements such that which alleges that the demonstrators at Weliweriya attempted to seize the weapons of the soldiers! The UK-US draft resolution, shorn of the call for an intrusive INTERNATIONAL inquiry, is much smarter; far better targeted. It is also not morally repugnant in any obvious sense.

> The threat to Sri Lanka does not reside so much in the text of the draft resolution itself but rather in the possible— or probable— 'rejectionist' response of the Sri Lankan government.

The plain truth is that if the leaked draft is accurate, the international inquiry has been substituted by the call for a credible independent inquiry— which is a reiteration of the injunction of our own Lessons Learnt and Reconciliation Commission (LLRC)—and the US-UK call at this point of time is for us to clean up our act. Sri Lanka would be a better place if the Government constructively engaged and cooperated with this call.

That is quite distinct from either capitulation to an intrusive inquiry or entering a confrontation in which we shall demonstrate our growing international isolation by polling fewer votes in the Council or losing by a larger margin than we did twice before. The third time isn't the charm.

*Courtesy: Colombo Telegraph*

ஒரு பேப்பர் உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

**BBK Partnership**
Croydon.................. 020 8150 9950

**Meera Arnold & Co**
Southgate............... 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]
Peter Jesudasan [Rayners Park]
T.Selvaratnam [Wembley]

**இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.**

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: **ORU PAPER Ltd**
Bank: **HSBC**
A/C: **02211556**
S/C: **40-07-04**

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள்
யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:

பிரித்தானியா
அ.இரவி - மணி - அகிலன்
மாதவன்

கனடா
தயா - அரவிந்தன் - சிந்து

பொறுப்பாசிரியர்
- கோபி -

மக்கள் தொடர்பு
சோபனா அருந்தவச்செல்வம்

விளம்பரம்
சோபனா - அஜந்தா

அச்சு
தர்சினி (கனடா) - சுகன்யா

வடிவமைப்பு
மயூ - யுகன்

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா - சாரங்கன்

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
சோபனா அருந்தவச்செல்வம்

வழங்கல்
உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்

உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850

தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855

ஆக்கங்கள் மற்றும்
அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP

மின்னஞ்சல்:
info@orupaper.com
இணையம்:
www.orupaper.com

*'Oru Paper' is a bi-lingual paper published from London by Oru Paper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# சர்வதேச விசாரணையும் அமெரிக்காவின் ஏமாற்றுத்தனமும்

**உமர் (மே 17 இயக்கம்)**

அமெரிக்கா தீர்மானங்கள் கொண்டு வருவதற்கு முன் நடந்தேறிய சில நகர்வுகள்.

2009ல் இனப்படுகொலை அரங்கேறி முடிந்த சில நாட்களில், மே 26, 2009 அன்று ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தில், அதனுடைய தலைவர் நவிப்பிள்ளை இலங்கை மீது சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கூறினார். அதனை தொடர்ந்து ஐ.நா.வின் தலைமை அலுவலகத்தில் ஜுன் மாதம் தொடங்கி பல்வேறு கூட்டங்கள் நடைபெற்றன. அப்பொழுது பேசிய பல்வேறு ஐ.நா. அலுவலர்களும் பல விஷயங்களில் ஒத்த கருத்தைக் கொண்டிருந்தனர். அந்தக் கூட்டங்களில் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விஷயங்களாக இருந்தவற்றுள் சில.

- இலங்கையின் கடந்தகால உள்நாட்டு விசாரணைச் செயற்பாடுகள் இலங்கை அரசை உண்மையான பொறுப்புதாரியாக அடையாளம் காட்டவில்லை.
- இலங்கையில் ஐ.நா. செயற்படுவதற்கான போதிய அரசியல் வெளி அளிக்கப்படவில்லை.
- நீதி மற்றும் விசாரணை தொடர்பான விஷயங்களில் ஐ.நா.வின் திட்டமிடலுக்கும், வழிகாட்டலுக்கும் தேவையான அறிக்கையினை மனித உரிமை கமிஷன் தயாரிக்க வேண்டும்.

ஐ.நா.வின் சட்ட விதி 99ன் படி, இலங்கை மீது சர்வதேச விசாரணைக்கு உத்தரவிடும் அதிகாரம் பொதுச் செயலாளருக்கு (பான்-கி-மூன்) இருக்கின்றது என்று சட்டத்துறை அதிகாரிகள் கருத்து தெரிவித்தனர். (சமீபத்தில் சிரியாவில் சர்வதேச விசாரணைக்கு உத்தரவிட்ட பான்-கி-மூன் விதி 99 ன் அடிப்படையில்தான் செயலாற்றினார். இந்த விதியின் கீழ் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு சர்வதேச நாடுகள் எதிர்ப்பு தெரிவிக்க முடியாது. அந்த நடவடிக்கை நடந்தேறும்.)

ஜுன் 23, 2009, அன்று முடிவுற்ற அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் நவிபிள்ளை தலைமையிலான மனித உரிமை கவுன்சில், இலங்கை மீது சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கூறியது. ஜுலை 30, 2009 அன்று ஐ.நா.வின் தலைமை அலுவலகத்தில் கூடிய கூட்டத்தில் பான்-கி-மூன் சர்வதேச விசாரணையை ஒட்டு மொத்தமாக நிராகரித்தார். உள்நாட்டு விசாரணைக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு தேவையான அரசியல் வெளியை இலங்கை அரசுக்கு நாம் வழங்க வேண்டும் என்று கூறினார். அதாவது குற்றவாளி தன்னைத்தானே விசாரித்து தனக்குத்தானே தண்டனை அளித்துக்கொள்ளும் ஒரு புதுமையான திட்டத்தை முன்வைத்தார். (சர்வதேச விசாரணையை முதலில் தடுத்து நிறுத்திய பான்-கி-மூனுக்கு இந்தியத் தொடர்பு உண்டு. பான்-கி-மூனின் மருமகன் சித்தார்த் சாட்டர்ஜி, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை கொல்வதற்காக அனுப்பப்பட்ட இந்திய அமைதிப்படையின் பிரிவில் இருந்த ஒரு ராணுவச் சிப்பாய்.)

அதற்கு பிறகு ஐ.நா.வில் மூவர் குழு என்னும் பெயரில் நிபுணர்கள் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழு தனது அறிக்கையினை 2011 மார்ச் இறுதியில் வழங்கியது. அந்த அறிக்கையின் முதல் பரிந்துரையாக இலங்கை மீது சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கூறியது. மேலும் இலங்கை அமைத்த LLRC என்னும் விசாரணை ஆணைக் குழு நேர்மையானது இல்லை என்று தெரிவித்தது. இந்த அறிக்கை வெளியான பின்பு ஐ.நா.வின் குழுச் செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக தொராயா ஒபைத் என்பவரை நியமித்தார்கள். ஆனால், அவர் அந்த ஆண்டு இறுதி வரை தனது வேலையைத் தொடங்கவில்லை. பிறகு அந்தப் பணி, சார்லஸ் பெட்ரி என்பவருக்கு மாற்றப்படும் சூழல் உருவாகியது. அப்பொழுதுதான் 2012 மார்ச் மாதம் அமெரிக்கா ஒரு தீர்மானத்தை முன்வைக்கின்றது.

ஐ.நா.வின் நடைமுறைகளின் படி அதனுடைய மட்டத்தில் சர்வதேச விசாரணையைப் பற்றிய விவாதங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்தச் சூழலில் அமெரிக்கா டுடுசுஊ அடிப்படையிலான உள்நாட்டு விசாரணைக் கோரி ஒரு தீர்மானத்தினை முன்வைக்கின்றது. அதாவது, உச்சநீதிமன்றத்தில் வழக்கை நடத்துவதைப் பற்றி தன்னிச்சையாக உச்சநீதிமன்றமே முன்வந்து செயலாற்றும்போது, உச்சநீதிமன்றத்தில் வழக்கு நடத்த வேண்டாம் கட்டப்பஞ்சாயத்து செய்து இதனை முடித்துக் கொள்ளலாம் என்று கூறுவதைப் போல்தான் அமெரிக்காவின் இந்த நடவடிக்கை அமைகின்றது. இது போன்ற நிகழ்வு என்பது, குற்றவாளியை பாதுகாப்பதற்கான ஒரு நகர்வே அன்றி குற்றவாளியை தண்டிப்பதற்கோ அல்லது பாதிக்கப்பட்டவனுக்கு நீதி, நிவாரணம் வழங்குவதற்கோ மேற்கொள்ளப்பட்ட நகர்வு அல்ல.

கடந்த இரண்டு ஆண்டுகளாக அமெரிக்கா முன் வைக்கும் தீர்மானங்கள், ஐ.நா.வே முன்வந்து ஒரு சர்வதேச விசாரணையை நடத்திவிடக்கூடாது என்பதற்காக, உள்நாட்டு விசாரணையை வலியுறுத்தி முன் வைக்கப்படுவதாகவே இருக்கின்றது. இப்படிப்பட்ட தவறான உள்நோக்கங்களைக் கொண்ட அமெரிக்கா, இந்த ஆண்டும் ஒரு தீர்மானத்தினை முன்வைக்கின்றது. இந்தத் தீர்மானத்தின் வரைவு இப்போது வெளியாகியுள்ளது. அதற்கு முன்னதாக, சில வாரங்களுக்கு முன்னர், ஐ.நா. மனித உரிமைகள் மன்றத்தின் உயர் ஆணையாளர் நவநீதம் பிள்ளை அவர்கள் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், மனித உரிமை மன்றத்திற்கு சர்வதேச விசாரணைக்கான பரிந்துரையினை வழங்கியுள்ளார். இந்த அறிக்கை மார்ச் 25 ம் தேதி அன்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது. இந்த பரிந்துரையும் கூட தமிழர்களுக்கான முழுமையான தீர்வினை வழங்கவிட்டாலும், இந்த அறிக்கையினை குப்பைக் கூடைக்கு அனுப்பும் வேலையினைத்தான் அமெரிக்காவின் இந்த ஆண்டிற்கான தீர்மானம் செய்கின்றது. இலங்கைத்தீவு விவகாரத்தில் சிறு விஷயம்கூட நடைபெற்றுவிடக்கூடாது என்பதற்காகவே இந்தத் தீர்மானம் முன்வைக்கப்படுகின்றது. மீண்டும் சர்வதேச விசாரணைக்கான குரல் எழும்பியவுடனே, உள்நாட்டு விசாரணையை வலியுறுத்தி ஒரு தீர்மானம் முன்வைக்கப்படுகின்றது.

இன்னும் எத்தனை ஆண்டுகளுக்குத்தான் அமெரிக்கா இது போன்ற வெற்றுத் தீர்மானங்களை முன்வைக்கும்? எல்லாம் வரும் ஆகஸ்ட் 31 வரை தான். அன்றுடன் நவி பிள்ளை ஓய்வு பெறுகின்றார். அதனால், அதற்கு பின்பு அந்தப் பதவிக்கு பான்-கி-மூனை போன்ற அமெரிக்காவின் கைப்பாவை நியமிக்கப்பட்டு, ஈழ விவகாரம் சர்வதேச அளவில் ஒட்டுமொத்தமாக ஊற்றி மூடப்படும்.

ஒரு விடயத்தை இரு வேறு விதமாக பார்ப்பதில் தவறில்லை, அனால் மற்றவர் வாதங்களையும் ஆராய்ந்து சீர்தூக்கி பார்த்தால் தான் ஆரோக்கியமாக இருக்கும்.

# வாழ்ந்து படிக்கும் பாடங்கள்

## உண்மையான அமைதி

ஒரு தாவோ கதை. டெரெக் லின் என்ற தாவோ அறிஞர் சொன்னது...

ஒரு சக்கரவர்த்தி தன் அன்றாட வேலைகளைச் செய்வதில் முழு கவனத்தோடு ஈடுபட முடியாமல் தவித்தார். உள்நாட்டுப் பிரச்சினைகள், வெளி நாடுகள் மூலம் பிரச்சினைகள், நிர்வாகப் பிரச்சினைகள், குடும்பப் பிரச்சினைகள், அவ்வப்போது முடிக்க வேண்டியிருந்த அவசர வேலைகள் என பல விஷயங்களை அவர் கவனிக்க வேண்டி இருந்தது. முழு கவனத்தோடு எல்லா அம்சங்களையும் ஆராய்ந்து ஒவ்வொரு பிரச்சினையையும் அணுகி தீர்க்க வேண்டி இருந்தது. அதற்கு மன அமைதி முக்கியத் தேவையாக இருந்தது. மன அமைதி இல்லாத போது எதிலும் முழுக் கவனம் செலுத்துவது முடியாத காரியமாக இருந்தது.

இந்த சிக்கலை எப்படித் தீர்ப்பது என்று ஆலோசித்தவர் தன் மந்திரியை அழைத்துச் சொன்னார். "தினசரி நாலா பக்கங்களில் இருந்தும் நான் கவனிக்க வேண்டிய வேலைகளும், பிரச்சினைகளும் வந்த வண்ணம் இருக்கின்றன. அந்த நேரங்களில் அவற்றைச் சரியாகக் கையாளத் தேவையான அமைதி இல்லாமல் தவிக்கிறேன். அதனால் அந்த நேரத்தில் பார்த்தவுடன் அமைதி கிடைக்கும் ஏதாவது ஓவியம் என் முன் இருந்தால் அதைப் பார்த்து நான் என் அமைதியை மீட்டுக் கொள்ள முடியும் என்று நினைக்கிறேன். நம் நாட்டில் உள்ள ஓவியர்களில் சிறந்த ஓவியரைத் தேர்ந்தெடுத்து உண்மையான அமைதி என்ற தலைப்பில் எனக்காக ஒரு ஓவியம் வரையச் சொல்லுங்கள் "

மந்திரி நாட்டில் உள்ள தலை சிறந்த ஓவியர்களைப் பற்றி விசாரித்தார். மூன்று ஓவியர்களைத் தேர்ந்தெடுத்தார். மூவரும் மிக நல்ல ஓவியர்கள் எனப் பேரெடுத்தவர்கள். அவர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுப்பது கடினமாக இருந்தது. அரசரிடம் அதைச் சொல்ல அரசர் மூவரிடமும் ஓவியம் வரையச் சொல்லலாம் என்றும் அந்த மூன்று ஓவியங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம் என்றும் சொன்னார்.

மூன்று ஓவியர்களும் அரண்மனைக்கு வரவழைக்கப் பட்டார்கள். அரசரின் தேவை அவர்களுக்குச் சொல்லப்பட்டது. மூவரும் அரண்மனையில் இருந்தபடியே 'உண்மையான அமைதி' என்ற தலைப்பில் ஓவியம் வரைய ஆரம்பித்தனர். அவர்கள் வரைந்து முடித்த பின் அரசரும் மந்திரியும் ஓவியங்களைப் பார்வையிட வந்தனர்.

முதல் ஓவியம் மலைகள் சூழ இருந்த அமைதியான பெரிய குளத்தினுடையதாக இருந்தது. மிக அமைதியான ஒரு சூழ்நிலையை அந்த ஓவியம் வெளிப்படுத்தியது.

இரண்டாவது ஓவியம் பனி மழை பெய்து முடிந்த பின் அமைதியாக இருந்த பனி மலையினுடையதாக இருந்தது. சத்தங்களும் உறைந்து போனது போன்ற பேரமைதியான ஒரு சூழ்நிலையை அந்த ஓவியம் சித்தரித்தது.

மூன்றாவது ஓவியம் ஒரு பெரிய நீர்வீழ்ச்சியுடையதாக இருந்தது. அதைக் கண்டதும் மந்திரி சொன்னார். "நாம் சொன்னதை இந்த ஓவியர் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை போல இருக்கிறது. இதை விட்டு விட்டு முதல் இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம்"

"ஒரு நிமிடம் பொறுங்கள்" என்ற சக்கரவர்த்தி அந்த ஓவியத்தை சிறிது ஆராய்ந்து விட்டு "இந்த ஓவியம் தான் நான் எதிர்பார்த்தது" என்று சொல்ல மந்திரிக்கு குழப்பமாக இருந்தது. சக்கரவர்த்தி சொன்னார். "இந்த ஓவியத்தில் நீர்வீழ்ச்சி பிரதானம் அல்ல. நன்றாகப் பாருங்கள்" மந்திரி நிதானமாக அந்த ஓவியத்தை ஆராய்ந்தார். அந்த நீர்வீழ்ச்சிக்கு அருகில் ஒரு மரம் இருந்தது. அந்த மரத்தின் ஒரு கிளையில் இருந்த கூட்டில் ஒரு பறவை அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தது.

சக்கரவர்த்தி சொன்னார். "பக்கத்தில் அத்தனை இரைச்சல் இருந்தாலும் அதனால் பாதிக்கப்படாமல் உறங்கிக் கொண்டிருக்கும் அந்த பறவையிடம் உண்மையான அமைதி இருக்கிறது. இதைத் தான் நான் எதிர்பார்த்தேன்" அந்த ஓவியமே அரசர் பார்வையில் இருக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

இந்தக் கதையில் மிக ஆழமான பொருள் இருக்கிறது. அந்த சக்கரவர்த்தியின் நிலையில் தான் நாமும் இருக்கிறோம். கடமைகளும், வேலைகளும், சரி செய்ய வேண்டிய பிரச்சினைகளும் தினமும் நம்மை அணுகிய வண்ணம் இருக்கின்றன. அமைதியுடனும் கவனத்துடனும் செய்தால் வாழ்க்கை சிறப்பாகவும், நிறைவாகவும் இருக்கும். ஆனால் பல சமயங்களில் அப்படிச் செய்ய முடியாமல் தடுமாறிப் போகிறோம். சக்கரவர்த்தியைப் போலவே நமக்கும் எல்லாவற்றையும் சமாளிக்க அமைதி தேவைப்படுகிறது.

எது போன்ற அமைதி வேண்டும் என்று தேடும் போது தான் மூன்று வகை அமைதிகள் மூன்று வகை ஓவியங்களின் மூலம் சொல்லப்பட்டுள்ளன.

குளத்தின் அமைதி கண்ணுக்கும் கருத்துக்கும் இனிமை தான். ஆனால் குளம் மேற்பார்வைக்குத் தான் அமைதியாக உள்ளதே ஒழிய அதன் அடியில் எத்தனையோ நீரோட்டங்களும், அமைதியின்மையும் இருக்க வாய்ப்புண்டு. அந்த புறா அமைதி மட்டும் நமக்குப் போதுமானதல்ல என்பதால் அது தேர்ந்தெடுக்கப் படவில்லை. பனிமலையின் அமைதி குளத்தின் அமைதியை விட உத்தமமானது. அதன் உள்ளேயும் அமைதி தான். ஆனாலும் அந்த அமைதியும் தற்காலிகமானது. அந்த தொடர் நீர்வீழ்ச்சியைப் போல அன்றாட வாழ்க்கையில் செய்ய வேண்டியது நிறைய இருந்து கொண்டே இருக்கிறது. அது ஓய்வதில்லை. அந்த வேலைகளுக்கு இடையேயும், அந்தப் பறவையின் அமைதியான உறக்கம் போல, நம் உள் மனம் அமைதியாக இருக்குமானால் அதை விடப் பெரிய சாதனை வேறெதுவும் இருக்க முடியாது.

- என்.கணேசன்

# மேற்குலகின் எதிர்பார்ப்புகளும், தமிழர்களின் ஏமாற்றமும்



ஹாட்லிக் கல்லூரியின் புதிய விடுதி திறப்பு விழாவில் டக்ளஸ், சந்திரசிறி, சிறிகரன், விக்னேஸ்வரன்

**கோபி**
*ஒரு பேப்பர்*

ஐ.நா. மனிதவுரிமைச் சபையின் இருபத்தைந்தாவது கூட்டத்தொடரில் அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய இருநாடுகளும் கூட்டாகக் கொண்டுவரவிருக்கும் தீர்மானத்தின் வரைபு ஒன்றின் நகல் இவ்வாரம் கசியவிடப்பட்டது. இத்தீர்மான வரைபின் பங்காளிகளாக மொன்ரனீக்ரோ, மசடோனியா, மொரிசீயஸ் ஆகிய நாடுகளும் உள்ளதாக இவ்வாவணத்தில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், இது பெரும்பாலும் முன்னைய இருநாடுகளின் கூட்டுத் தீர்மானமாக அமைந்திருக்கிறது என உறுதியாகக் கூறமுடியும். கூட்டத்தொடரின் இறுதி நாட்களில் இத்தீர்மானம் கொண்டுவரப்படும்போது இவ்வரைபில் காணப்படும் வார்த்தைப் பிரயோகங்களில் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டலாம். ஆனால் அதன் அடிப்படை சாராம்சம் பெரும்பாலும் இவ்வரைபை ஒட்டியதாகவே அமையும் என எதிர்பார்க்க முடியும்.

'ஜெனிவா ஒரு போர்க்களம்' எனவும் இம்முறை அங்கு 'சர்வதேச சுயாதீன விசாரணை' யைக் கோரும் தீர்மானம் கொண்டுவரப்படும் என்ற எதிர்பாரப்பிலிருந்தவர்களுக்கு மேற்படி வரைபு ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கும் என்பதில் ஆச்சரியத்துக்கு இடமில்லை. பிரதமர் டேவிட் கம்ரன் கொடுத்த மார்ச் மாதக் காலக்கெடு தமிழ் மக்களுக்கு இவ்வாறன நம்பிக்கையை வழங்கியிருந்தது. இவ்வரைபு வெளியானதன் பின்னர், கனேடிய தமிழ் கொங்கிரஸ், பிரித்தானியத் தமிழர் பேரவை, உலகத்தமிழர் பேரவை போன்ற புலம்பெயர் தமிழ் அமைப்புகள் இத்தீர்மானம் பற்றிய தமது அதிருப்தியை வெளிப்படுத்தி அறிக்கை வெளியிட்டுள்ளன. ஆனால் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் சுமந்திரன் இவ்வரைபினை வரவேற்றுள்ளதுடன், அவுஸ்திரேலியா இத்தீர்மானத்துக்கு ஆதரவளிக்க வேண்டும் என அங்கு Lobby செய்து வருகிறார். இது தமிழத்தேசியக் கூட்மைப்பின் தலைமையானது அதிகாரமையங்களின் எடுபிடியாகச் செயற்பட்டுவருவதனை மறுபடி ஒருமுறை நிருபிப்பதாக அமைந்துள்ளது.

இலங்கைத் தீவு விடயத்தில் மேற்குநாடுகள் காட்டும் அதி மெத்தனம், தமிழ் மக்களை மட்டுமல்ல சிறிலங்கா அரசாங்கத் தரப்பினரையும் ஆச்சரியத்துக்கு உள்ளாக்கியிருக்கும் என எதிர்பார்க்கலாம். ஏனெனில் மனிதவுரிமைச் சபையின் கூட்டத்தொடர் காலத்தில் வெளித்தரப்புகளிலிருந்து வரும் எதிர்ப்பினை மூலதனமாக வைத்து தனது வாக்கு வங்கியினை நிரப்ப மகிந்த அரசு திட்டமிட்டிருந்தது. இக்கூட்டத்தொடரை வாய்ப்பாகக் கருதியே மேற்கு மற்றும் தெற்கு மாகாண சபைகளுக்கான தேர்தல்களை மார்ச் 29ம் திகதி நடாத்தத் தீர்மானிக்கப்பட்டது என அங்கிருந்து வரும் செய்திகள் தெரவிக்கின்றன. மேற்குலகம் மகிந்த இராஜபக்சவை மின்சாரக்கதிரையில் வைத்து தண்டிக்க முயல்கிறது என்ற எதுவித உண்மையுமற்ற பரப்புரை சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறப் போதுமானது என சிறிலங்கா அரசாங்கம் எண்ணுகிறது. சிங்கள வாக்காளர்களும் இந்த எதிர்பார்ப்பினை பொய்பிக்கப் போவதில்லை என்பதனை கடந்தகால வரலாறு வெளிப்படுத்தி நிற்கிறது. ஆட்சிமாற்றத்தினை விரும்பும் இவ்விடயத்தைக் கவனத்திற் கொண்டு சிறிலங்கா அரசாங்கத்தினை அரவணைக்கும் வகையில் இத் தீர்மானத்தை வரைந்துள்ளது மேற்குலகம். மேற்படி தீர்மானம் சிறிலங்கா அரசாங்கத்தினை விழுத்தும் பொறியாக அமைந்துவிடுமோ என சிங்களத் தேசியவாதிகளே ஐயப்படுமளவிற்கு தீர்மானம் சிறிலங்காவிற்கு சாதகமாக அமைந்துள்ளது.

இனி, மேற்படி தீர்மான வரைபில் குறிப்பிடப்பட்டுள்ள சில முக்கிய விடயங்களைப் பார்ப்போம். இலங்கைத் தீவில் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம், பொறுப்புக் கூறல், மனிதவுரிமைகள் போன்ற விடயங்களில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதே தமது குறிக்கோள் என வரைபில் கூறப்பட்டுள்து. இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. ஏனெனில் போருக்குப் பின்னரான காலத்தில் மேற்குலகின் எதிர்பார்ப்பு இவ்வாறு அமைந்துள்ளதனை, மேற்குலக இராஜதந்திரிகள் வெளிப்படையாகவே தெரிவித்து வருகிறார்கள். சர்வதேச முரண்பாடுகளுக்கான குழு (International Crisis Group) போன்ற சர்வதேச சிந்தனை மையங்களும் இக்குறிக்கோளை ஒட்டியே கருத்துருவாக்கத்தை உருவாக்கி வருவதனை அவை வெளியிட்டுவரும் அறிக்கைகளிலிருந்து அறிய முடிகிறது.

"நாடுகள் பயங்கரவாதத்தினை எதிர்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய அதே நேரத்தில் அந்நடவடிக்கைகள் சர்வதேச சட்டங்கள், சர்வதேச மனிதவுரிமைகள் சட்டம், அகதிகள் தொடர்பிலான சர்வதேசச் சட்டம், குடிமக்களின் அடிப்படை மனிதவுரிமைகள் ஆகியவற்றை பின்பற்றியதாக அமையவேண்டும் என்பதனை இத்தீர்மானம் வலியுறுத்துகிறது" எனத் தீர்மான நகலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது தமிழ் மக்கள் மீது நடாத்தப்பட்ட போரை பயங்கரவாதத்திற்கு எதிரான போராகச் சித்தரிப்பதுடன், அங்கு போர்குற்றங்கள் இழைக்கப்பட்டிருந்தால் விசாரணை நடாத்தப்படவேண்டும் என்பதனைக் குறிப்பதாக அமைந்துள்ளமையை நாம் அவதானிக்கலாம்.

தமிழ் இனம் பற்றிய எந்தவொரு குறிப்பும் இத்தீர்மானத்தில் காணப்படவில்லை என்பது தற்செயலானது என ஒதுக்கிவிடமுடியாது. வடமாகாண சபைக்கும், அதன் முதலமைச்சருக்கும் பதின்மூன்றாம் திருத்தச்சட்ட மூலத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுடன் ஆட்சி செய்வதற்கான வசதியைஸ்ரீலங்கா அரசாங்கம் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுப்பததாக தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. வடக்கில் வாழும் மக்களுக்கு பதின்மூன்றாம் திருத்தச்சட்டத்தில் உள்ள குறைந்தபட்ச அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதனையே மேற்குலகம் அரசியல் தீர்வாக முன்வைத்துள்ளமை தெரிகிறது. கிழக்கு மாகாணசபை பற்றி எதுவும் பேசப்படவில்லை என்பது கவனத்துக்குரியது.

சுருக்கமாகக் கூறுவதானால் போருக்கு பிந்திய காலத்தில் முரண்பாடுகளைக் களைந்து, மீண்டும் வன்முறை தோன்றா வண்ணம் முரண்பட்டவர்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நிலைமாற்றுகால நீதியின் (Transitional Justice) அடிப்படையிலேயே மேற்படி தீர்மானம் அமைந்திருக்கிறது. இவ்விடயத்தில் தம்முடன் ஒத்துழைப்பதற்கு சிறிலங்கா அரசாங்கத்திற்கு மேலும் ஒரு வருடகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு தங்களுடன் ஒத்துழைக்க சர்வதேச விசாரணைக்கான பொறிமுறையினை எதிர்கொள்ள நேரிடும் என்ற எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பிறிதொரு விதமாகக் கூறுவதானால், மேற்கின் பொருளாதார கேந்திர நலன்களையொட்டிய மூலோபாயத்துடன் ஒத்துழைத்து தமது ஒழுங்குக்குள் சிறிலங்கா வரவேண்டும் என்பதனையே மேற்குலகம் எதிர்பார்ப்பது தெரிகிறது.

அமெரிக்க - பிரித்தானிய தீர்மான வரைபினை படித்துவிட்டு, ஒப்பாரி வைக்கிற தமிழ் அமைப்புகளும் மற்றவர்களும், கடந்த சில வருடங்களாகவே, மேற்கின் மேற்படி மூலோபாயத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், அதன் புலம்பெயர் தோழமை அமைப்புகளும் முழுவதுமாக ஒத்துழைத்து வருவதனைக் கவனத்தில் எடுக்கத் தவறிவிடுகின்றனர். அண்மைக்காலமாக கூட்டமைப்பும் அதன் புலம்பெயர் எச்சங்களும், இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம், உண்மையும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு, நிலைமாற்றுகால நீதி போன்ற விடயங்களை உச்சரிக்க ஆரம்பித்துள்ளமை தன்னிச்சையான முடிவு இல்லை என்பதனை நாம் உறுதியாகக் கூறமுடியும்.

மேற்குலகம் எதிர்பார்ப்பது போன்ற நிகழ்வுகள் இலங்கைத் தீவில் நடைபெற ஆரம்பித்துள்ளதான தோற்றப்பாட்டடை ஏற்படுத்தும் முயற்சிகள் ஆங்காங்கே நடைபெற்றுவருவதனையிட்டும், இம்முயற்சிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை தன்னாலான உதவியினை நல்கி வருவதனையிட்டும் தமிழ்ச் செயற்பாட்டாளர்கள் பாராமுகமாக இருந்துவிட முடியாது. அண்மையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியினை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

**வடக்கில் வாழும் மக்களுக்கு பதின்மூன்றாம் திருத்தச்சட்டத்தில் உள்ள குறைந்தபட்ச அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்பதனையே மேற்குலகம் அரசியல் தீர்வாக முன்வைத்துள்ளமை தெரிகிறது.**

அறுபதுகளில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில், அதன் விடுதியில் தங்கியிருந்து படித்த திரு. ஐயன் சிறிகரன் என்பவர் இப்போது ஜேர்மனி ஹம்பேர்க் நகரத்தின் செனட்டர்களில் ஒருவராக உள்ளார். திரு. சிறிகரன் தனது செலவில் புதிய விடுதிக்கான கட்டடத்தைக் கட்டியிருந்தார். கடந்த சனியன்று (மார்ச் முதலாம் திகதி) நடைபெற்ற இக்கட்டடத் திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினர்களாக, வடமாகாணசபையின் ஆளுனர் சந்திரசிறி, முதல்வர் விக்னேஸ்வரன், டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கலந்து கொண்டு ஒரே மேடையை பகிர்ந்து கொண்டனர். ஹாட்லிக்கல்லூரி ஒரு தேசியப்பாடசாலை என்பதனால் அது மாகாண கல்வி அமைச்சின் அதிகாரத்தில் இல்லாமல் மத்திய அரசாங்கத்தின் கீழ் வருகிறது என்பதனை கவனத்தில எடுத்தால் மேற்படி நிகழ்ச்சி வெறுமனே பரப்புரைக்காக ஒழுங்கு செய்யப்பட்ட ஒன்று என்பதனைப் புரிந்து கொள்ள முடியும்.

கல்வி மேம்பாட்டுக்காக புலம்பெயர் தமிழரின் நிதியுதவியில் உருவான ஒரு செயற்திட்டத்திற்கு, சிறிலங்கா அரசாங்கமும், வடமாகாணசபையும் ஆதரவு வழங்குகிறது என்ற தகவல் எத்தகைய செய்தியை வெளிப்படுத்தி நிற்கிறது? தமிழ் மக்கள் இனவழிப்பு உள்ளாகிறார்கள் என்பதனை வெளிப்படுத்துகிறதா? அல்லது இன நல்லிணக்கத்திற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்பதனை வெளிப்படுத்துகிறதா? இக்கேள்விக்கான விடைகளை இக்கட்டுரையை படிப்பவர்களிடமே விட்டுவிடுகிறேன்.

நடைமுறையில் மாகாணசபைக்குரிய குறைந்தபட்ச அதிகாரங்களையே பகிர மறுக்கும் அரசாங்கத்துடன் அடிபணிவு அரசியல் நடாத்திக் கொண்டு, வாக்கு வேட்டைக்காக இனவழிப்பு சர்வதேச விசாரணை எனக்கூறிவரும் சந்தர்ப்பவாத அரசியலை நடாத்துபவர்களை தமிழ் மக்கள் தூக்கியெறியும் காலம் வரும் வரை சிறிலங்காவிற்கு கால அவகாசம் நீடிக்கப்பட்டுவருவதுதவிர்க்கமுடியாதது. இவ்வாறு வழங்கப்படும் காலநீட்சியில் தமிழினம் காணாமல் போய்விடும் மிகப்பெரிய அபாயம் உள்ளதனை தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

**ஒரு பேப்பர்**
**கிடைக்குமிடங்கள்**

**New Malden**

| | |
|---|---|
| Ayngaran | 020 8949 6734 |
| Megaa Superstore | 020 8336 0061 |
| Vaaniyan | 020 8605 0434 |
| Murugan Kovil | 020 8942 4475 |
| Vaishna Superfoods | 020 8399 4488 |
| Stoneleigh Amman | 020 8393 8147 |

**Tooting**

| | |
|---|---|
| Yhaal House | 020 8767 8585 |
| Rainbow Restaurant. | 020 8640 4230 |
| Amman Kovil | 020 8795 4258 |
| Niru Con.Store | 020 8672 3200 |
| Ayngaran | 020 8540 1500 |
| Suvai Aruvi | 020 8543 6266 |
| Adchaya | 020 8540 8192 |

**Croydon**

| | |
|---|---|
| Best Foods | 020 8684 6269 |
| Haran Bros | 020 8686 2552 |
| Chennai dosa | 020 8665 9192 |
| Eelam Video | 020 8664 8351 |
| Spice Land | 020 8667 1700 |

**Lewisham**

| | |
|---|---|
| Chandra | 020 8333 8680 |
| Eelam Shop | 020 8690 6545 |
| Katpagam | 020 8694 8810 |
| AJ Video | 020 8691 8888 |
| Sivan Kovil | 020 8318 9844 |
| KRS | 020 8297 9432 |
| Best Food | 020 8692 9811 |

**Eastham**

| | |
|---|---|
| Seelans | 020 8471 5733 |
| Sakthi Cash & Carry | 020 8394 4560 |
| Murugan Temple | 020 8478 8433 |
| Station Super Store | 020 8503 4711 |
| Best Food | 020 8552 9578 |
| Akilan Enterprise | 020 8548 0033 |

**Ilford**

| | |
|---|---|
| Vinnayagar Kovil | 020 8911 8934 |
| Nathan | 020 8514 1744 |
| Angels | 020 8553 0490 |
| Sri store ltd | 020 8553 7737 |

**Edmonton**

| | |
|---|---|
| New Kannan Stores | 020 8884 4979 |
| Sayas | 020 8805 9529 |
| Nagapoosani Temple | 020 8884 3333 |

**Walthamstow**

| | |
|---|---|
| Vinayagar Kovil | 020 8527 3819 |
| Kumarans | 020 7609 1912 |
| Prabas | 020 8509 3322 |

**Harrow**

| | |
|---|---|
| Tsk food & Wine | 020 7622 4258 |
| Eelavan | 020 8863 6160 |
| Prabhas | 020 8866 0977 |
| South Harrow F&W. | 020 8423 6321 |
| Best foods | 020 8423 9933 |
| Sambal Express | 020 8799 7171 |

**Wembley**

| | |
|---|---|
| Malar Super Market | 020 8795 5797 |
| Ganapathy C & C | 020 8795 4627 |
| Best foods | 020 8900 0100 |
| Vahizan Disc | 020 8795 0648 |

**Ealing**

| | |
|---|---|
| Amman kovil | 020 8810 0835 |

**Greenford**

| | |
|---|---|
| Ambiha | 020 8813 0967 |

**Coventry**

| | |
|---|---|
| Eellakanthan Temple | 02476663554 |

**South hall**

| | |
|---|---|
| Thamilini C & C | 020 8606 9900 |
| Duvaraka C & C | 020 8813 9126 |
| Palm Palace Restaurant | 020 8574 9209 |
| Spicy Palace Restaurant | 020 8574 4087 |
| Luxmys C & C | 020 8571 4599 |
| Tamilan C & C | 020 8561 8174 |
| Lady Margret | 020 8571 4434 |

Most Trusted and Reliable Name in the Trade Since 1985




# GlenCarriers
Laksiri Seva

## Services We Offer;

- இலங்கை மற்றும் உலகின் எப்பாகத்திற்கும் கடல் மற்றும் விமான மார்க்கமாக குறைந்த விலையில் பொதிகள் அனுப்பும் சேவை
- இலங்கையின் எப்பாகத்திற்கும் வீட்டுக்கு வீடு சேவை (Door to Door) *
- தனிப்பட்ட மற்றும் வர்த்தக சேவைகளும் உண்டு
- உங்கள் பொருட்களை நம்பிக்கையுடன் பாதுகாப்பாக உரிய நேரத்தில் அனுப்பி வைக்கவும் மேலும் 36 க்கும் மேற்பட்ட நாடுகளில் சுமார் 30 வருடங்களுக்கு மேலாக நடாத்திச் செல்லப்படும் ஒரே ஒரு நிறுவனம் கிளென் கரியர்ஸ்

- Sea Freight and Air Freight
- Full Container (20ft and 40 ft)
- Pick-up and Delivery Services in UK and EU
- House Removals with FREE Survey

இலங்கையில் பொதிகளைப் பெற்றுக் கொள்ளுமிடங்கள் — Laksri Seva Customs Bonded Warehouses

| Colombo Warehouse | Eastern Province Warehouse |
|---|---|
| Laksiri Seva Pvt Ltd. | Laksiri Seva Pvt Ltd. |
| 66, New Nuge Road, | 26, Hmyl Lane, Main Street, |
| Peliyagoda, Colombo | Addappallam, Ninthavur. |
| +94 1129 177 29-31 | T: 0672 0510 50-51 |

Collection from £ 10 within London *

Collection from your door point in any part of UK or Europe*

2 x Tea Carton for * **£ 19.50**

* Conditions Apply

**அழையுங்கள் : 020 8743 7353**

Mon - Sat : 9:30am to 5:30pm
Sun: 10:30am to 2:00pm

Web : www.glencarriers.com email : info@glencarriers.com || 14 Allied Way, Off Warple Way, Acton, London W3 0RQ

---

# SCAN Electronics

15th Year Anniversary

**4 Camera CCTV System £ 499**
* 4 N/V Cameras (600 TVL), 19" Monitor,
* 4 CHANNEL DVR (1 Month Rec + Mob View)

**8 Camera CCTV System £ 749**
* 8 N/V Cameras (600 TVL), 22" Monitor,
* 8 CHANNEL DVR (1 Month Rec + Mob View)



**16 Camera CCTV System £ 1249**
* 16 N/V Cameras (600 TVL), 32" Monitor,
* 16 CHANNEL DVR (1 Month Rec + Mob View)





**EPOS System £ 1500**



**Wire Free Alarm £ 350**
2 Door Contact, 2 PIR Sensor
1 Panic Button, Mobile Link



All the Prices Including Fitting and Transport

* All Prices within M25 Miles, Terms & Condiotions Apply

EPOS - Access Control System - Remote Management - CCTV - Alarm - Biomatrics System



## SCAN ELECTRONICS
UNIT - 06, Zeal House, 8, Deer Park Road,
London, SW19 3UU. Mob 07956263068
Email - info@scanelectronics.com
Web - www.scanelectronics.com

---



# SREE KANAGA DURGA ASTROLOGY CENTER

## Pandit : SAHA DEVA RAJ
Indian Astrologer & Herbal Ayurvedic Specialist

பிரபல மந்திரிமார்களுக்கும் நடிகர் நடிகைகளுக்கு ஜோதிடம் பார்த்து புகழ் பெற்றவர். கைரேகை பார்த்து, முகரேகை பார்த்து, ஜாதகம் பார்த்து ராசி நட்சத்திரமும் பார்த்து, பிறந்த ஆண்டு திகதி பார்த்து நடந்தது, நடந்து கொண்டிருப்பது, நடக்கவிருப்பவற்றைச் சொல்லுவார்.



குடும்ப, காதல் விடயங்கள், மனை விவகாரங்கள், கணவன் மனைவி காதலர் ஒற்றுமை பிணக்குகள், குழந்தை, சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு, திருமண யோகம், காதல் விவகாரங்கள், தொழில், மனை அபிவிருத்தி முன்னேற்றம், லட்சுமிகடாட்சம், வாகன மனைப் பொருத்தங்கள், விசாப் பிரச்சினைகள், கோட்டு வழக்கு, ஆரோக்கியப் பாக்கியம், வியாழ முன்னேற்றம், சேவன கோளாறும் பேய் பிசாசு, தொந்தரவா ?, எதிரியால் தொந்தரவா ? கண்திருஷ்டி, நாக தோசம் உங்களுக்கு எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் தீர்த்து வைப்பார். Lottery Luck பற்றியும் சொல்லுவார்.

**அனைத்து விதமான நோய்களுக்கும் அற்புதமான மூலிகை சிகிச்சை வழங்குகிறார்கள். நாடி பிடித்து நோய்கள் கண்டறிவதில் வல்லுனர்**

Office Hour : 7 Days a Week 10 AM to 8:00 PM | Famous through 7 Generations

**15 Lee High Road, London, SE13 5LD**
**[Near Sivan Temple - Opposite Nando's]**

**Tel : 07472 566 541 , 0208 3185 396**

# “ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளை தடைசெய்தது மிகப்பெரிய தவறு”



கண்காணிப்புக் குழுத் தலைவர்
ஹென்றிக்சன்

*2006 ஆம் ஆண்டு, போர்த்தவிர்ப்புக் காலத்தில் இலங்கை கண்காணிப்புக் குழுவுக்கு (SLMM) தலைமை வகித்த உல்ஃப் ஹென்றிக்சன் அவர்கள் மார்ச் முதலாம் திகதி தமிழ்நெற் இணையத்தளத்திற்கு சுவீடனிலிருந்து வழங்கிய சிறப்பு நேர்காணலில் வழங்கிய கருத்துகளிலிருந்து சில முக்கிய பகுதிகளை இங்கு பிரசுரிக்கிறோம். (தமிழாக்கம் இது நம் தேசம் இணையதளம்)*

**தமிழ் நெற்:** வன்னிப் போரின் இறுதிக் கட்டத்தின் போது, உலகெங்கும் பெருந் தொகையான தமிழ் மக்கள் தெருக்களில் இறங்கிப் போராடி போரை நிறுத்துமாறு சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார்கள். ஆனால், சர்வதேச சமூகம் அதைச் செய்யவில்லை. தற்பொழுது பல்வேறு அறிக்கைகள் வாயிலாக இந்தத் தவறு இழைத்தமைக்காக சர்வதேச சமூகத்தின் மீது குற்றச் சாட்டுக்கள் பரவலாக எழுகின்றன. அங்கு தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் இனப்படுகொலையை தடுத்துநிறுத்துமாறு தமிழர்கள் கோரிவருகிறார்கள். ஆனால், அதைக் கூட இந்த சர்வதேசம் தடுத்து நிறுத்த தயாராகவில்லை. அது அதை இனப்படுகொலை என அங்கீகரிக்கக் கூட இல்லை. இது அதன் தொடர்ச்சியான தவறாகப் பார்க்கிறீர்களா?

**ஹென்றிக்சன்:** ஆம். நீங்கள் சொல்வது சரியென்று என்னால் ஏற்றுக்கொள்ள முடியும். ஓர் எடுத்துக்காட்டுக்கு, இன்று சிரியாவில் உள்ள பிரச்சினையைப் பார்க்கலாம். சர்வதேச சமூகம் எல்லா மோதல்களிலும் தலையிட விரும்பவில்லை அல்லது அதனால் தலையிட முடியவில்லை. அவர்களிடம் அதற்கான பலம் இல்லை அல்லது அதற்காக அவர்கள் பலத்தை பிரயோகிக்க விரும்பவில்லை. பெருமளவு நாடுகளில் அவ்வாறான தலையீட்டுக்கு எதிரான கருத்து எழுகின்றது.

கருத்தியல் ரீதியாகவும் ஊடகங்கள் வாயிலாகவும் போதிய அழுத்தம் பிரயோகிக்கப்படவில்லையாயின், எதுவும் நடக்காது. போதிய அழுத்தம் ஏற்படுத்துவது என்பது ஒரு சிக்கலான விடயம். வேறு பல இடங்களில் நிலவுவது போலவே சிறீலங்காவுக்கும் இந்த சிக்கல் நிலவுகிறது. பெரும்பாலான நாடுகள் இவ்வாறான முன்னெடுப்புக்களில் ஈடுபட விரும்புவதில்லை. சுவீடனைப் பொறுத்தவரை இந்த விடயத்தில் எட்டாத தொலைவில் உள்ளது. அதை புறக்கணிப்பது எளிது. ஒரு மோதல் ஏற்பட்டுவிட்டால், அதில் தலையிட்டு தீர்ப்பது தான் நல்லது.

உங்களுக்கு வடக்கில் ஒரு மிகப்பெரிய போட்டியாளன் (player) இருப்பது மேலும் ஒரு முக்கிய சிக்கல்: அது இந்தியா. அந்தப் பிராந்தியத்தில் இந்தியா என்ன கூறுகின்றது என்பது மிகவும் முக்கியமான விடயம். இந்தியா இந்தப் பிரச்சனையில் தலையிட ஆர்வப்படும் என்று நான் நினைக்கவில்லை, அவ்வாறு கூறுவதற்கு மன்னிக்கவும். ஆனால், பிராந்திய நலன் சார்ந்து தலையிடுகிறதா என்றால் ஆம் என்று நான் திட்டவட்டமாகக் கருதுகிறேன், ஆனால் அது ஒருவகையான தலையீடுதான்.

**தமிழ்நெற்:** பொஸ்னியாவிலும் இலங்கைத் தீவிலும் சமாதானக் கண்காணிப்பில் ஈடுபட்ட அனுபவம் உங்களுக்கு உண்டு. பொஸ்னியாவில் நடைபெற்றது இனப்படுகொலையாக நன்றாக உணரப்பட்டது அத்துடன், சர்வதேச சமூகம் அதற்கு ஒரு பொருத்தமான அரசியல் தீர்வை வழங்கியது. ஆனால், ஈழத்தமிழர்களது விடயத்தில் இனப்படுகொலை குறித்த கேள்வி தொடர்பாக வல்லாதிக்க நாடுகளால் (the world Establishments) ஒரு எழுதப்படாத தணிக்கை திணிக்கப்படுகிறது. இந்த விடயத்தில் சர்வதேச சமூகத்தின் இரட்டை வேடம் எதுவும் இருப்பதாக காண்கிறீர்களா?

**ஹென்றிக்சன்:** நல்லது, முன்னாள் யூகோசுலாவியாவில் தலையிட்டு நடவடிக்கை எடுக்க சர்வதேச சமூகத்துக்கு இரண்டு ஆண்டுகள் எடுத்தன. யூகோசுலாவியாவில் கூட பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்காமல் நாம் மோசமாக கையாண்டிருந்தோம். இந்த விடயத்தில் ஐரோப்பியர்களுக்கு பெரிய வித்தியாசம் இருந்ததது என்னவென்றால், பொஸ்னியா எங்களுக்கு மிக அண்மையில் உள்ளது. அது எமது சொந்த கோடிக்குள் இருக்கின்ற ஒரு நாடு.

அரசியல்வாதிகளை ஏதாவது செய்யச் சொல்லி ஒவ்வொரு நாடுகளிலும் அதற்கெதிரான (யூக்கோசுலாவியாவுக்கு) கருத்து உருவாகிய போதுதான் திருப்புமுனை ஏற்பட்டது என நான் கூறுவேன். ஊடகங்களிடம் இருந்தும் பொதுமக்களின் கருத்திலிருந்தும் ஒரு வித்தியாசமான அழுத்தம் இருந்தது, அதுவே ஐக்கிய நாடுகிளில் உள்ள அரசாங்கங்களை யூக்கோசுலாவியா மீது நடவடிக்கை எடுக்க வைத்தது. என்னைப் பொறுத்தவரை பிற நாடுகளை விட இந்த இரு நாடுகளின் பிரச்சினைகளும் பெரும்பாலும் ஒரேமாதிரியானதாகவே உள்ளது.

சிறீலங்காவுக்கு நான் சென்றபோது என்னிடம் பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த ஒரு நண்பர் கூறினார், இப்பொழுது நீர் பொஸ்னியாவுக்கு செல்வதாக எண்ணவேண்டாம் என்று. ஆனால், இந்த இரு நாடுகளுக்குமிடையே காலநிலை தான் மிகப்பெரிய வித்தியாசமாகப் பட்டது! போருக்குப் பின்னால் உள்ள இயக்கவியல் (mechanics) ஒரேமாதிரியே இருந்தது - அது என்னவென்றால் பணம், சொத்து மற்றும் ஆட்சியதிகாரம் (power) என்பன. சிரியாவை எடுத்துக்கொண்டால் அங்கு என்ன நடக்கிறது. அங்கு இனப்பிரச்சினையோ மதப்பிரச்சினையோ காரணம் அல்ல. அது (இன, மதப் பிரச்சினை) அந்த மோதலுக்கான எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. ஒழுக்கமான சமூக, பொருளாதார நீதி இருக்குமானால் மோதல் என்பதே கிடையாது.

**தமிழ்நெற்:** விடுதலைப் புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியத்தால் விதிக்கப்பட்ட தடையானது ஐரோப்பிய பாராளுமன்றில் நடைபெறவில்லை, ஆனால் அமெரிக்கா மற்றும் பிருத்தானியாவின் மிகக் கடுமையான அழுத்தத்திற்கு உட்பட்டு புருஸ்லெஸில் உள்ள தேனீர் கடைகளில் வைத்து தடைவிதிக்கப்பட்டது என ஓர் உரையில் பதிவுசெய்திருந்தீர்கள். 2006 இல் ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் மீது தடையை அறிவிக்க முன்னர் இந்த விடயம் குறித்து தங்களோடு கலந்தாலோசிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. அதன்போது என்ன விடயத்தை சமர்ப்பித்திருந்தீர்கள்?

**ஹென்றிக்சன்:** சிறீலங்கா மீதான சர்வதேச சமூகமாகிய, இலங்கை சமாதான கண்காணிப்புக்குழுவாகிய நாம், வேறு தூதரகங்கள் மற்றும் ஐ.நா. ஆகியன விடுதலைப் புலிகளைத் தடை விதிக்கவேண்டாம் என அறிவுறுத்தினோம்.

பேச்சுவார்த்தை மேசைக்கு அவர்களை வருமாறு அழுத்தம் கொடுக்க வேண்டுமே தவிர விடுதலைப் புலிகளைத் தடைசெய்வது இது மிகவும் அவசர முடிவு என்பதை நாங்கள் எடுத்துக் கூறினோம். ஒவ்வொருத்தரும் சிறீலங்காவுக்காக வேலைசெய்தார்கள் அத்துடன், சிறீலங்காவுக்காக வேலை செய்த இராஜதந்திரிகள் கூறிய வார்த்தையை நாங்கள் கேட்டோம்: சரி, நாங்கள் காத்திருப்போம் என்றார்கள்.

ஆனால், அப்போது ஒவ்வொன்றும் மிக வேகமாக நடந்தது. நிச்சயமாக சிறீலங்கா அரசாங்கத்திடமிருந்து தடையை ஏற்படுத்துவதற்காக பெருமளவு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன, அத்துடன் அமெரிக்கா மற்றும் பிற நாடுகளும் அழுத்தத்தை பிரயோகித்தன. பின்னர், முல்லைத் தீவுக்கு வெளியே நடைபெற்ற கடற் சம்பவத்தை அடுத்து ஐரோப்பிய ஒன்றியம் சிறீலங்கா அரசு சொல்வதை செவிமடுத்தது.

> “அது பயங்கரவாதத்துக்கு எதிராக உலகெங்கும் மிகப்பெரிய போர் நடைபெற்றுக்கொண்டிருந்த காலகட்டம். பயங்கரவாதத்துக்கு எதிரானபோர் என்பது உலகளாவிய ரீதியில் அப்போது பெரும் வல்லரசுகளின் வெறியாக இருந்தது.”

என்ன நடந்தது என்பதைக் கேட்பதற்கு அவர்கள் எங்களை அழைக்கவில்லை, ஏனெனில் அது குறித்து எங்களிடம் இருந்து வேறு விதமான பதில் கிடைக்கும் என்பதால். அது வெறும் தாகவலாக இருந்தது, பின்னர் அவர்கள் தடையை விதித்தார்கள். பின்னர், அதிகளவிலோ அல்லது குறைந்த அளவிலோ செயலாற்றக் கூடிய துருப்புச் சீட்டை அவர்கள் அரசாங்கத்துக்கு வழங்கினார்கள், ஏனெனில் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்த படியால்.

அது பயங்கரவாதத்துக்கு எதிராக உலகெங்கும் மிகப்பெரிய போர் நடைபெற்றுக்கொண்டிருந்த காலகட்டம். பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்பது உலகளாவிய ரீதியில் அப்போது பெரும் வல்லரசுகளின் வெறியாக (wish) இருந்தது. இதனால், விடுதலைப் புலிகளும் அந்த கெடுவுக்குள் அகப்பட்டனர். ஆனால், என்னைப் பொறுத்தவரை அது ஒரு தவறு.

> “ விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதப் பட்டியலில் சேர்ப்பதானால், பின் சிறீலங்கா அரசையும் அந்தப் பட்டியலில் இணைத்துவிடுமாறு நான் கூறினேன். ஏனெனில், சிறீலங்கா அரசும் அதே வழிமுறைகளைத் தான் பயன் படுத்தின. அது வெளிப்படையாகவே தெரிந்த விடயம் ”

விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதப் பட்டியலில் சேர்ப்பதானால், பின் சிறீலங்கா அரசையும் அந்தப் பட்டியலில் இணைத்துவிடுமாறு நான் கூறினேன். ஏனெனில், சிறீலங்கா அரசும் அதே வழிமுறைகளைத் தான் பயன்படுத்தின. அது வெளிப்படையாகவே தெரிந்த விடயம். ஆகவே, அது ஒரு மிகப்பெரிய தவறு என்றே நான் கூறுவேன், ஏனெனில் அது பேச்சுவார்த்தை மூலம் சமாதானத் தீர்வை எட்டுவதற்கான சாத்தியப்பாட்டை தடுத்து நிறுத்தியது, சமாதானத் தீர்வை அரசு விரும்பவில்லை என்றே நான் கூறுவேன்.



# "நாங்க சாதிகெட்ட குடும்பம்" - உழைக்கும் பெண்கள் நாள்




**சமந்தா**
*(சேவ் தமிழ் இயக்கம்)*

நான் காதல் திருமணம் செய்துகொண்டேன். எனது காதலை வீட்டில் சொன்னபோது கடும் அதிர்ச்சியும், எதிர்ப்பும் வந்தது. எனது அண்ணன் மட்டும் அரைமனதோடு ஏற்றுக்கொண்டார் ஜோன்சனின் (எனது கணவன்) வீட்டில் ஓரளவிற்கு ஏற்றுக் கொண்டார்கள். அந்தச் சூழ்நிலையில், எனது திருமணம் எந்த முறையில் நடக்கும் என்ற ஐயம் இரு வீட்டிலும் இருந்தது. அவனது வீட்டில், "சேர்ச்சில் வைத்து முறைப்படி தாலி கட்ட வேண்டும். இல்லையென்றால் எங்கள் இருவரது பெயரையும் 'ஊர் வரியில்' சேர்த்துக் கொள்ள மாட்டார்கள்" என்று சொன்னார்கள். பல மாத போராட்டத்திற்குப் பின்பு, "சேர்ச்சில் வேண்டாம், ஆனால் தாலி கட்டித்தான் திருமணம் நடக்க வேண்டும்" என்று அடம் பிடித்தனர். ஜோன்சன் தனது பெற்றோர்களிடம், "இந்தியாவில் தாலி கட்டி, திருமணம் செய்து கொள்வது போல்தான் உலகில் உள்ள அத்தனை கிறிஸ்தவர்களும் திருமணம் செய்துகொள்கிறார்களா? தாலி கட்டிக் கொள்ளச் சொல்லி பைபிளில் எங்கேயாவது சொல்லியிருக்கிறதா?" என்று கேள்விகளை எழுப்பி அவர்களை யோசிக்க வைத்தான்.

மற்றொரு புறம், எனது நண்பர்கள் என்னிடம் ஆச்சரியமாகக் கேட்டனர். "சுயமரியாதைத் திருமணமா?", "என்ன பெரியார் வழி மாறிட்டீங்களா?", "தாலி கட்டாம கல்யாணம் செய்தா, குறைந்த பட்சம் ஒரு மோதிரமாவது மாத்திக்குங்க" இப்படியெல்லாம் கேள்விகளும் அறிவுரைகளும் குவிந்தன. சிலர் "தாலி கட்டாம கல்யாணம் செஞ்சா அது செல்லாது. இது ஒரு கல்யாணம், இதற்கு அழைப்பிதழ் வேற!" என்று எரிச்சலூட்டும் விதமாகவும் பேசினர்.

அவர்களுக்கெல்லாம், இந்தியச் சட்டத்தில் இருக்கும் சிறப்புத் திருமணச் சட்டம் பற்றி விளக்க வேண்டியிருந்தது. இது இந்தியா முழுவதிற்குமானது. திருமணத்திற்கு முன்பே பதிவாளர் அலுவலகத்தில் தகவல்களைக் கொடுத்து, அறிவிப்பெல்லாம் ஒட்டி அதன்பிறகு இதுபோன்ற திருமணங்கள் நடந்தது. ஆனால், தமிழகத்தில் இது பழைய முறையாக மாறிவிட்டது. 'தமிழ்நாடு திருமணப் பதிவுச் சட்டம் - 2009' இன் படி, இந்த முன்னறிவிப்பெல்லாம் தேவையில்லை. மணமகன், மணமகள் எந்த சாதி எந்த மதம் என்ற கேள்விக்கே இடமில்லை. திருமணம் நடந்து முடிந்த பிறகு, பிறந்த தேதி, முகவரி இவற்றுக்கான சான்று, புகைப்படத்துடன் கூடிய ஒரு அடையாள அட்டை, திருமணம் நடத்தி வைத்தவருடைய ஒப்பம், திருமண அழைப்பிதழ், இவற்றை வைத்து திருமணத்தைப் பதிவு செய்துகொள்ளலாம்.

நண்பர்கள் கேள்விமேல் கேள்வியாகக் கேட்கும்போது சில நேரம் அழுகையும் பல நேரங்களில் கோபமும் வந்து என் மனதைக் கசக்கிப் பிழியும். இன்னும் பல சந்தேகங்களையும் எழுப்பினார்கள். "குழந்தையை எந்த சாதி, மத முறையில் வளர்ப்பீங்க?", "பள்ளியில் சேர்க்கும்போது சாதி, மதம் என்னவென்று போடுவீங்க?", "அவங்களுக்குத் திருமணம் செய்யும்போது, எந்த சாதி, மதத்துல பொண்ணோ பையனோ பார்ப்பீங்க?" இப்படியான கேள்விகள். இந்தக் கேள்விகள் ஆரம்பத்தில் எனக்கும் இருந்தது. ஜோன்சன் அவ்வப்போது தக்க பதில்கள் அளித்து எனக்குப் புரிய வைத்தான்.

நான் என் நண்பர்களுக்கு அளித்த பதில்கள். "எங்கள் குழந்தைகளை எந்த சாதி, மத முறைப்படியும் வளர்க்க மாட்டோம். பின்னாளில் அவர்களும் எங்களைப்போல கடவுள் மறுப்பாளராக வரலாம் அல்லது பிடித்த மதத்தைப் பின்பற்றும் சுதந்திரம் அவர்களுக்கு உண்டு. பள்ளியில் சேர்க்க சாதி, மதமெல்லாம் தேவையில்லை என்று அரசு ஆணையே இருக்கின்றது. சாதி, மதம் கிடையாது, 'நாங்க சாதிகெட்ட குடும்பம்' என்று சொல்லிக்கொள்கிறோம். பொதுப்பிரிவில் (Open Competition)ல் போட்டியிட்டுக்கொள்ளட்டும். எங்கள் குழந்தைகளின் திருமணத்தைப் பொறுத்தவரையில், அது அவர்களுக்கான சுதந்திரம். அவர்கள் யாரைத் தெரிவு செய்தாலும் முழு மனதோடு ஏற்றுக்கொள்வோம். காதலிக்கவில்லையென்றால் எங்களைப்போன்றே சாதி, மதம் பார்க்காமல் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அப்படி ஒரு பெண்ணோ பையனோ கிடைப்பது ஒன்றும் குதிரைக்கொம்பில்லை".

இதையெல்லாம் கேட்ட நண்பர்கள், "இதெல்லாம் பேசத்தான் நல்லாயிருக்கும். வாழ்க்கையில் ரொம்ப கடினம்' என்றனர். எங்கள் திருமணம் நடந்து ஒரு வருடத்திற்கு மேல் ஆகிவிட்டது. இப்போது எங்கள் திருமணத்தைப் பற்றி யாரும் விமர்சனம் செய்வதில்லை. ஆயினும் இதுபோன்ற கேள்விகளை மீண்டும் மீண்டும் பல தருணங்களில் எதிர்கொண்டுள்ளோம். அவற்றிக்கு விளக்கங்களும் சொல்லி, அவற்றைக் கடந்து வந்துள்ளோம்.

எங்களிடம் பல்வேறு கேள்விகளை எழுப்பும் இந்தச் சமூகத்திற்கு நான் முன்வைக்கும் கேள்விகள்:

1. தாலி கட்டாமல் எந்த வித சாதி, மத கறையும் படியாமல் நடக்கும் திருமணங்களை வினோதமாகப் பார்த்து கேலிசெய்யும் மனநிலை ஏன்?

2. திருமணத்தில் சாதி, மத சடங்குகளால் என்ன பயன்? அதில் செய்யப்படும் சடங்குகளுக்கும் சொல்லப்படும் மந்திரங்களுக்கும் என்ன விளக்கம் என்பதை எத்தனை பேரால் விளக்க முடியும்?

3. 100, 200 ஆண்டுகளுக்கு முன் திருமணங்கள் எப்படி நடந்தன?

4. தாலி என்பது பொண்ணுக்குப் போடப்படும் அடையாளக் கயிறு. மாட்டுக்கு 'மூக்கணாங் கயிறு' போல. பெண்களுக்கு எதற்கு இந்த அடையாளச் சின்னம்?

5. திருமணமான பெண்களுக்கு அடையாளச் சின்னம் இருப்பதுபோல, திருமணமான ஆண்களுக்கு ஏன் ஒரு அடையாளச் சின்னம் இல்லை? இதை, பெண் அடிமைத்தனம் என்று சொல்வதில் என்ன தவறு?

சாதி, மத அடையாளத்தை எதிர்க்கும் விதமாக நாங்கள் ஏற்கெனவே எடுத்துள்ள முடிவு என்னவென்றால், "எங்கள் நண்பர்களின் பிள்ளைகளுக்கு சாதி, மதச் சடங்குகள் கொண்டு நடத்தப்படும் திருமணங்களில் நாங்கள் கலந்துகொள்ள மாட்டோம்".

*கருத்துக்களுக்கு -*
*facebook.com/orupaper* *@orupaper*


# MASS GLOBAL SHIPPING
Sea - Air - Road & Ticketing , Serving all Communities
MOST PROFESSIONAL SRI LANKAN SHIPPING COMPANY IN UK

* Packers * Movers * Shippers

Best Rate Guaranteed for Car Shipments 20ft & 40ft Containers

We Offer the Best Services than all the Other in the trade!



உங்கள் பொருட்களை ஆகாய தரை கடல் மார்க்கமாக பாதகாப்பாகவும் துரிதமாகவும் குறைந்த செலவிலும் அனுப்புவதற்கு நம்பிக்கையுடன் நாட வேண்டிய ஒரே நிறுவனம்.



Special rates for Containers and Machinery

4 Collection Points :
Harrow
Watford
Knightsbridege
Croydon



T-chest Box சென்னைக்கு அனுப்ப £40 மட்டுமே
ஒரு T-chest Box அனுப்ப £40 இரண்டு T-chest Box அனுப்ப £30

FREIGHT ONLY £15.00
FREIGHT AND BOX £15.00
(Volume 4.5Cu.ft)

Wooden boxes available
Call - 0208 3862314
Hot Line 24/7- 079 4010 8177

Local Collection Charge £10.00 upto Hounslow.
Within M1 collection charge £15.00 All other area's we will offer the best rates

MASS GLOBAL SHIPPING
N0 58 THE ARCHES, HARROW, HA2 8AA
E-Mail: info@massshipping.com, Web : www.massshipping.com
*Condition Apply - No hidden charges - No bogus promotions





# SHREE MAHAKALI ASTROLOGY CENTRE



S.S.RAJU PANDIT
Indian Astrologer & Herbal Ayurvedic Specialist

பிரபல மந்திரிமார்களுக்கும், நடிகர், நடிகைகளுக்கு ஜோதிடம் பார்த்து புகழ் பெற்றவர். கைரேகை பார்த்து, முகரேகை பார்த்து, ஜாதகம் பார்த்து, ராசி நட்சத்திரமும் பார்த்து, பிறந்த ஆண்டு திகதி பார்த்து நடந்தது நடந்துகிட்டு இருக்கிறது, நடக்கப் போறது சொல்லுவார்.

குடும்ப காதல் விடயங்கள், மனை விவகாரங்கள், கணவன், மனைவி, காதலர் ஒற்றுமைப் பிணக்குகள், குழந்தை சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு, திருமண யோகம், காதல் விவகாரங்கள், தொழில், மனை, அபிவிருத்தி, முன்னேற்றம், லட்சுமிகடாட்சம், வாகன மனைப் பொருத்தங்கள், விசாப் பிரச்சினைகள், கோட்டு வழக்குகள், ஆரோக்கியப் பாக்கியம், வியாழ முன்னேற்றம், சேவன கோளாறும், பேய் பிசாசு தொந்தரவா, எதிர்ப்பால தொந்தரவா, கண்திருஸ்டி, நாக தோஷம் உங்களுக்கு எந்தப் பிரச்சினையாக இருந்தாலும்



அனைத்து விதமான நோய்களுக்கும் அற்புதமான மூலிகை சிகிச்சை வழங்குகிறார்கள். நாடிபிடித்து நோய்கள் கண்டறிவதில் வல்லுநர்.

Office Hours : 7 Days a Week 10:00 AM - 08:00 PM
Any Problems cleared within 9 days - Famous through 7 Generations

07729202680
07405908271
163, Rushey Green
Catford, SE18 4BD
Next door to Natwest

# பலப்பரீட்சை காட்டும் வல்லரசுகளும் பந்தாடப்படும் மனித அவலங்களும்



தம்பி

சர்வதேச சுயாதீன விசாரணை, இலங்கைத் தீவில் சர்வதேசத் தலையீடு என்பவை பற்றி அதிகம் பேசப்படும் இக்காலத்தில், சர்வதேச நாடுகளின் நலன்சார் நகர்வுகள் பற்றி பேச வேண்டியுள்ளது.

இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கு பின்னர் அமெரிக்காவும் சோவியத் ஒன்றியமும் எதிரெதிரான கொள்கைகளுடன் தமக்கு ஆதரவான நாடுகளை அணிசேர்த்துக் கொண்டு இருதுருவ அரசியலை மேற்கொண்டன. தமது நலன்களுக்கு இடையுறுகள் ஏற்படாத வகையில் ராணுவ பலத்தை பெருக்கிக் கொண்டன. அணிசேராக் கொள்கையை கொண்டிருந்த நேரு, அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு கொள்கையிலிருந்து இந்தியாவைப் பாதுகாக்கும் வகையில் சோவியத் ஒன்றியத்துடன் நட்புறவைப் பேணிக் கொண்டார். அமெரிக்கா பாக்கிஸ்த்தானை வளைத்துக் கொண்டது.

**அமெரிக்கா தமக்கு புதிய சவாலாக சீனா என்கிற பெரும் பூதம் வளர்ந்து வருவதை சிறிய விஷயமாகப் புறந்தள்ளாமல் சீனாவின் வளர்ச்சியைத் தடைப்படுத்த வேண்டிய கட்டாயத்தை உணர்ந்து செயற்பட ஆரம்பித்தது.**

இலங்கைத்தீவில் 77ம் ஆண்டுத் தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றியிருந்த ஜெயவர்த்தனா அமெரிக்கா சார்பானவராக இருந்ததில், இந்தியாவின் வளர்ச்சியை வேவு பார்க்கும் வகையில் அமெரிக்கா இலங்கைக்குள் ஊடுருவியது. அமெரிக்காவை சிங்களத்திற்கு தலையிடி கொடுத்து வெளியேற்றும் வகையில் இந்தியாவானது 1983 ஆடிக்கலவரத்தைப் பயன்படுத்தி தமிழ்மக்கள் மத்தியில் ஆயுதக் குழுக்களை உருவாக்கியது. அந்த ஆயுதக் குழுக்கள் எல்லாம் இந்தியாவிடம் மண்டியிட, இந்தியாவின் வஞ்சகத்தைப் புரிந்து கொண்ட தேசியத் தலைவர் மட்டும் இந்தியாவை விலக்கி எமது விடுதலைப் போராட்டத்தை வளர்த்தெடுத்தார்.

தனது பிராந்தியத்திலுள்ள கியூபா சோவியத் ஒன்றியத்திற்கு ஆதரவாக இருப்பதைப் போலவே சோவியத் ஒன்றியத்துக்கு அருகில் தனக்கொரு ஆதரவு நாடு அமையும் வகையில் அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் மூக்கை நுழைத்தது. சுதாகரித்துக் கொண்ட சோவியத் ஒன்றியம் ஆப்கானை ஆக்கிரமித்தது. சோவியத்துக் கெதிராக அமெரிக்கா பின்லாடனைக் கொம்பு சீவி பாக்கிஸ்தானுடாக அனுப்பியது. தாக்குப் பிடிக்க முடியாத சோவியத் ஒன்றியம் பின்வாங்கியது. இயற்கை வளமற்ற பனிமலைச் சூழலில் தனது அணியிலுள்ள மற்றைய நாடுகளின் அபிலாஷைகளைப் புறக்கணித்த ரஷ்யாவிடமிருந்து மற்றய நாடுகளை பிரித்தெடுத்து சோவியத் ஒன்றியத்தை உடைத்தெறிவதில் அமெரிக்கா வெற்றி கண்டது.

இதேவேளை அமெரிக்காவின் நலன்களுக்காகத் தாங்கள் பயன்படுத்தப்பட்டதை உணர்ந்த சதாமும் பின்லேடனும் வெவ்வேறு வடிவங்களில் அமெரிக்காவுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்தனர். சோவியத் உடைவிற்குப் பின் தனிப்பெரும் வல்லரசாகத் திகழ விரும்பிய அமெரிக்காவுக்கு புதிய சவாலாக மதவாதம் தலைதூக்கியது. புதிய எதிரியை அழிப்பதற்கு, அமெரிக்கா பயங்கரவாதத்திற்கு எதிரான போரென்ற கோஷத்துடன் புதிய போர்முறையைக் கைக்கொண்டது. கதிர்காமரின் அறிவுறுத்தலில், எந்தவிதத்திலும் அமெரிக்காவுக்கு அச்சுறுத்தலாக இல்லாத விடுதலைப் புலிகளையும் பயங்கரவாதப் பட்டியலில் இட்டது. பயங்கரவாதத்தை வெற்றி கொள்ளும் வகையில் அமெரிக்கா பாகிஸ்தானுடனான உறவை முறித்து இந்தியாவை நட்பு நாடாக்கியது. அமெரிக்கப் பார்வையிலான இலங்கைப் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில், அமெரிக்க சார்பு மேற்குலகம் சிங்களத்துக்குத் துணைபோனது.

தமது படையினரால் வெற்றி கொள்ள முடியாத புலிகளை, தமிழின எதிர்ப்பபாடுடைய இந்தியா மூலம் அழிப்பதற்குச் சிங்களம் இந்தியாவுக்குச் செங்கம்பள வரவேற்பு கொடுத்திருந்தது. ஆனால் யாருமே எதிர்பாரா வண்ணம், உள்நாட்டுக் கிளர்ச்சியை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் ட்ரில்லியன் மதிப்பிலான ஆயத உபகரணங்களைக் கடனடிப் படையில் சிங்களத்திற்கு வழங்கிய சீனா, இனப்படுகொலை வடிவில் உள்நாட்டு கிளர்ச்சி முடிவுற்றதும், புனர்நிர்மாணம், அபிவிருத்தி என்ற பெயரில் சிங்களம் எதிர்ப்புக் காட்ட முடியாத வகையில் முழு இலங்கையையும் ஆக்கிரமித்தது. 2006ஆம் ஆண்டு மன்னாரில் இனச்சுத்திகரிப்பைச் சிங்களம் ஆரம்பித்த போது முழு அளவிலான யுத்தமாக அதை எதிர்கொண்ட புலிகள், வவுனியாவில் சிங்களத்தின் இனவிரோத யுத்தத்தில் நிலைமையை உணர்ந்தறிந்து தற்காப்பு யுத்தமாக தமது போர் முறையை மாற்றியமைத்தது. மேற்குலகின் நேரடி யுத்த முயற்சியைத் தவிர்த்திருந்தனர். இலங்கைத் தீவில் முழுத்தமிழினமும் வேரடி மண்ணாக அழிக்கப்பட்ருக்க வேண்டிய சூழலைத் தமது விவேகத்தால் தவிர்த்து தமிழினத்திற்காகத் தம்மை மட்டுமே ஆகுதியாக்கியிருக்கிறார்கள்.

அமெரிக்கா தமக்கு புதிய சவாலாக சீனா என்கிற பெரும் பூதம் வளர்ந்து வருவதை சிறிய விஷயமாகப் புறந்தள்ளாமல் சீனாவின் வளர்ச்சியைத் தடைப்படுத்த வேண்டிய கட்டாயத்தை உணர்ந்து செயற்பட ஆரம்பித்தது. சீனாவின் வளர்ச்சியை முதலாவதாக சீனாவை இலங்கைத் தீவிலிருந்து வெளியேறியாகவேண்டிய கட்டாயத்தை அமெரிக்கா உணர்ந்தது. அதற்காக அமெரிக்கா எடுத்துக்கொண்ட ஆயுதம் போர்க்குற்றம். எவ்வளவு முரண் பாருங்கள். இலங்கைத் தீவைத் தனது கட்டுப்பாட்டினுள் கொண்டுவருவதற்கு இனக்கொலைக்குத் துணை நின்ற அமெரிக்கா, சீனாவை வெளியேற்றக் கருதி தான் செய்துவிட்டதை மறந்து, நடந்ததை வேறு முலாம் பூசி சிங்களத்திற்கு எதிராகத் தூக்கிப் பிடிக்கிறது.

விசயத்துக்கு வருவோம். கடந்த முறைகளிலெல்லாம் இந்தியா தனது நட்புறவு நாடுகளான அணிசேராா அமைப்பில் இருந்த சில நாடுகளின் உதவியுடனேயே அமெரிக்கத் தீர்மானத்தை முறியடித்தது. மொரீசியஸ் பிரதமரின் தீர்மானத்தால் மாநாட்டில் கலந்து கொண்ட நாட்டின் தலைவர்களெல்லாம் அவமானத்தால் குறுகிநிற்கிறார்கள. பொதுநலவாய அமைப்பிலுள்ள நாடுகள் பலவும் அணிசேரா அமைப்பிலுமுள்ளன. அமெரிக்காவின் தீர்மானத்தை தான் ஆதரிக்கப் போவதாக மெரீசியஸ் பிரதமர் ஏற்கனவே சொல்லிவிட்டார். அதனால் இம்முறை இந்தியாவுக்குச் சாதகமாக அந்த அணிசேரா நாடுகள் அமெரிக்கத் தீர்மானத்தை எதிர்க்க வாய்ப்பில்லை. அதனால் அமெரிக்கா இம்முறை தனது தீர்மானத்தை ஐ.நாவில் நிறைவேற்றும். தீர்மானத்திற்கு தொடர்ச்சியாக சிங்களம் மீது பொருளாதாரத் தடை கொண்டுவரவோ, சர்வதேச விசாரணைப் பொறிமுறையை அமைக்கவோ செய்து தனது அதிகாரத்தை இலங்கைத் தீவில் நிறுவ முயலும். ஆனால் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் பேட்டை ரவுடியாக தன்னை நிலைநிறுத்த விரும்பும் இந்தியா அமெரிக்கத் தலையீட்டைத் தடுத்துவிட ஏதாவது செய்ததேயாகும்.

ஆனால் அந்த நாட்டின் எந்த நடவடிக்கையும் தமிழர்க்குத் தீர்வைத் தந்துவிடாது. தாங்கள் இலங்கைத் தீவில் ஆதிக்கம் செலுத்துவதற்கு காரணி தேவைப்பட, தமிழர் மீது போலி நீலிக்கண்ணீர் வடிக்கிறது. மேற்குலகம் தரப்பட்ட வாய்ப்பில் எமது பிரச்சினைகளை உரத்துச் சொல்லி, தீர்வாக நாம் ஏற்றுக் கொள்ளக் கூடியவற்றை ஆணித்தரமாகப் பதிந்து வைக்க வேண்டிய கடமை எமக்குண்டு.

தமிழ் உணர்வாள்களென்றோ, தமது தலைவர் பிரபாகரனென்றே பீற்றிக்கொள்ளாத கல்வித் துறையைச் சார்ந்தவர்களான பேராசிரியர் இராமசாமி, போராசிரியர் குமரகுருபரன் போன்றோர் லண்டனில் நடைபெற்ற நிலவழிப்பு மாநாட்டில் எந்தவித தயக்கமோ, தடுமாற்றமோ இன்றி உறுதியாக இலங்கையில் நடந்தது இனக் கொலையே என்று ஆணிதரமாக பதிவு செய்து விட்டுச் சென்றிருக்கிறார்கள். அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகள் கஜேந்திர குமாரும், பேராசிரியர் தீரனும் கூட மதிக்கப்பட வேண்டியவர்கள் தான்.

**இலங்கைத் தீவைத் தனது கட்டுப்பாட்டினுள் கொண்டுவருவதற்கு இனக் கொலைக்குத் துணை நின்ற அமெரிக்கா, சீனாவை வெளியேற்றக் கருதி தான் செய்துவிட்டதை மறந்து, நடந்ததை வேறு முலாம் பூசி சிங்களத்திற்கு எதிராகத் தூக்கிப் பிடிக்கிறது.**

ஆனால் தமிழுணர்வாளர்களென்று தம்மைப் பீற்பிக்கொள்ளும் சிலரோ மேற்கின் ஒழுங்கில் தம்மைக் கீழ்ப்பணிய வைத்து, போர்க்குற்ற விசாரணையையும், சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினர் மீதான விசாரணையையும் கோரி நிற்கின்றனர். உண்மைகளை மறைத்த இந்தக் கோரிக்கைகள் மேற்கின் நலன்களுக்கு மட்டுமே உதவும்.

ஒன்றரை லட்சம் போராளிகளின் அர்ப்பணிப்பிலும் லட்சக்கணக்கான தமிழ்மக்களின் அழிவிலும் எமக்குத் தரப்பட்ட வாய்ப்புக்களை நாம் தவறவிட்டு, வரலாற்றில் பழிச்சொல்லுக்கு ஆளாகியிடக் கூடாது. எமது பிரச்சினையில் இந்தியத் தலையீட்டைத் தலைவர் கையாண்டதைப் போலவே மேற்குலகின் தலையீட்டில் எமது உரிமைகளை வென்றெடுக்க விட்டுக் கொடுக்காத சமரசம் செய்து கொள்ளாத போராட்டத்தை முன்னெடுப்போம்.

கருத்துக்களுக்கு -
facebook.com/orupaper @orupaper


# Kayaal IT Solution Ltd
CCTV Camera Installation & Maintenance



*Friendly services by qualified Engineer.....*

Special Offers !!

- 4 Cameras include night vision up to 700 TVL + DVR (500 GB HDD, H264, D1) Including online viewing. Installing & Supply £450.00 inclusive
- 8 Cameras with above specification £ 650.00 inclusive

- For Repair call out charge from £ 35.00 + Parts
- CCTV Cameras yearly maintenance from £ 130.00 + Parts up to 20 miles radius from SM5
- Portable appliance test (PAT) for House & Business
- PC & Laptop repair & upgrade

**Please Contact : Jothy**

Paying Method : By PayPal or Cash

*Electrical & Electronic Engineer, Beng Hons*
*Microsoft certified for MCTC, MCP 2.0 & Guilds*
*Certified for PAT test*

**83, Roberts Bridge Road,**
**Carshalton,**
**SM5 1AH**

Mob : **07859892657**
E-Mail : **kayaalitsolutions@hotmail.com**
Web : **www.kayaalitsolutionlimited.com**

# உக்ரேனின் கிறிமியாவின் கேந்திர முக்கியத்துவமும் புவிசார் அரசியலும்




**வேல் தர்மா**
*(ஒரு பேப்பருக்காக)*

விளக்கேந்திய சீமாட்டி எனப்படும் புளோரன்ஸ் நைட்டிங்கேல் புதிய தாதி முறைமையை உருவாக்கியவர். உருவாக்குதல்களும் கண்டு பிடிப்புகளும் தேவைகள் விஞ்சி நிற்கும் போது உருவாகும். தாதி முறைமையை உருவாக்க வேண்டிய தேவை கிறிமியாவை இரசியாவிடமிருந்து பறிக்கும் போர் 1853-ம் ஆண்டிலிருந்து 1856-ம் ஆண்டுவரை நடந்த போது ஏற்பட்டது. இதில் போர்வீரர்கள் காயப்படுவதும் இறப்பதும் அதிகமாக இருந்தது. கிறிமியப் போர் முனையில் பணியாற்றியவர் புளோரன்ஸ் நைட்டிங்கேல். இந்தப்போரில் இரசியா பத்து இலட்சம் போர் வீரர்களையும் பலி கொடுத்தது. பிரித்தானியப் படையினரில் 25,000 பேரும் பிரெஞ்சுப் படையினரில் ஒரு இலட்சம் பேரும் கொல்லப்பட்டனர். ஐரோப்பிய வரலாற்றில் இது மிக அதிகமான உயிரிழப்பை ஏற்படுத்திய போராகும். இறுதியில் ஒட்டொமன் பேரரசுக்கு சில விட்டுக் கொடுப்புக்களை இரசியா மேற்கொண்டு கிறைமியாவைத் தனதாக்கியது.

இந்தப் போரின் முக்கியத்துவம் புவிசார் அரசியலில் கிறிமியாவின் முக்கியத்துவத்தை எமக்கு உணர்த்துகின்றது.

### ◆ என்ன இந்தப் புவிசார் அரசியல்

புவிசார் அரசியல் தொடர்பாக எழும் பிரச்சனைகள் என்ன என்பதை அறிய உக்ரேனில் இப்போது நடந்து கொண்டிருப்பது நல்ல உதாரணமாக அமைந்துள்ளது. புவிசார் அரசியலுக்கான வரைவிலக்கணம் அவ்வப்போது மாறிக் கொண்டே இருக்கின்றது. புவியியல் காரணிகளால் பாதிக்கப்படும் நாடுகளிடையேயான உறவுகள் தொடர்பான அரசியல் புவிசார் அரசியல் எனப்படும். இது ஒரு மிகச் சுருக்கமான விளக்கமாகும். 19-ம் நூற்றாண்டில் உருவான புவிசார் அரசியல் என்னும் பதம் பல மாற்றங்களை அவ்வப்போது சந்தித்து இப்போது இப்படிக் கூறப்படுகின்றது:

**இயற்கை வளம், கேந்திரோபாய ஆதிக்கம், புவிநிலப்பரப்பு ஆகியவை தொடர்பாக நாடுகளிற்கிடை அல்லது நாடுகளின் கூட்டமைப்புக்களிடையே நடக்கும் நடவடிக்கைகளும் நகர்வுகளும் போட்டிகளும் புவிசார் அரசியல் எனப்படுகின்றது.**

இந்த வரைவிலக்கணத்தில் சந்தை தொடர்பாக நாடுகளிடை நடக்கும் போட்டிகள் தொடர்பாக ஏதும் உள்ளடக்கப்படவில்லை. உக்ரேன் தொடர்பான புவிசார் அரசியலில் சந்தையும் புவிநிலப்பரப்பும் முக்கியமானவையாகும். உக்ரேனை இரசியாவின் யூரோ ஏசியாக் கூட்டமைப்பில் இணைந்து அதன் சந்தையை பெரிதாக்குவதா அல்லது ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைத்து அதன் சந்தையைப் பெரிதாக்குவதா என இரசியாவும் ஜெர்மனியும் செய்த போட்டியில் உக்ரேன் அகப்பட்டது. இந்தப் போட்டியும் ஒரு புவிசார் அரசியல் தான். இது பெரிய மக்கள் தொகையாக் கொண்ட ஒரு பொருளாதாரக் கூட்டமைப்பை உருவாக்குவதில் நாடுகளுக்கு இடையிலான போட்டியாகும். உக்ரேனை நேட்டொவில் இணைத்து உக்ரேனின் ஒரு பிராந்தியமான கிறிமியாவில் இருக்கும் இரசியப் படைத்தளத்தில் இருந்து இரசிய கடற்படையினரை அகற்ற முடியுமா என்ற மேற்கு நாடுகளுக்கும் இரசியாவிற்கும் இடையிலான போட்டிக்கு இடையில் உக்ரேன் அகப்பட்டது. இது மேலுள்ள வரைவிலக்கணத்தில் கேந்திரபாய ஆதிக்கத்துக்குள் அடங்குகிறது.

### ◆ கிறிமியாவின் வரலாறு

கிறிமியாவிற்காக மூன்று ஆண்டுகள் நடந்த போர் அதன் கேந்திர முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. 1783-ம் ஆண்டில் இருந்து கிறிமியா இரசியாவின் ஒரு பிரதேசமாகவே இருக்கின்றது. 1917-ம் ஆண்டு நடந்த இரசியப் புரட்சியின் போது கிறிமியா ஒரு தனி நாடாகச் சிலகாலம் இருந்தது. பின்னர் மீண்டும் இரசியாவின் ஒரு பிரதேசமாக்கப்பட்டது. 1921-ம் ஆண்டு கிறைமியா சோவியத் ஒன்றியத்தின் ஒரு குடியரசானது. 1942-ம் ஆண்டு உலகப் போரின் போது ஜேர்மனி கிறைமியாவைக் கைப்பற்றியது. ஜேர்மனி கிறைமியாவைக் கைப்பற்ற ஆறு மாதங்களுக்கு மேல் எடுத்தது. 1944-ம் ஆண்டு கிறைமியாவை சோவியத் ஒன்றியம் மீளக் கைப்பற்றியது. இதைத் தொடர்ந்து ஜேர்மனியருடன் ஒத்துழைத்தார்கள் என்பதற்காக ஜோசப் ஸ்டாலின் கிறைமியக் குடிமக்களான டாட்டார் இசுலாமியர்கள் மூன்று இலட்சம் பேரை கிறைமியாவில் இருந்து வெளியேற்றி சோவியத்தின் வேறு பிராந்தியங்களில் குடியேற்றினார். சோவியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் பலர் திரும்பி வந்தனர். 1945-ம் ஆண்டு கிறிமியா சோவியத் ஒன்றியத்தின் கீழ் ஒரு குடியரசு என்ற நிலையை நீக்கி அது சோவியத்தின் ஒரு மாகாணமாக மாற்றப்பட்டது. 1954-ம் ஆண்டு கிறிமியாவை இரசிய அதிபர் நிக்கித்தா குருசேவ் உக்ரேனுடன் இணைத்தார். உக்ரேனியரான குருசேவ் இரசியாவிற்கு தவறிழைத்தார் என்கின்றனர் இரசியர்கள் இப்போது. 1991-ம் ஆண்டு சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியின் போது அப்போதைய இரசிய அதிபர் போரிஸ் யெல்ற்ஸின் கிறிமியாவை இரசியாவின் ஒரு பகுதியாக வைத்திருப்பார் என எதிர் பார்க்கப்பட்டது. ஆனால் அவர் அதை உக்ரேனுடன் தொடர்ந்து இருக்க வைத்து கிறிமியாவில் இரசியக் கடற்படை தொடர்ந்து இருக்க உடன்பாடு செய்து கொண்டார். 1997-ம் ஆண்டு 2042-ம் ஆண்டுவரை இரசிய படைத்தளம் கிறிமியாவின் செவஸ்ரப்பொல் பிராந்தியத்தில் இருக்க உக்ரேனும் இரசியாவும் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டன.

### ◆ கிறிமியாவின் கேந்திர முக்கியத்துவம்

உலகிலேயே மிகப் பெரும் நிலப்பரப்பைக் கொண்ட இரசியாவிற்கு கருங்கடலில் மட்டுமே குளிரற்ற நீர்க்கடற்பரப்பு உள்ளது. கிறிமியா கருங்கடலில் உள்ள ஒரு குடாநாடு ஆகும். அது கடலால் சூழப்பட்டு ஒரு சிறு நிலப்பரப்பு மட்டுமே உக்ரேனுடன் இணைந்திருக்கின்றது. கிறிமியாவில் இருக்கும் இரசிய கடற்படைப் பிரிவு மத்திய தரைக்கடலிலும் மத்திய கிழக்கிலும் இரசியாவின் ஆதிக்கத்தை நிலை நாட்ட மிகவும் முக்கியத்துவம் மிக்கது. ஐக்கிய அமெரிக்காவுடனும் சீனாவுடனும் ஒப்பிடுகையில் கடற்படை வலு பின் தங்கி இருக்கும் நிலை மோசமடைந்து கொண்டிருக்கின்றது. இரசியக் கடற்படைக் கப்பல்களை துருப்பிடித்த வாளிகள் என சில படைத்துறை நிபுணர்கள் விமர்சிக்கின்றனர். இந்நிலையில் கிறிமியாவை இழந்தால் இரசியாவின் உலக ஆதிக்கத்தை நிலை நிறுத்தும் விளாடிமீர் புட்டீனின் கனவு நிறைவேறாது. இரசியா அமைக்க விரும்பும் ஈரோ ஏசியப வர்த்தகக் கூட்டமைப்பில் உக்ரேனை இணைப்பது முக்கியமாகும்.

### ◆ இரசிய அதிபர் புட்டீனின் துருப்புச் சீட்டுக்கள்

உக்ரேனில் பதவியில் இருந்து நீக்கப்பட்ட விக்டன் யனுக்கொவிச், கிறிமியாவில் இருக்கும் இரசியப் படைகள், உக்ரேனில் இருக்கும் இரசியர்கள் ஆகியவை உக்ரேன் விவகாரத்தில் இரசியாவில் கையில் இருக்கும் துருப்புச் சீட்டுகளாகும். பதவியில் இருந்து விலக்கப்பட்ட விக்டர் யனுக்கோவிச்தான் உக்ரேனின் சட்டபூர்வ ஆட்சியாளர் என்கிறார் புட்டீன். இப்பொது உக்ரேனில் இருக்கும் ஆட்சியாளர்கள் சட்ட விரோதமானவர்கள் என்றும் ஒரு படைத் துறைச் சதியின் மூலம் உக்ரேனிய அரசமைப்புக்கு விரோதமாக ஆட்சியை கைப்பற்றியுள்ளார்கள் என்றும் சொல்கிறார் புட்டீன்.

### ◆ அமெரிக்காவின் உளவுத் துறைக்கு இன்னும் ஒரு தோல்வி!

எகிப்த்தில் மக்கள் அமெரிக்க சார்பு ஆட்சியாளரான ஹஸ்னி முபாரக்கிற்கு எதிராக மக்கள் கிளர்ந்து எழுவார்கள் என முன் கூட்டியே அறிய அமெரிக்க உளவுத் துறையான சிஐஏ தவறியது. இதைத் தொடர்ந்து உக்ரேனில் தனக்கு வேண்டிய ஆட்சியாளரை தூக்கி எறிந்தால் இரசியா ஒரு படை நடவடிக்கையை மேற்கொள்ள மாட்டாது என சி.ஐ.ஏ அமெரிக்க வெளியுறவுத் துறைக்கு அறிவுறுத்தத் தவறிவிட்டது. உக்ரேனின் ஒரு தன்னாட்சிப் பிராந்தியமான கிறிமியாவில் இரசியா எந்த ஒரு படை மோதலும் இன்றி அதை தனதாக்கிக் கொண்டுள்ளது. இப்போது உக்ரேன் தொடர்பாக என்ன நடவடிக்கை எடுப்பது தொடர்பாக அமெரிக்காவின் பாதுகாப்புத் துறை, உளவுத் துறை, தேசிய பாதுகாப்பு முகவரகம் ஆகியவற்றிடை கடும் முரண்பாடு நிலவுகின்றது. அமெரிக்கா போல்ரிக் பிராந்திய நாடுகளிற்கு தனது போர் விமானங்களை அனுப்பியுள்ளது.

### ◆ விளடிமீர் புட்டீனுக்கு இன்னும் ஒரு வெற்றி

சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் சரிந்து போன இரசியப் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்தி, செஸ்னியக் கிளர்ச்சிக்காரர்களை அடக்கி, ஜோர்ஜியாவிற்குப் பாடம் புகட்டி, பராக் ஒபாமாவின் செங்கோடு தாண்டிய சிரியாவைப் பாதுகாத்து அமெரிக்காவின் முகத்தில் கரிபூசி, எகிப்தை மீண்டும் தன் பக்கம் இழுத்து உலக அரங்கில் தலை நிமிர்ந்து நின்றது விளடிமீர் புட்டீர்ன் தலைமையில் இரசியா. அடுத்து உக்ரேனை ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைவதைத் தடுத்து தனது பொருளாதாரக் கூட்டமைப்பில் இணைப்பது இரசியாவின் இலட்சியமாக இருந்தது. அந்தத் திட்டத்திற்கு உக்ரேனில் நடந்த ஆட்சி மாற்றம் பேரிடியாக அமைந்தது. ஆனால் சுதாகரித்துக் கொண்ட புட்டீன் ஒரு துளி இரத்தம் கூடச் சிந்தாமல் கிறிமியாவைத் தனதாக்கினார். புட்டீன் சீன அதிபர் ஷி ஜின்பிங்கைத் தொடர்பு கொண்டு உக்ரேன் விவகாரத்தில் தனக்கு ஆதரவு வழங்கும் படி வேண்டினார். ஆனால் சீன அதிபர் பட்டும் படாமலும் பதில் கொடுத்து விட்டார். சீனாவிற்கும் இரசியாவிற்கும் இடையில் இனி வரும் காலங்களில் மத்தி ஆசியப் பிராந்தியம் தொடர்பான ஆதிக்கப் போட்டி வரும் வாய்ப்புக்கள் நிறைய இருக்கின்றன.

### ◆ கிறிமியா நிச்சயம் உக்ரேன் இலட்சியம்

இரசிய அதிபர் புட்டீனைப் பொறுத்தவரை கிறிமியாவைத் தனதாக்குவது நிச்சயம். பின்னர் உக்ரேனில் தனக்குச் சார்பானவர்களை ஆட்சியில் அமர்த்துவது

*- தொடர்ச்சி 25ம் பக்கம்*

**கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?**

**தனிநபரோ... வியாபாரமோ...**

- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

**இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்**

**உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்**



BBK PARTNERSHIP
www.bbkca.com
Email:
admin@bbkca.com

Chartered Accountants and Business Recovery Professionals

- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Liquidations
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Bookkeeping

BARNET-LONDON
020 8216 2520
MR. BRIAN

CROYDON
020 8150 9950
MR SIVA RANJAN

CAMBRIDGESHIRE
01354 707 911
MR. VAHEESAN

R3
THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS IN ENGLAND AND WALES

# David Cameron must now deliver on his pledge for international investigation into Sri Lanka's war crimes



By Kerry McCarthy

Writing in the Tamil Guardian, Labour's shadow foreign affairs minister, Kerry McCarthy, called on the British government to: (1) Be unequivocal and unwavering in its support for an independent, international inquiry into war crimes in Sri Lanka; (2) Make every effort to secure widespread support for a robust resolution at the UN Human Rights Council; and (3) Ensure an international inquiry commences swiftly.

Naturally, the crisis in Ukraine and efforts to secure a diplomatic resolution are foremost in our minds at the moment, but we cannot allow the 25th session of the UN Human Rights Council (HRC), starting this week in Geneva, to be overlooked.

Throughout March, the Council will be discussing a range of important issues and the most serious of human rights violations. On Sri Lanka specifically, David Cameron has a personal responsibility to push for action and, with the UK re-taking a seat on the Council this year, he has a prime opportunity to do so.

The Prime Minister was praised for raising human rights concerns when he visited Sri Lanka for the Commonwealth Heads of Government Meeting (CHOGM) last November. It was by no means clear that this was his original intention, having rejected Labour's calls for him to use his potential attendance at CHOGM as leverage, to try to secure progress on human rights in the run up to the event. Having come under strong pressure from campaigners, Channel 4 News, members of the public and Labour's frontbench, the Prime Minister was forced to change his agenda at the last minute, but at least his overdue intervention was a positive step.

It was, however, deeply disappointing that he failed to call then for an international inquiry into alleged war crimes by both sides during the Sri Lankan civil war. The Prime Minister overlooked President Rajapaksa's repeated failures since the war ended in 2009 to deliver an independent, credible investigation, to address human rights abuses suffered by Sri Lankans to this day, or to implement the recommendations of his own Lessons Learnt and Reconciliation Commission – the President's attempt to draw a line under the past atrocities in which 40 000 civilians lost their lives.

Labour has been calling for an international inquiry since 2011. The Prime Minister's ultimatum – giving President Rajapaksa until this March to start his own inquiry – was naïve to say the least.

The UN High Commissioner for Human Rights has now, predictably, confirmed that Sri Lanka has not made the necessary progress, just as it had not during the preceding months and years. The High Commissioner conclusively recommended initiating an international investigation and the junior Foreign Office Minister, Hugo Swire, confirmed last week that the Government will be supporting this at the Human Rights Council.

The Government has Labour's full support in this, but the Prime Minister must learn from his past mistakes and cannot rely on a last minute intervention. He chose to go to CHOGM last year - against the advice of human rights experts and world leaders – and he cannot turn his back on the people of Sri Lanka once the cameras are off.

Over the next month, the Prime Minister must:

**1)** Be unequivocal and unwavering in support for an independent, international inquiry

The case for an international investigation is beyond doubt. The Prime Minister must now demonstrate a personal commitment to ensure the final resolution at the HRC mandates an international investigation. Nothing less will do.

**2)** Make every effort to secure widespread support for a robust resolution

Douglas Alexander, Labour's Shadow Foreign Secretary, and I have been pressing both the Prime Minister and the Foreign Secretary to make concerted efforts to secure votes at the HRC and reduce the risk of a resolution being watered down.

We have received only vague replies, so the Government must now prove they are not only working with those countries that are minded to support an inquiry but also of lobbying the more reticent Human Rights council members to build broader support and demonstrate the extent of the international community's concern.

The resolution too must address the ongoing human rights concerns in Sri Lanka, including the prevalence of sexual violence, the role of the military, the attacks on religious minorities and the intimidation of human rights defenders, lawyers and journalists.

**3)** Ensure an international inquiry commences swiftly

The Prime Minister allowed President Rajapaksa another 4 months to deliver the inquiry he has been avoiding for 4 years. An international investigation has been delayed for long enough so the HRC not only needs to agree on the principle of an international inquiry, but also on the actual details of the inquiry and its resources to guarantee swift progress.

When we have asked Foreign Office Ministers about the text of a resolution, the terms of reference for an inquiry and its membership, we have been told it's "too soon" for this or "too early to make a judgement" on when an international inquiry could commence and conclude.

After a 26 year war, the people of Sri Lanka have been waiting since 2009 for truth, justice and reconciliation. This is not "too early" - action by the international community cannot come soon enough.

Agreement at the HRC will require strong leadership and personal diplomacy. The Prime Minister cannot delegate this to junior Ministers alone.

He made a commitment to the people of Sri Lanka back in November and now it is time for David Cameron to deliver.

*Courtesy: Tamil Guardian*

# International Community has deceived Tamils on international investigations



*- Ananthy Sasistharan*

"The International Community has deceived the genocide affected Tamils on delivering international investigations," said Ananthy Sasitharan, a councillor of the Northern Provincial Council at a press conference held in Jaffna on Thursday. "The draft resolution being cirulated in Geneva has failed to satisfy even the minimum expections totally disregarding the repeated requests from Tamils to deliver international investigations, and in complete contrast to the impressions given to the Tamils by the international community," she told the press. Ms Ananthy Sasistharan also blamed TNA parliamentarian M.A. Sumanthiran for having instructed her to be silent at a crucial meeting with the representatives of 18 countries during her recent visit to Geneva.

"There was no restriction placed on me before I left the island. In fact, I was encouraged by the ITAK leaders and the Chief Minister of the NPC to accompany the ITAK delegation to Geneva," Ms. Ananthy told the reporters at Jaffna Press Club.

"However, after a couple of meetings at Geneva, I was instructed by Mr Sumanthiran — especially before a crucial meeting with the representatives of 18 countries — that I should refrain from addressing the delegates directly. He justified his stand by telling me that there was a perception among the international players that I was linked to the Tigers in the past and adviced me to remain silent," she said.

Mr Sumanthiran was only demanding to extend support to the resolution to be tabled by the USA. The need for investigating war crimes was mentioned, but he didn't demand an international investigation, she said adding that there was no mention of genocide despite a resolution was passed in the NPC demanding international investigations on the situation equivalent to genocide, Ananthy told the reporters who were repeatedly asking her to clarify whether Mr Sumanthiran demanded an international investigation or not.

However, Mr Sumanthiran took up the issues of land grab, the conduct of SL Defence Secretary Gotahaya Rajapaksa in the militarisaton and the question on what happened to the surrendees and the missing people, she said.

*Courtesy: TamilNet*




✓ Accountancy & Auditing
✓ Business Start up Advice
✓ Business Plans & Cash Flow Forecasts
✓ Personal tax Affairs & Self Assesment
✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
✓ Company Formation
✓ Attending VAT & PAYE visits
✓ Tax Investigations
✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

# Tamil Christian Priests Call For International Investigation On Sri Lanka

*Two hundred and five Tamil Christian priests from North and East including Mannar Bishop have written to the members of UN Human Rights Council calling for international investigation on Sri Lanka's war crimes and human rights violations. The priests call for a strong and action oriented resolution on Sri Lanka at the 25th session of the UN Human Rights Council.*

*We publish below the statement in full;*

Before the 19th and 22nd sessions of the UN HRC, some of us, as Tamil Christian clergy serving in the war ravaged North and East of Sri Lanka, wrote to the members of the UN HRC, appealing to appoint an international mechanism to look into allegations of violations of international humanitarian and human rights law, during the war in Sri Lanka. We have experienced, heard and seen indications of numerous such allegations. Our own experience and knowledge correspondent to the findings and recommendations of the UN Panel of Experts, the UN High Commissioner for Human Rights and well known Sri Lankan and international human rights organizations.

Some of us have engaged with the government of Sri Lanka and numerous governmental bodies and ad hoc Commissions of Inquiries such as the LLRC, but almost 5 years after the end of the war, we have not seen any truth and justice emerging from domestic mechanisms. On the other hand, some of us and others who have engaged with domestic mechanisms have been interrogated, threatened and intimidated.

The letter and spirit of even the limited positive findings and recommendations of the LLRC are not being implemented. And even the symbolic recommendations, such as those related to singing of the national anthem in two languages, commemorating the dead, public apology have not been implemented.

Disappearances, sexual abuse, arrests, detention and torture under the Prevention of Terrorism Act, restrictions and attacks on freedom of assembly, expression, association and movement continue to date. Collective commemoration of dead and disappeared and religious freedom is restricted. Those who criticize, question and challenge government policies and practices, and those who engage with the international community on human rights issues, are branded as terrorist supporters / traitors. They are threatened, interrogated, intimidated by the government's security apparatus. Some of us have also been targeted in this manner. We are aware that writing this letter and engaging with the UN HRC itself can make us vulnerable to risks, and several of the more vulnerable clergy are not signing onto this, even though they agree with the contents.

The military continues its interference in civil and economic activities, especially in the North and East, undermining the civil and economic empowerment of local people, public officials and elected local government bodies.

We are aware and concerned that such incidents have also spread to other parts of the country, including attacks on Muslim and Christian communities across the country.

At the same time, we are concerned about the post war intensification of systematic efforts to destroy the identity of the Tamil community. This is particularly so by grabbing land for military establishments, development projects and government organized settlement of Sinhalese in the North and East, where Tamils have historically been the majority. The imposition of majority Sinhalese language and majority Buddhist religion in the North and East is another indication of attempts to destroy our identity. There has been no genuine political process to address the root causes of the conflict, which are being aggravated. Thus, there is a need for the international community, through the UN, to find creative ways of assisting Tamils to live in dignity as a nation.

Many of the announcements made by the government are red herring to deceive the international community. The appointment of yet another Commission of Inquiry to look into disappearances, a new census conducted to determine casualties and damages during war, announcement of South African styled Truth & Reconciliation Commission, military tribunals investigating allegations against themselves, are some of the latest such efforts. The mandate given to the Tamil National Alliance by over 78% of the people in the Northern Province is not being respected and in this context, the holding of the elections is becoming meaningless.

Many of the announcements made by the government are red herring to deceive the international community.

It is in this context that we are appealing to you again, to adopt a resolution at the 25th session of the HRC in March 2014 that will appoint an international investigative mechanism that will note the above and will;

01. investigate allegations of violations of international human rights and humanitarian law during the war by all parties to the conflict, moving beyond existing findings, such as "credible allegations", which have already been established by the UN Panel of Experts and others

02. identify clearly specific units and individuals responsible, with a focus on most responsible senior officials

03. monitor ongoing human rights violations all over Sri Lanka

04. monitor progress, assist and advice on domestic accountability mechanisms for past allegations

05. consist of experts from different parts of the world, and supported by a well resourced secretariat with competent full time staff

06. receive input from the Office of the High Commissioner for Human Rights and Special Procedures of the UN HRC

07. provide for victim and witness protection

08. have an initial mandate of one year, with an interim report being presented to the 27th session of the UNHRC and full report to the 28th session of the UNHRC, where an extension and enhancement of the mandate could be considered

09. recommend next steps at national and international level towards ensuring accountability

10. have unrestricted access to all relevant places, people and documents.







# KIDS பேப்பர்

## Colouring - 213



## தினம் ஒரு குறள்

*ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன்
நெஞ்சத்து அழுக்காறு இலாத
இயல்பு.*

பொருள்:- ஒருவன் தன் நெஞ்சில் பொறாமை இல்லாமல் வாழும் இயல்பைத் தனக்கு உரிய ஒழுக்க நெறியாகக் கொண்டு போற்ற வேண்டும்.

## JOKES

Question: What did the spider do on the computer? Answer: Made a website!

Q: What did the computer do at lunchtime? Had a byte!

Q: What does a baby computer call his father? Data!

Q: Why did the computer keep sneezing? It had a virus!

Q: What is a computer virus? A terminal illness!

Q: Why was the computer cold? It left it's Windows open!

Q: Why was there a bug in the computer? Because it was looking for a byte to eat?

Q: Why did the computer squeak? Because someone stepped on it's mouse!

Q: What do you get when you cross a computer and a life guard? A screensaver!

Q: Where do all the cool mice live? A: In their mousepads

## பொன்மொழிகள் சில

- சிந்தனை இல்லாத படிப்பு, பயனில்லாத உழைப்பு, படிப்பில்லாத சிந்தனை இவை மூன்றும் ஆபத்தானவை
- பிரார்த்தனைகளை விடவும் மிகவும் உயர்ந்தது பொறுமைதான்!
- அமைதியை விட மேலான மகிழ்ச்சி வேறெதுவும் இல்லை!
- பொறாமையினால் ஒருவனின் மனதில் உருவாகும் விஷம் இறுதியில் அவனையே அழித்து விடும்
- சுதந்திரமாக இரு. எவரிடமும் இருந்து எதையும் எதிர்பார்க்காதே
- படிப்பு என்ற மெழுகுவர்த்திக்கு ஆர்வமே திரி
- வெற்றி என்பது முழுத் தியாகமும் செய்த பின்னரே கிடைக்க்க்கூடிய ஒன்று
- ஒன்றும் தெரியாது என்று நினைப்பவனுக்கு கொஞ்சமாவது அறிவு உண்டு. ஆனால், எல்லாம் தெரியும் என்று நினைப்பவன் முழு மூடன்.

## டிஸ்னி உலகம் - Disney World



- டிஸ்னி உலகம் அமெரிக்காவில் அமைக்கப்பட்டிருக்கிறது.

- டிஸ்னி உலகம் ஆனது டிஸ்னி உலகம் என்ற பெயரிலான நகரில் இருக்கிறது.

- டிஸ்னி உலகம் வால்ட் டிஸ்னியால் உருவாக்கப்பட்டது.

- ஆரம்பத்தில் டிஸ்னி உலகம் எட்டு ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்படத் திட்டமிடப்பட்டது.

- டிஸ்னி உலகம் கட்டும் பணிகள் முதலில் தடைப்பட்டது. இடப்பரப்பு போதுமானதாக இருக்காது என்று உணரப்பட்டதால்.

- டிஸ்னி உலகம் என்ற பெயர் முதலில் வால்ட் டிஸ்னி நடத்திய தொலைக்காட்சி நிகழ்ச்சிக்குப் பெயராகப் பயன்படுத்தப்பட்டது.

- டிஸ்னி உலக வளாகத்தினுள் தடை செய்யப்பட்டுள்ள முக்கியமான பொருட்கள்:சூயிங்கம் மற்றும் மது பானங்கள்.

- டிஸ்னி உலக வேலைகள் நடைபெறும்போது வால்ட் டிஸ்னி அடிக்கடி வந்து பார்ப்பார். அமைப்பு வேலைகளைக் குழந்தைகள் எப்படி விரும்புவார்கள் என்கிற கோணத்தில் ஆராய்வார்.

- டிஸ்னி உலகம் முதன்முதலாக 1955 ஜூலை 17 அன்று திறந்து வைக்கப்பட்டது.

- டிஸ்னி உலகத் திறப்பு விழாவிற்கு 6000 அழைப்பிதழ்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

- டிஸ்னி உலகத் திறப்பு விழாவிற்கு 28 ஆயிரத்திற்கும் அதிகமான பேர்கள் அனுமதிச் சீட்டு வாங்கிக் கொண்டு கலந்து கொண்டார்கள்.

- டிஸ்னி உலகத் திறப்பு விழாவிற்கு வந்தவர்கள் வைத்திருந்த அனுமதிச் சீட்டுகளில் பெரும்பாலானவை போலிச் சீட்டுகளாகும்.

- டிஸ்னி உலகம் அமைக்கப்பட 1,70,00,000 டொலர்கள் செலவாகியதாம்.

- டிஸ்னி உலகம் அமைக்கப்பட்டுள்ள இடத்தில் அதற்கு முன் ஒரேஞ்சுத் தோப்பும் வால்நட் மரங்கள் நிறைந்த காடும் இருந்தன. பரப்பளவு 180 ஏக்கர்.

- டிஸ்னி உலகத்தினுள் உள்ள விலங்குகள் உண்மையான விலங்குகளைப் போலத் தோற்றம் தரக்கூடிய, செயற்கையாக உருவாக்கப்பட்ட விலங்குகள்.



## AMAZING FACTS ABOUT ANIMALS

- Kangaroo - Kangaroos use their tails for balance, so if you lift a kangaroo's tail off the ground, it can't hop.
- Spider- On average, there are 50,000 spiders per acre in green areas. Bet you'll think twice before going outside now, unless you're this guy
- Housefly - Houseflies don't allow their short lifespans (14 days) to hinder their musical abilities. They always hum in the key of F.
- Elephants - Elephants can smell water up to 3 miles away.
- Cat - A cat has 32 muscles in each ear.
- Snail can grow back a new eye if it loses one.
- Seahorse - The slowest fish is the seahorse, which moves along at about 0.01 mph.
- Dog - Dogs' nose prints are as unique as human fingerprints and can be used to identify them.
- Hummingbird - Hummingbirds their wings can beat at up to 80 times per second.



### Dear Kids...

Colour and Send in a picture to ORU PAPER. you could be the lucky winner Gift from Orupaper Gift Team.

நீங்களும் ஒரு பேப்பர் வழங்கும் பரிசினைப் பெற படத்திற்கு அழகுற வர்ணம் தீட்டி எங்களுக்கு அனுப்பி வையுங்கள்..

**Visit our Web: www.facebook.com/ orupaper**



**Issue 212 Winner**

**R. Sujenthiny**




**Sujenthiny. R**



**Rajalingam.S**



**Sutharshan Nilani**



**R.Mazneen**

## Tips of the Week

ஹலோ குட்டீஸ் இந்த வாரம் www.friv.com என்ற இணையத்தளத்தை சும்மா ஒரு தடவை தட்டித்தான் பார்ப்பமேன். இத்தளம் விசேடமாக Online Game சிறுவர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ள இணையத்தளமே இது. அதுமட்டுமல்ல உங்களுக்குப் பிடித்த பல பயனுள்ள தகவல்களையும் கொண்டமைந்துள்ளது இந்தத் தளத்தை ஒருக்கா தான் கிளிக் பண்ணிப் பாருங்களேன், வாங்க குட்டீஸ் பழகலாம் ..... உங்களுக்குத் தெரிந்த தளங்களையும் சொல்லுங்கள் மற்ற சிறுவர்களுடன் பகிர்ந்து கொள்ளுவோம்.

**Web Address : http://www.friv.com**

## தம்பி தங்கைகளே.....

உங்களது பிறந்தநாள் வாழ்த்துகள், குட்டிக்கதைகள் மற்றும் படங்கள் வரைந்தும், விடுகதைகள், என்று எதுவானாலும் உங்களது பெயரைக் குறிப்பிட்டு எமது முகவரிக்கு மின்னஞ்சல் மூலமோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வையுங்கள். அனுப்பும் போது உங்கள் பெயர் முகவரியுடன் உங்கள் நிழற்படத்தையும் அனுப்புங்கள்.

அஞ்சல் முகவரி : G11 Lombard House, 2 Purley Way, Croydon, CR0 3JP

**ORU PAPER, G11, Lombard House, 2, Purley Way, Croydon, CR0 3JP**


Basil Leaf
Basil leaf Pizzeria & Grill!
Specialist in Halal Italian Foods
BASIL LEAF
PIZZERIA & GRILL
70 க்கும் மேற்பட்ட இருக்கைகளைக் கொண்ட விசாலமான உணவகம்
( Pooja Sweetsற்கு அருகாமையில்)
Wide variety of Pizzeria & Grill foods from 15 years experienced chef.
நாவிற்குச் சுவையான Spicy Pizza & Grill Foods வகைகளும் கிடைக்கும்
164 Upper Tooting Road, London, SW17 7ER
[ Next to Pooja Sweets ]
Tel : 02086724193 / 0208767 9958
Book your Party here!
A perfect Place to Celebrate Your kid's birth-day Party & office parties With GREAT value
15% Discount
Dining
Takeaway
Delivery
It is not valid for any other deals or Offers
E&OE
Valid till : 31 March 2014
Mail : info@basilleafpizza.com | Web : www.basilleafpizza.com
BAR வசதியும் உள்ளது


USL
UNIVERSAL SUPPLIERS LIMITED
QUALITY PRODUCTS
Exclusive Distributor
UNIVERSAL SUPPLIERS LTD
0044 (0) 2087955224
SPECIAL OFFER
ANY
3
FOR
£4
LIMITED TIME ONLY
இலங்கையின்
ஜாம்
மன்னர்கள்
MD
அதிக பழம்
அதிக பெறுமதி
MANGO JAM
PASSION FRUIT JAM
WOODAPPLE JAM
STRAWBERRY FLAVOURED MELON JAM
MIXED FRUIT JAM
PINEAPPLE JAM
EXTRA 35g

# அண்ணை றைட்...



கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் பாலச்சந்திரன்

10-07-1944 26-02-2014

## போட்டு வாங்கோ பாலா அண்ணை...

ஒரு பேப்பர்
ORU PAPER

# பருவத்தே பயிர் செய்



இயற்கையின் வளங்களில் ஒன்றான பருவம் மனிதருக்கு மகத்தான சொத்து பருவகாலங்கள் பொய்த்ததில்லை. அந்தந்தப் பருவத்தில் எது நடக்குமோ அதன்படி நடப்பதை நாம் காணலாம். கடல் அலைகள் கூட இயற்கையின் நியதிக்கேற்றவாறு, காலையில் வற்றியும் மாலையில் பெருகியும் காணப்படுவதை கண்ணால் காண முடியும். அதனால்தான் பருவத்தை அனுசரித்தே எமது தொழிலை நாம் செய்ய வேண்டும்.

விஞ்ஞானம் எவ்வளவு தூரம் முன்னேறினாலும், அதனால் ஒரு கடல் கொந்தளிப்பையோ, வெள்ள அனர்த்தத்தையோ, சூறாவளியையோ, எரிமலையையோ, தடுக்க முடிவதில்லை. எனவே, பருவ காலங்களைப் பயன்படுத்தியே மனிதர்கள் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். உணவுக்கு அத்தியாவசியமான பயிர்களை அதற்குரிய பருவ காலத்திலேயே விளைவிக்காது போனால், உலகமே பட்டினியால் வாடவேண்டி வரும். எனவே, பயிர் செய்கைக்கு வேண்டிய முயற்சிகளான உழுதல், எரு இடுதல், களை பிடுங்குதல், நீர் பாய்ச்சுதல், காவல் காத்தல் போன்ற ஐந்து தொழில்களையும் அந்தந்தப் பருவத்திலேயே செய்வது அவசியம். இதனை வலியுறுத்தியே ஔவையார் பருவத்தே பயிர் செய் என அறிவுரை செய்கிறார்.

இந்த அறிவுரை வெறும் பயிர்களுக்கு மட்டும் கூறி வைத்த ஒன்றல்ல. மனித வாழ்வுக்கும் பொருந்தக்கூடிய அறிவுரையாகும். கல்வியைக் கற்க வேண்டிய இளம்பிராயத்தில் கற்பது தான் உகந்தது. இந்தப் பருவத்தை தவறவிட்டவர்கள் பின்னால் வருந்துவதை எம்மால் அனுபவத்தில் காண முடிகிறது.

பெறுவதற்கு அரிய பிறவியான மனிதப் பிறவியில் மணவாழ்க்கை இன்றியமையாத ஒரு வரப்பிரசாதமாகும். மணவாழ்க்கையை ஆரம்பிக்க விரும்பும் ஆண், பெண் இரு சாராரும் அதற்குரிய பருவத்திலே ஈடுபடுபவர்களேயானால், உரிய காலத்தில் மக்கட்பேறை அடைவதற்கும் அது வழி வகுக்கும். மணவாழ்வை பின் தள்ளிப் போட்டவர்களின் குடும்பங்களில் மக்கட்பேறின்றி வாழ்நாள் முழுவதும் சஞ்சலப்படுவது சாதாரணமாக எமக்குக் கிடைக்கும் செய்திகள்.

எக்காரியத்தையும், அக்காரியம் செய்வதற்கான உரிய பருவகாலத்தில் செய்வதால், அதனால் கிடைக்கும் பலன்கள் அளப்பரியது என்பதை நினைவூட்டுவதே பருவத்தே பயிர் செய் என்ற ஔவையாரின் அறிவுரையாகும்.

# இதய சிகிச்சையில் சாதனை

இதயத் துடிப்பு சீரற்று இயங்கும் காரணத்தினால் பேஸ்மேக்கர் (Pacemaker) எனும் மருத்துவ கருவியை உலகம் பூராகவும் 4 கோடி மக்கள் பாவித்து வருவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. வருடமொன்றுக்கு இக்கருவியைப் பொருத்துவதற்கு 700,000 இதய நோயாளிகள் காத்திருப்பதாகவும் அறிய முடிகிறது.

இக்கருவியைப் பொருத்துவதற்கு, நோயாளர்களின் உடலில் அறுவைச் சிகிச்சை மேற்கொண்டு, பேஸ்மேக்கர் பொருத்துவது தான் தற்போது கடைப்பிடிக்கப்படும் மருத்துவ முறை. இந்த பேஸ்மேக்கர் ஈயத்தால் தயாரிக்கப்பட்டது. இதை ஒழுங்காக இயக்க வைப்பதற்கு மின் இணைப்பும், அதைத் தொடர்புபடுத்த வயர் இணைப்பும் தேவைப்படுகிறது. இதன் எடையைக் குறைக்கவும், மின் இணைப்புகளைத் துண்டிக்கவும் மேற்கொண்ட ஆராய்ச்சியில், அதிசயிக்கத்தக்க வகையில் அமெரிக்காவை வாழ்விடமாகக் கொண்ட இந்திய வம்சாவளி மருத்துவர் விவேக் ரெட்டி புதிய சாதனை படைத்துள்ளார்.

இவர் கண்டுபிடித்துள்ள பேஸ்மேக்கர் கருவி, சில்வர் உலோகத்தால் தயாரிக்கப்பட்டது. இதன் எடை 10 மடங்கு சிறியதாகவும் எதுவித மின் இணைப்புமின்றி, உறைவடிவில் (Capsules) இதயத்துடன் பொருத்துவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. அறுவைச் சிகிச்சை எதுவும் மேற்கொள்ளாமல் உடலின் அடி வயிற்றின் கீழாகவும், தொடைப் பகுதியின்றும் இதயத்துக்கு குருதியை கடத்திச் செல்லும் நாளாத்தின் மூலமாக ஒரு கதீற்றர் (Catheter) வழியாக இந்த பேஸ்மேக்கரை இதயத்தில் பொருத்த முடியுமென நிரூபித்துள்ளார்.

## தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

நியூயோர்க்கில் உள்ள த மவுண்ட் சினாஸ் என்ற மருத்துவமனையில் பணியாற்றும் மருத்துவர் விவேக் ரெட்டி, அவர் அறிமுகப்படுத்தியுள்ள Leadless II என்ற இந்த மருத்துவ உபகரணத்தை 670 நோயாளிகளுக்கு பொருத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதை அறிகிறோம். இவருடைய சாதனைக்கு வாழ்த்து தெரிவிக்கும் அதேவேளை எமது அயலவர் என்று கூறுவதிலும் பெருமிதம் அடையலாம்.

# காணாமல் போனவர்கள் கிடைப்பார்களா ?

அடிக்குமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பார்கள். இதுதான் இலங்கை அரசாங்கத்துக்கும் இன்று ஏற்பட்டுள்ள நிலைமை பாதுகாப்புக் கருதி அரசினரிடம் சரணடைந்தவர்களையே காப்பாற்ற திராணியற்ற அரசாங்கம் காணாமல் போனவர்களையோ கண்டுபிடிக்கப் போகிறது.

போர் முடிவுக்கு வந்து 5 வருடங்கள் ஆகியும், காணாமல் போனவர்கள் சம்பந்தமாக தேடித் தேடி அலைந்த உறவினர்கள் மீது எவ்வித அக்கறையும் காட்டாத அரசு, சர்வதேச அழுத்தத்தின் நிமித்தம் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு அவசர அவசரமாக சாவகச்சேரியிலும், யாழ்ப்பாணத்திலும் தமது விசாரணைகளை முடித்துக் கொண்டுள்ளது.

மார்ச் மாதம் ஜெனீவாவில் முகம் கொடுக்க இருக்கும் மனித உரிமைகள் பற்றிய ஐ.நா.வின் கூட்டத் தொடரில், இலங்கை மீது சுமத்தப்படவிருக்கும் குற்றச்சாட்டுக்களை சமாளிப்பதற்காகவே, ஜனாதிபதி ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் கைகொடுக்கும் என்ற நம்பிக்கையில், இலங்கை அரசின் நகர்வுகள் இருந்தாலும், விசாரணைகளில் வெளிப்பட்டுள்ள காணாமல் போனவர்கள் பற்றிய விபரங்கள், அரசாங்கத்துக்கு எதிர்பாராத தலைவலியைக் கொடுக்கப் போவது நிச்சயம்.

எத்தனை முட்டுக்கட்டைகள், எத்தனை அச்சுறுத்தல்கள் அத்தனையையும் பொருட்படுத்தாமல், காணாமல் போனவர்கள் பற்றியும், அவர்களை கடத்திச் சென்றவர்கள் பற்றியும் எதுவித அச்சமோ, தயக்கமோ இன்றி ஜனாதிபதி ஆணைக்குழுவினர் முன்னிலையில் சாட்சி பகிர்ந்த உறவினர்கள் குறிப்பாகப் பெண்களை இங்கு பாராட்டாமல் இருக்க முடியாது. ஏனெனில் அவர்கள் காட்டிய துணிவும், நெஞ்சுரமும் எழுத்தில் அடங்கா. அவர்கள் ஏழுப்பிய மனித உரிமையின் குரல், ஜெனீவாவில் எதிரொலிக்கும் என நம்புகிறோம்.

அரசின் பாதுகாப்பிலுள்ள சிறைச்சாலைகள் ஒவ்வொன்றிலும் அடைத்து வைக்கப்பட்டிருக்கும், சிறைக் கைதிகளின் விபரங்கள் அழிக்க முடியாத பதிவேட்டுக்களில் பதியப்பட்டுள்ளன. இந்தப் பகுதிகளில், காணாமல் போனவர்களின் விபரங்கள் இல்லாதுபோனால், காணாமல் போனவர்கள் எங்கே என்பது தான் மில்லியன் டொலர் கேள்வி. பதில் கிடைக்குமா? அல்லது இதுவும் இன்னுமொரு கண்துடைப்பு நாடகமா? பொறுத்து இருந்து தான் பார்க்க வேண்டும்.



# ஜெனீவா ஐ.நா மனித உரிமைக்கழகம் கொற்றவையா ? கொலு மண்டபமா ?



**வேல் தர்மா**

*(ஒரு பேப்பருக்காக)*

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைக் கழகத்தின் 'பூர்வாச்சிரம நாமம்' ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக்கான ஆணையகம் என்பதாகும். UNCHR என இருந்ததை 2006-ம் ஆண்டு UNHRC எனப் பெயர் மாற்றம் செய்தனர். 1946-ம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக்கான ஆணையகம் ஐநா சபையில் ஒரு பகுதியாகவே இருந்தது. 2006-ம் ஆண்டு பெயர் மாற்றிய போது அது ஐநாவின் துணை அமைப்பானது.

## ஐநா மனித உரிமைக்கழகம் எந்த நாட்டையும் தண்டித்ததாகவோ அல்லது ஒரு இனத்திற்கு விடுதலை பெற்றுக்கொடுத்ததாகவோ வரலாறு இல்லை.

1948-ம் ஆண்டு செய்யப்பட்ட உலகளாவிய மனித உரிமைப் பிரகடனம் {The Universal Declaration of Human Rights (UDHR)} ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக்கழகத்தின் முக்கிய ஆவணமாகும். இந்தப் பிரகடனத்திற்கு இணங்க செயற்படுவது ஐநாவின் தலையாய கடமை எனப்படுகிறது. குடியுரிமை, அரசியல், பொருளாதார சமூக உரிமைகளை அனுபவிக்கும் உரிமை சகலருக்கும் உண்டென்பதை இப் பிரகடனம் வலியுறுத்தியது. ஆனால் 1964இல் இந்தியா இலங்கையுடன் சிறிமா-சாஸ்த்திரி ஒப்பந்தம் 150,000 தமிழர்களை நாடற்றவர்களாக்கியது. இது ஐநா மனித உரிமைப் பிரகடனத்திற்கு எதிரானது. ஆனால் இதைப் பற்றி மனித உரிமைக்கழகமோ ஐநா சபையோ அலட்டிக் கொள்ளவில்லை.

உலகில் உள்ள மனித உரிமைகள் தொடர்பாக ஆய்வு செய்தும் கண்காணித்தும் பகிரங்க அறிக்கை சமர்ப்பிப்பதுவே ஐக்கிய நாடுகள் சபையின் தலையாய பணியாகும். இங்கு நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது இது ஒரு தண்டனை வழங்கும் அமைப்பல்ல.

### ◆ மனித உரிமைகள் என்றால் என்ன?

எல்லா மனிதர்களுக்கும் உரித்தான அடிப்படை உரிமைகளும் சுதந்திரமும் மனித உரிமைகள் எனப்படும்.

### ◆ உரிமை என்பது எத்தைகயது?

சுதந்திரமாக மற்றவர்களைப் பாதிக்காத வகையில் செயற்படும் அனுமதி உரிமையாகும். ஒருவருக்குத் தனது கைத்தடியை சுழற்ற உரிமை உண்டு ஆனால் அது மற்றவர்மேல் படாமல் இருக்க வேண்டிய பொறுப்பும் அவருக்கு உண்டு.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பிரகடனத்திலும் இதன் பிறகு வந்த பல மனித உரிமைகள் தொடர்பான ஒப்பந்தங்களிலும் கையெழுதிட்ட நாடுகள் இவற்றை மதித்து நடக்கும் கடப்பாடுடையன. பல நாடுகள் இதற்கு ஏற்றாற் போல் தமது நாட்டுப் பாராளமன்றத்தில் சட்டங்களை சமர்ப்பித்து நிறைவேற்றி உள்ளன. பல நாடுகளின் மனித உரிமை ஆணையகங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இந்தியாவில் தேசிய மனித உரிமை ஆணையம் அமைக்கப் பட்டுள்ளது. இது தன்னாட்சி உடையது என்று சொல்லப்படுகிறது.

### ◆ ஐக்கிய நாடுகளின் மனித உரிமைக் கழகம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் கழகத்தின் நிலை ஐக்கிய நாடுகளின் பாது காப்புச் சபையிலும் கீழானது. இதன் 47 உறுப்பினர்களையும் பொதுச் சபையின் 193 உறுப்பினர்கள் தெரிவு செய்வர். பிராந்திய அடிப்படையிலும் மக்கள் தொகை அடிப்படையிலும் 47 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர:

- *ஆபிரிக்கநாடுகளில் இருந்து 13 உறுப்பினர்கள்.*
- *ஆசிய நாடுகளில் இருந்து 13 உறுப்பினர்கள்.*
- *கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து 6 உறுப்பினர்கள்.*
- *லத்தின் அமெரிக்க நாடுகள் மற்றும் கரிபியன் நாடுகளிலிருந்து 8 உறுப்பினர்கள்.*
- *மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து 7 உறுப்பினர்கள்.*

உறுப்புரிமை மூன்று ஆண்டுகள் நீடிக்கும். சுழற்சி முறையில் உறுப்பினர்கள் தெரிவு செய்யபடுபவர். மனித உரிமைக் கழகக் கூட்டத் தொடர்களில் எல்லா நாடுகளும் (தற்போது 197) பங்கேற்கலாம். ஆனால், வாக்கெடுப்பு என்று வரும் போது இந்த47 நாடுகள் மட்டுமே வாக்களிக்கலாம். கொண்டு வரப்படும் தீர்மானங்களில் எல்லா நாடுகளுக்கும் உரையாற்ற முடியும். மனித உரிமகள் கழகம் ஒரு நாட்டில் மனித உரிமைகள் மீறப் படுவதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி பாதுகாப்புச் சபையைக் கோரமுடியும். பாதுகாப்புச் சபை சில நடவடிக்கைகளை குறிப்பிட்ட நாட்டுக்கு எதிராக எடுக்க முடியும்:

- நாட்டுக்கு எதிராக பொருளாதரத் தடை, பயணத்தடை விதித்தல்.
- சர்வதேச குற்றவியல் நீதி மன்றில் வழக்குத் தாககுதல் செய்தல்.

இக்கழகத்தின் செயற்பாட்டை 2009இல் நாம் பார்த்தோம். இலங்கை அரசு மீது மனித உரிமை மீறல் தொடர்பான விசாரணையினை நடத்த ஐக்கிய நாடுகள் சபையின் மனித மனித உரிமைகள் ஆலோசனை சபை (United Nation Human Rights Council (UNHRC) முயன்று அது முடியாமல் போயுள்ளது. இலங்கை அரசிற்கு ஆதரவாக 29 நாடுகள் வாக்களித்து விசாரனையினை மேற்கொள்ளாது தடுத்துள்ளன. பின்னர் இந்தியா இலங்கையை பயங்கரவாதத்தை ஒழித்தமைக்காக பாராட்டுத் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்து நிறைவேற்றியது. இது பின்னர் ஐநாவின் தருஸ்மன் குழுவின் அறிக்கையில் தவறு எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

அநேகமாக எல்லா நாடுகளும் மனித உரிமைகளை மீறுகின்றன. இதனால் ஒரு நாட்டின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகத் தீர்மானம் கொண்டுவரப்படும் போது அதை மற்ற மனித உரிமை மீறும் நாடுகள் எதிர்க்கின்றன. இதற்கு முன்னர் இலங்கை தொடர்பாகக் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களை வெற்றியடையச் செய்ய அமெரிக்கா மிகக் கடுமையான பரப்புரையைகளையும் இராசதந்திர முயற்ச்சிகளையும் செய்ய வேண்டி இருந்தது.

ஜரோப்பிய நாடுகளான பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளின் படையினர் ஆப்கானிஸ்தானில் மேற்கொண்ட தாக்குதல்களில் அப்பாவி மக்களுக்கு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் சபையின் கணக்கீட்டின் பிரகாரம் கடந்த ஆண்டு மட்டும் 2000 ஆயிரம் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் இருந்து இவ் வருட ஜனவரி மாதம் வரை பலஸ்தீனிய காசா பிரதேசம் மீது இஸ்ரேலிய படையினர் மேற்கொண்ட தாக்குதலில் 500 மேற்பட்ட குழந்தைகள் கொல்லப்பட்டு இருந்தார்கள். இஸ்ரேலிய படையினர் ஐக்கிய நாடுகள் சபை கட்டிடம் மீது மேற்கொண்ட தாக்குதலில் சேதம் 10.4 மில்லியன் அமெரிக்க டொடலர் என ஐ.நாவினால் கணக்கெடுக்கப்பட்டது.

சோமாலியா , சிம்பாவே மற்றும் சிறிலங்கா ஆகிய நாடுகளில் ஏற்பட்ட இனப்பிரச்சனைகளில் பொது மக்கள் கொல்லப்பட்ட போது ஐக்கிய நாடுகள் சபை தனது கொடியினை உயர்த்தி நீட்டியது. ஆனால் பலம் பொருத்திய நாடுகள் ஈராக், ஆப்கானிஸ்தான், செச்சினியா , தீபெத் ஆகிய நாடுகளில் அப்பாவி மக்கள் மீது தாக்குதலை மேற்கொண்ட போது மௌனமாக இருந்தது. பலம் பொருத்திய நாடுகளும் தமது யுத்தத்தில் அப்பாவி மக்களை கொண்டுள்ளார்கள். மனித உரிமைகள் விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபை ஓர வஞ்சனையாக (Double standard) நடந்து கொள்ளுகின்றது என இதனை மேற்கோள் காட்டியே அரேபிய நாடுகள் கூட்டமைப்பும் அணிசேரா நாடுகளின் அமைப்பும் கூறியிருந்தது.

## அநேகமாக எல்லா நாடுகளும் மனித உரிமைகளை மீறுகின்றன. இதனால் ஒரு நாட்டின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகத் தீர்மானம் கொண்டுவரப்படும் போது அதைமற்ற மனித உரிமை மீறும் நாடுகள் எதிர்க்கின்றன.

இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கை அரசு ஒராண்டுக்குள் ஒரு நம்பகரமான உள்ளக விசாரணை செய்து முடிக்க வேண்டும் என கடந்த மூன்று ஆண்டுகளாக தீர்மானம் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது. இது இனிவரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து இலங்கை மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணை பிள்ளையார் திருமணம் போலாகுமா? ஐக்கிய நாடுகள் சபை நியமித்த தருஸ்மன் விசாரணைக்குழு இலங்கையில் மனித உரிமை மீறப்பட்டது மட்டுமல்ல இலங்கையில் போர்க்குற்றமும் மாநிடத்திற்கு எதிரான குற்றமும் இடம்பெற்றமைக்கா நம்பகரமான சாட்சியங்கள் உண்டு என்று சொல்லியுள்ளது.

கொற்றவையில் விசாரிக்காமல் கொலுமண்டபத்தில் விசாரித்துத் தீர்ப்பு வழங்கியதால் நீதி பிழைத்து மதுரைநகர் எரிந்த கதை நாம் அறிவோம். இலங்கையில் நடந்த அத்துமீறல்கள் தொடர்பாகவும் ஓரளவு அதிகாரமுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் கொற்றவையானபாது காப்புச் சபையில் தீர்மானங்களைக் கொண்டு வராமால் கொலு மண்டபமான மனித உரிமைக் கழகத்தில் ஓராண்டுக்குள் விசாரிக்கவும் என ஒவ்வொரு ஆண்டும் தீர்மானம் கொண்டு வருவதால் யாது பயனும் இல்லை.

ஐ.நா. மனித உரிமைக்கழகம் எந்த நாட்டையும் தண்டித்ததாகவோ அல்லது ஒரு இனத்திற்கு விடுதலை பெற்றுக் கொடுத்த தாகவோ வரலாறு இல்லை.


ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமானது, அவர்தம் ஆற்றலும் தனித்துவமானதே..

உங்கள் பிள்ளைகளும் கல்வியில் ஓங்கிட, நாளைய உலகின் சவால்களை வென்றிட..

Enrol them in Learna

• Individualised • Interactive • Inspiring

Maths & English Teaching for 4-16 years olds

FREE Assessment

We also prepare pupils for

• 11 plus entrance exams
• Key Stage 2 SATS examinations
• Key Stage 3 and GCSE Maths
• A' Levels - Maths, Chemistry & Physics



LEARNA because every child is unique

Call 0845 094 0061 or visit www.Learna.co.uk 5-6 The Broadway, Sutton, Surrey, SM1 4BU.

# மருத்துவர் மூர்த்தி அவர்களின் நினைவு வணக்க நிகழ்வுகள்












மாமனிதர் மருத்துவர் நமசிவாயம் சத்தியமூர்த்தி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு மார்ச் முதலாம் திகதி சனிக்கிழமை தென்மேற்கு லண்டன் குறொய்டன் பகுதியிலுள்ள லான் பிறாங் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பொதுச் சுடரை வெண் புறா நிறுவனத்தின் தொண்டர் திரு. இரத்தினசபாபதி ஏற்றி வைக்க, பிரித்தானியக் கொடியை மற்றொரு தொண்டர் மருத்துவர் நிலானி நக்கீரன், தமிழீழ தேசியக் கொடியை திரு. த. உதயணன் ஆகியோரும், ஈகச்சுடரை தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் தென்மேற்கு பிரதேச பொறுப்பாளர் திரு. நவமும் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் மலர் வணக்கத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து ரூற்றிங் நகரசபை உறுப்பினர் றெக்ஸ் ஒக்ஸ்போர்ன், வெண்புறா தொண்டரும் TTN தமிழ் ஒளியில் ஒளிபரப்பான நலவாழ்வு நிகழ்ச்சியின் தொகுப்பாளருமான திருமதி. துஸ்யந்தினி திலீபன், தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பிரித்தானியக் கிளையின் பொறுப்பாளர் கந்தையா ராஜமனோகரன் ஆகியோரது உரைகளும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

# நடக்க இருக்கும் நிகழ்வுகள்

MAR 29 SATURDAY

*World Tamil Short Film Festival*
*உலகத் தமிழர் குறும்பட விழா*
*நேரம்: மாலை 5.00 மணி முதல்*
*இடம்: Zoroastrian Centre*
*Alexandra Avenue, Harrow*
*தொடர்புகளுக்கு: www.worldtamilshortfilmfestival.com*

## தமிழ்ப்பெண்கள் அபிவிருத்தி மன்றத்தின் சர்வதேச பெண்கள் தின நிகழ்ச்சி

சர்வதேச பெண்கள் தினமானது உலக நாடுகள் அனைத்திலும் பல்வேறு பட்ட வடிவங்களில் சமூக கலாச்சார அழுத்தங்களாலும் சகல வழிகளிலும் பிரயோகிக்கப்படும் ஒடுக்குமுறைகளாலும் பாதிக்கப்படும் பெண்களினது தடைகளை அகற்றி அவர்களிற்குரிய உரிமைகளை பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடன் அனுட்டிக்கப்படுகின்றது.

இந்த விடயங்களை மனதிற்கொண்டு தமிழ்ப்பெண்கள் அபிவிருத்தி மன்றமானது (Tamil Women Development Forum) 2014 இற்குரிய சர்வதேச பெண்கள் தினத்தை தமிழர்தாயகத்தில் போரின் எச்சங்களாய் வாழும் எமது சகோதரிகளினதும் தாய்மார்களினதும் கௌரவத்தை நிலைநாட்டும் நோக்கத்துடனும் சிதைந்த வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்பும் நோக்கத்துடனும் அனைத்து பெண்கள் அமைப்புடனும் கைகோர்த்து பலத்துடனும் ஒருமைப்பாட்டுடனும் அனுட்டிக்கின்றனர்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களுடைய உரை புத்தக வெளியீடு கலந்துரையாடல் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்

காலம்: 08.03.2014 (மார்ச் 08)

நேரம்: காலை 10.00 - 02.00

இடம்: Canons High School, Shaldon Road, Edgware, Middlesex, HA8 6AN (Nearest Underground - Queensbury)

நடந்த நிகழ்வுகள் மற்றும் நடக்க இருக்கும் நிகழ்வுகளை பிரசுரிப்பதற்கு தொடர்பு கொள்ளுங்கள்

ABRA WHOLESALE LTD
LONDON'S LEADING WHOLESALER & EXPORTER
5 PICKETTS LOCK LANE
EDMONTON, LONDON N9 0AS
proud to be a member of LANDMARK WHOLESALE, LONDON CHAMBER OF COMMERCE AND INDUSTRY
ALCOHOL - TOBACCO - GROCERY - CONFECTIONERY - SOFT DRINKS - TOILETRIES - HOUSEHOLD

VACANCIES

- Finance Manager -

Package – Up to £30K PA + Bonus

Candidates must be qualified ACA/ACCA/CIMA (or equivalent) with previous accountancy experience, computer literate with good excel skills and solid understanding of accounting software principles. Previous retail/ wholesale sector experience is advantageous.

Ordering Clerk

Package – Up to £9 PH + Bonus

Duties include maintaining stock availability, raising purchase order, dealing with suppliers and general admin duties. Candidates must be computer literate with good communication and numerical skills. Product knowledge and previous retail / wholesale experience are essential.

To Apply: Email your CV with detail of your current package to sales@abrawholesales.co.uk

FRIDGE FREEZER DIRECT



www.fridgefreezerdirect.co.uk
Open 8:30 - 6:00 Monday to Thursday
8:30 - 5:00 Friday

Get an extra 5% off our already heavily discounted prices on all of our products.

Or call now for a quote on our top of the range Rational ovens.

CALL US ON 0845 68 00 695
AND QUOTE THE CODE "FFD-FIVE-PERCENT" *

*This offer is only available until 31st March, and is limited to one use per customer.



THE UK'S PREMIER COMMERCIAL REFRIGERATION AND CATERING EQUIPMENT SPECIALIST

# சுருட்டுக் கொட்டில்

யாழ்ப்பாணத்தின் கடும் உழைப்பை பறைசாற்றிய கைத் தொழில்களில் சுருட்டுத் தொழில் முக்கியமானது. புகையிலையை சுருட்டாக்கி விற்கின்ற தொழிலாக அது இருந்தது. இந்தச் சுருட்டுக்களை தயாரிக்கின்ற நிறுவனங்களாக சுருட்டுக் கொட்டில்கள் இருந்தன. காசுப் பயிர் என்று வர்ணிக்கப்பட்ட புகையிலை அன்றைய நாட்களில் யாழ்ப்பாணத்தின் வருவாய் ஆதாரங்களில் முக்கியமானதொன்று. பயிரிட்டு செடியாக்குவது முதல் பதப்படுத்தி, சிற்பமாக்கி, சிங்களப் பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்வது வரை பூரணமாக புகையிலையின் ஆதிக்கம், யாழ்.குடாநாட்டில் நீண்ட காலம் நிலைத்தது.

கோடா போட்டு துண்டுகளாக்கி, சுருட்டுக்களாக்கும் பணியிலும் அநேக சுருட்டுக் கொட்டில்கள் ஈடுபட்டிருந்தன. வந்தாரை வரவேற்க வீடுகள் தோறும் வெற்றிலை தட்டங்கள் நிலைத்திருந்தது அந்த நாட்கள். வெற்றிலை பாக்கு புகையிலையோடு, சுண்ணாம்பும் அங்கே தட்டங்களில் இருப்பதைக் காண முடியும். மாரி கால வெள்ள முடிவோடு புகையிலை செடிக்கான நாற்றுமேடைகள் தயாராகி விடும். மாரிக்கு முன்னதாகவே பாவட்டை, பன்னை என பச்சை இலை தழைகளை மண்ணுக்குள் இயற்கைப் பசளையாக்கும் வேலை நடைபெறும்.

மண்வெட்டியோடு வரிசையாகத் தொழிலாளர்கள் சண்டிக்கட்டுச் சாரத்தோடு அல்லது கோவணத்தோடு வேர்வைவடிய தோட்டங்களில் நின்று மண்ணைக் கொத்தி குழைகளைத் தாட்டுவிடும் காட்சியும் அந்த நாட்களில் தோட்டக்காணிகள் தோறும் காணப்படுகின்ற ஒரு ரசனையான காட்சியாக இருந்தது. வரிசையாக பட்டை கட்டி, வாய்க்கால் அமைத்து புகையிலைச் செடியை நட்டு அதில் கணக்கான கிளைகள் விடும் வரை நீருற்றி வளர்ப்பது அடுத்த பிரயத்தனம். நீர் இறைக்கும் இயந்திரங்கள் அதிகம் அறிமுகமாகாத அந்த நாட்களில் கிணற்று நீர் மூலம் துலா வழியாக பாத்திகட்டி இறைப்பதுதான் முறையாக இருந்தது. புகையிலைச்செடி ஒன்று இரண்டாக கிளை விட கிருமிநாசினி விசிறுதல், தேவையான அளவுக்கு உரம் இடுதல் என அன்றாடம் வேலைகள், தோட்டங்களில் இருக்கும். தொழிலாளர்கள் ஒரு செடிக்கு இன்ன விலையென்று பேரம் பேசி வியாபாரிகளிடம் செடியாகவே விற்றுவிடுவார்கள். செடிகளை வியாபாரிகள், விவசாயிகளிடம் பெற இடைத்தரகர்கள் ஊருக்கு ஊர் இருப்பார்கள்.

தென்னிலங்கை வர்த்தகத்தோடு தொடர்புடைய வடமராட்சி மற்றும் தீவுப் புற வியாபாரிகளே இதில் அதிக அக்கறை காட்டினார்கள். செடியாலே பெற்றுவிட்ட தனித்தனி நறுக்கப்பட்ட பச்சைப் புகையிலைகள் பதப்படுத்தப்படுதல் அடுத்த கட்டம். பதப்படுத்தப்பட்ட மண்ணால் அரண் அணைக்கப்பட்ட கூரையிடப்பட்ட புகைக்கூடுகள் அமைக்கப்பட்டு இருக்கும். தென்னம்குச்சிகளை அடுக்கி புகையாக்கி குடில் மேடைகளில் அடுக்கப்பட்ட புகையிலையை பாட்டம்பாட்டமாக அதில் அடுக்கி புகையிலையோடு அது காய்ந்து பதமாக வசதி செய்து தரப்படும். இவ்வாறு புகையிலையில் சூடேறி பதமான ஐம்பது இணைந்த புகையிலைகளை ஒரு கட்டாக்கி அதில் சிற்பம் என்று பெயரிட்டு ஊருக்குஊர் அனுப்புவார்கள். வியாபாரிகள் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு அனுப்ப ரயில் சேவையினூடாக வானரம் என்கின்ற தனிப்பகுதி அனுப்புவதற்கென்று அமைக்கப்பட்டிருந்தது.

புகையிலை சிற்பங்கள் என்று பெயரிடப்படும் இவற்றை பாணியிட்டு பாணிப்புகையிலையாக்குவதும் பாணிப் புகையிலும் சுருட்டுத் தயாரிப்பது அடுத்த கட்டம், உலர்ந்த பாணியிடப்படாத புகையிலை தமக்கு ஏற்றவகையில் சுற்றிச்சுற்றி புகைப்போருக்கு பயன்படுத்தப்படும். புகையிலைத் துண்டங்களை மெல்லுவதற்கும் இதே புகையிலை பயன்படுத்தப்படும். அப்பு, ஆச்சி, அம்மம்மாக்கள் கொட்டைப் பெட்டிக்குள் பாக்கு, வெற்றிலை, சுன்னாம்பு கரண்டகத்தோடு புகையிலைத் துண்டுகளும் வைத்திருப்பார்கள். சோர்வையகற்ற வாய்க்கு புகையிலை போடுவது அந்த நாட்களில் வழக்கமாக இருந்தது.

பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு சுருட்டுக் கொட்டில்கள் அந்த நாட்களில் பேருதவி புரிந்தது. நன்கு பயிற்சி பெற்ற ஒரு சுருட்டுத் தொழிலாளி மூவாயிரம் முதல் நாலாயிரம் சுருட்டுக்களைக் கட்டி நூற்றுக்கும் மேலான ரூபாய்களை உழைப்பது அந்த நாட்களில் வழமையாக இருந்தது. சுருட்டுக் கொட்டில்கள் குடிசைக் கைத்தொழிலாகவே கருதப்பட்டு வந்தது. ஆங்காங்கே முதலாளிகள் இவற்றை அமைப்பார்கள். ஆயிரக்கணக்கான புகையிலைகளை பாணி போட்டு தயாராக வைப்பார்கள் அவற்றைச் சுற்ற சப்பாணி கட்டி குழுமியிருந்து, சுருட்டாக சுற்றுவதற்கு ஏராளமான தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவார்கள். பத்துச்சுருட்டுகளைக் கொண்ட ஒரு சுருட்டுக் கட்டு சுற்ற கூலி மூன்று சதமாக இருந்தது ஒரு காலம். புகையிலை நரம்புகளை நீக்கி துண்டுகளாக்கி தொழிலாளர்கள் முன் நிரப்பி வைப்பதற்கு ஒரு உதவியாளர். சுருட்டிய சுற்றுக்களை நூலால் கட்ட ஒரு உதவிச் சிறுவன். இருபது முப்பது பேர் ஒருங்கே அமர்ந்திருந்து சுருட்டைச் சுற்றும் போது அவர்களுக்கு தினசரி செய்திப் பத்திரிகையை வாசித்துக் காட்ட ஒருவர். இவ்வாறு அந்தச் சுருட்டுக் கொட்டில்களில் வேலைகளுடன் வானொலிப் பெட்டி சத்தமும் கலகலக்கும்.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

இந்தச் சுருட்டுத் தொழிலாளர்கள் தங்களுக்கு சங்கங்களும் அமைத்திருந்தார்கள். இந்தச் சங்கத்தின் தலைவராக நீண்ட காலம் இருந்த ஒருவர் தொடர்ந்தும் உடுவில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டிக்கு நிற்பதுவும், கட்டுப் பணத்தை இழந்ததும் வழமையாகி இருந்தது. ஒவ்வொரு சுருட்டுத் தொழிலாளியின் மத்தியிலும், ஒரு உதவித் திட்டமும் அமைந்திருந்தது. உதாரணமாக அந்த நாட்களில் பிரபலமான திருவிழாக்கள் நடைபெறும் கோவில்களில் அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவிலும் ஒன்று அதன் பூங்காவனத் திருவிழா சுருட்டுத் தொழிலாளர்களின் உபயம். 7ஆம் திருவிழாவுக்கு போட்டியாக பல்லாயிரக் கணக்கான ரூபாய் செலவில் நேர்த்தியாக இந்த திருவிழாவை நடத்த ஒவ்வொரு தொழிலாளியும் தங்களது நாளாந்தக் கூலியில் ஒரு தொகையை முதலீடாகச் சேமித்து தம் பங்கை வருடந்தோறும் திருவிழாவுக்கெனத் தருவார்கள்.

அளவெட்டியில் இருந்த பலநூறு சுருட்டுக் கொட்டில்களிலிருந்த பல்லாயிரம் தொழிலாளர்கள், இந்தத் திருவிழாவை செய்வார்கள். நாலுமுழ வேட்டியும், ஒரு துவாய் சகிதம் ஆயிரக்கணக்கான சுருட்டுக் கட்டுக்களை நாளாந்தம் சுற்றும் அந்த திறமை வாய்ந்த சிக்கனம், சேமிப்பு, சம்பாத்தியம் என்ற தாரக மந்திரத்திற்கு அமைய வாழ்ந்து கல் வீடுகளோடு தம் வாழ்வை அமைத்துக் கொண்ட சுருட்டுத் தொழிலாளர்களும் இருந்தார்கள்.

தென்னிலங்கையில் இனக்கலவரம் வெடித்தபோதெல்லாம் தாக்கப்பட்ட தமிழ்க்கடைகள் சுருட்டுக் கடைகளாகவே இருந்தன. சுருட்டுப் பெட்டிகளோடு புகையிலை விற்க வந்தவர்கள் பெரும் வியாபாரிகளாகி தங்கள் பகுதிகளில் பணக்காரர்களானதை சகிக்க முடியாத சிங்களவர்கள் கலவரத்தை சாட்டாக வைத்து அந்தத் தொழிலாளர்களின் கடைகளை கொள்ளையிட்டதாகக் கூறப்படுகிறது. இதுவரை சுருட்டு வியாபாரத்தை ஆரம்பித்த பெரும் முதலாளியானவர்கள், தம்மை ஆளாக்கிய தம் வியாபாரத்தை இயக்கக் காரணமான சுருட்டு வியாபாரத்தை தாய் வியாபாரமாக அதைத் தொடர்ந்தும் மதித்து வந்தார்கள்.

# கோர்த்து விடும் செய்திகள்

## ■ பழைய பாட்டுத்தான் வாயில் வருகின்றது.

ஜெனிவா நகல் தீர்மானத்தைப் பார்த்ததில் இருந்து சந்திரபாபுவின் பழைய பாடலான நான் ஒரு முட்டாளுங்க என்ற பாடல் தான் அடிக்கடி வாயில் வருகின்றது. கலன் மக்ரே காட்டிய படம் எங்கே ?நவிப் பிள்ளை காட்டிய நாட்டம் எங்கே? டேவிட் கமரூன் ஆடிய ஆட்டம் எங்கே? அமெரிக்கனை அண்டியோன் அவலப்படுவான்.

அமெரிக்கா எந்த ஒரு இனத்திற்கும் விடுதலை வாங்கிக் கொடுத்தாக வரலாறு எங்காவது இருக்கிறதா?

## ■ இந்தியாவிற்கு சீ போ! சீனாவிற்கு நீ வா!!

இந்த ஆண்டு இறுதியில் சீனாவும் இலங்கையும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையைச் செய்ய விருக்கின்றன. இது தொடர்பாக பல சீன வர்த்தக நிறுவனங்கள் இலங்கைக்குப் படை எடுக்க விருக்கின்றன.

இந்தியா கடந்த பல ஆண்டுகளாக இலங்கையை தன்னுடன் சீபா எனப்படும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையைச் செய்யும் படி வற்புறுத்திக் கொண்டிருந்தது. 2008-ம் ஆண்டில் போர் முடிந்த பின்னர் செய்யலாம் என கொழும்பு இந்தியாவிற்கு உறுதி அளித்திருந்தது. பின்னர் சீபாவா ? சீ போ என்று விட்டது.

## ■ மாவை ஐயா எல்லாமே வியாபாரம் தான்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இலண்டன் வந்த மாவை ஐயாவிடம் இலங்கைக்கு ஆதரவாக ஜெனிவா மனித உரிமைக்கழகத்தில் செயற்பட்டு இலங்கைக்குப் பயங்கரவாதத்தை ஒழித்தமைக்காகப் பாராட்டுத் தெரிவித்த தென் ஆபிரிக்கா எப்படி இலங்கையில் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் சமாதான அனுசரணையாளராகச் செயற்பட முடியும் எனக் கேட்ட போது தென் ஆபிரிக்கா தமிழர்கள் விவாகாரத்தில் அதிக கரிசனையுடன் செயற்படுகின்றது என்றார்.

ஆனால் இப்போது ஜெனிவாவில் இருந்து வரும் செய்திகள் அப்படி கரிசனையுடன் செயற்படுவது போல் இல்லை எனத் தெரிவிக்கின்றன. இலங்கையில் தென் ஆபிரிக்கப் பண முதலைகள் நிறைய முதலீடு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. எல்லாமே வியாபாரம் தான்.

## ■ நாடு கடந்த அரசிடமிருந்து மீண்டும் ஒரு ஏட்டுச் சுரைக்காய்

பரிகார நீதி என்னும் கையேடு ஒன்றை நாடு கடந்த அரசு வெளிவிட்டுள்ளதாம். ஒவ்வொரு முறையும் ஜெனிவாத் தீர்மானம் வரும்போது இப்படி சீன் போடுவதும் தாம்தான் ஜெனிவாவில் பேரணிநடத்துவது போல பிலிம் காட்டுவதும் வழமையான ஒன்றுதான். ஊடகம் ஒன்றில் என்ன இந்த பரிகார நீதி எனக் கேட்ட போது நீதி பெறுவது என்றார் ஒருவர்.

## ■ அனந்தி அனந்த காலம் ஆனந்தமாய வாழ்க

இலங்கையில் உள்ள இசுலாமியர்கள் தம்மிடையேயும் அனந்தி சசிதரன் போல் ஒரு துணிச்சல் மிக்க பெண் அரசியல்வாதி தேவை என்கிறார்கள். அனந்தி சம்பந்தன் ஐயாவின் தேசியப்பட்டியல் பாராளமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஜெனிவாவில் நடந்த எந்தவொரு சந்திப்பிலும் சர்வதேச போர்க் குற்ற விசாரணை தொடர்பான கோரிக்கைகளை முன்வைக்கவும் இல்லை தன்னையும் அது பற்றிப் ஏதும் பேச அனுமதிக்கவில்லை என்பதைப் பகிரங்கப் படுத்தியுள்ளார்.

## ■ ஆட்சி மாற்றத்திற்கான வியூகம்

ஜெனீவா பிரேணை தமிழருக்கு பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்திருந்தாலும், எதிர்க்கட்சிகளுக்கு உற்சாகத்தைக் கொடுப்பதாக அது அமைந்திருக்கின்றது என்று ஒரு தமிழ் அரசியல் பிரமுகர் சொன்னார். பிரேரணையில் தமிழ் என்று ஒரு வார்த்தையையும் காணவில்லை. பதிலாக தென்னிலங்கையின் பக்கம் அது பெருமளவு கவனத்தைச் செலுத்தியிருக்கின்றது. வெலிவேரியா விவகாரம், ஊடக சுதந்திரம் போன்ற விடயங்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

*- ஊருளவாளி*

முன்னணி தமிழ் தொலைக்காட்சிகளுடன் அனைத்து SKY சனல்களும் £ 200 இருந்து

079 4715 9598 - 074 2472 6790

Special Offer £150

KATPY SATELLITE கற்பி சட்ரலைற்

Satellite & Communication Experts, Satellite Dishes, Satellite Receivers, New Installation, Troubleshooting, Upgrades

சட்டலைட் திருத்த வேலைகள் சகல இடத்தில் பொருத்துதல் மற்றும் டிஸ்க் பொருத்த முடியாத இடங்களில் இன்டர்நெற் தொலைக்காட்சி (IP Tv) பொருத்துதல் போன்ற வசதிகள் செய்து தரப்படும்

சகலவிதமான சட்டலைட் தொலைக்காட்சி இணைப்புக்களையும் சட்டலைட் ரிசிவர்களையும் மிகக்குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

# தலையில்லாமல் வாலாடுமா ?

பாகம் 149

ஜெனிவாவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மனிதவுரிமை ஆணைக்குழுவின் கூட்டத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சனை முன்னெடுக்கப்பட்டு நடந்த அநீதிகளுக்காக ஒரு சர்வதேச விசாரணைக்கு முடிவெடுக்கப்படலாம், தமிழர்களுக்கான அரசியல் தீர்வைப் பற்றியும் வலியுறுத்தப்படலாம், இலங்கைமீது பொருளாதாரத்தடை கொண்டுவரப்படலாம், அந்த நெருக்குவாரங்களுக்கு முகங்கொடுக்க முடியாமல் பெரும்பான்மைச் சிங்கள அரசு தமிழர்களின் சுயாட்சிக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு தமிழ் மாகாணங்களுக்குக் கூடுதல் அதிகாரங்களை வழங்கும், என்றெல்லாம் வருடக்கணக்காக எம்மவர்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். வருடாவருடம் நம்மாலான முயற்சிகளனைத்தையும் செய்து ஊர்வலம், ஆர்ப்பாட்டம், நடைப்பயணமென்றெல்லாம் நாம் பலபோராட்டங்களை நடத்தினாலும், உலகம் என்னவோ தன்பாட்டில் சிந்தித்து வேறு எதையோ செய்து கொண்டிருக்கிறது.

**கூட்டமைப்பு சர்வதேச விசாரணையை வலியுறுத்தாதது போலத்தான் எமது தாயகக் கோரிக்கையும் மிகச் சாதுரியமாகக் கைவிட்டுவிடுமோ தெரியவில்லை.**

இன்றுவரை நம்பத் தகுந்த உள்நாட்டு விசாரணையென்ற மட்டத்திலிருந்து மேலும் ஒருபடி முன்னேறிச் சர்வதேச விசாரணையென்ற மட்டத்திற்கு நடந்து முடிந்த 2009 யுத்தகாலக் குற்றங்கள் தொடர்பான விசாரணைக் கோரிக்கை உயரவில்லை. மனிதவுரிமைக் கவுன்சிலிலுள்ள அங்கத்துவ நாடுகள் தற்போதைய சிறீலங்கா அரசின்மீது காட்டும் மென்மையான போக்குத்தான் இதற்குக் காரணமா அல்லது தமிழர்களாகிய எம்மீது அந்நாடுகள் வைத்திருக்கும் வெறுப்பும் அதற்கொரு காரணமா? என்பது தெரியவில்லை. பெரும்பாலும் இரண்டுமே காரணங்களாக இருக்கக்கூடும். பயங்கரவாதிகளான இவர்களுக்கு என்ன நீதியும் விசாரணையும்? என்ற தோரணையில் உலக நாடுகள் சிந்திக்க மாட்டா என்று கூறுவதற்கில்லை. ஆனாலும், அதற்குப் பயந்து ஈழத்தமிழர்கள் தங்களுக்கான நியாயத்தைக் கேட்காமலிருக்க முடியாது.

இலங்கையின் தமிழர் தரப்பில் முக்கிய பங்கு வகித்து ஜெனீவாவுக்குச் சென்ற வடமாகாண சபையின் உறுப்பினரொருவர் வந்திருந்த உலநாடுகளின் பிரதிநிதிகளிடம் எமது பிரச்சனை தொடர்பாக ஒரு வார்த்தைதானும் பேசவில்லையாம். தான் ஓர் புலி இயக்க உறுப்பினரின் மனைவியென்பதால், அந்தப் பிரதிநிதிகள் தன்னை வெறுப்புடன் நோக்கக்கூடுமென்று ஊகித்து, கூட இருந்தவர் தன்னைப் பேசவிடாமல் தடுத்துவிட்டதாக குற்றம் சுமத்தியிருக்கிறார். "நொண்டிக் குதிரைக்குச் சறுக்கின சாட்டு" என்பதைப்போல, இத்தகைய சாக்குப் போக்குகளை ஓர் மக்கள் பிரிதிநிதி கூறுவது ஏற்புடையதாகத் தெரியவில்லை. மிக அதிகமான விருப்பு வாக்குகளைப் பெற்று முதலமைச்சர் பதவிக்குக்கூடத் தகுதியானவர் என்று சிலாகிக்கப்பட்ட அவர் கூறும் காரணத்தை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. தங்களது அணிக்குள்ளே காணப்படும் இத்தகைய சீர்கேடுகளை வெளிப்படையாகக் கூறி தமிழர் தரப்பை மேலும் பலவீனமாக்க முயலுவதும் தகுந்த அரசியல் செயற்பாடாகத் தோன்றவில்லை. யார் எவ்வாறு தடுத்தாலும் தாங்கள் எதற்காக ஜெனிவாவுக்குச் சென்றார்களோ அந்தக் கடமையை எவ்வாறாயினும் நிறைவேற்றவே, சென்றவர்கள் முயற்சித்திருக்க வேண்டும். அதை விட்டு விட்டு உதவிக்குச் சென்றவர்மீது குற்றம் சுமத்தி உட்கட்சிச் சீர்கேடுகளைப் பிறர் அறியும் வண்ணம் சந்திக்குக் கொண்டு வருவது சரியான செயலாகாது.

தமிழர் தரப்பில் எதற்காகப் போராடுவது, எதைப் பெறப் போராடுவது என்ற விடயங்களில் ஓர் ஒருமித்த கருத்து இருப்பதாகவே தெரியவில்லை. சிலர் ஓர் சர்வதேச விசாரணைக்குள் சிறீலங்காவைச் சிக்கவைக்க வேண்டுமென்னும் பழிவாங்கல் நோக்கோடு மட்டும் சிந்திக்கிறார்கள், செயல்படுகிறார்கள். சிலரோ சர்வதேச விசாரணையின் மூலம் சிறீலங்காவை நெருக்குவதால் தமிழர் கோரிக்கைகளுக்குத் தலையாட்ட வைத்துவிடலாமெனக் கனவுகாண்கிறார்கள். சிலர் இணங்கிப் போகாத உள்ளூர் அரசியல் மூலம் இனப்பிரச்சனைக்கான தீர்வைப் பெற முயற்சிக்க வேண்டுமென்னும் நோக்கில் செயற்படுகிறார்கள். மேலும் சிலர் சற்று மிதமான போக்கைக் கடைப்பிடித்து சிறீலங்காவைச் சங்கடத்தில் மாட்டாமல் பெறக்கூடிய அரசியல் உரிமைகளை வென்றெடுக்க வேண்டுமென்று செயற்படுகிறார்கள். இவையெல்லாவற்றுக்கும் புறம்பே, விசாரணையாவது பொறிமுறையாவது எமக்குத் தேவை எமது தமிழீழத்தாயகம் மட்டுமே அதற்காக முடிந்தவரை சிறிலங்கா அரசுடன் முரண்பட்டு நின்று அந்த ஒன்றையே நோக்காக் கொண்டு போராட வேண்டுமென்று நினைக்கிறார்கள். எங்கள் பிரச்சனைகளும் தேவைகளும் உணர்வு பூர்வமானதாகவும் நாம் பட்ட அவஸ்தைகள் இலகுவில் மறக்கப்பட முடியாததாகவும், காயங்கள் இலகுவில் ஆற்றப்பட முடியாததாகவும் இருப்பதால் எதைக் கேட்பது எப்படிக் கேட்பது என்பதில் போதிய தெளிவில்லாமலேயே இருக்கின்றது. இலட்சியம் தோற்றுப் போனதால் பாதைகள் தடம்புரள்கின்றன. உண்மையில் மேற்சொன்ன அணுகுமுறைகள் வெளிப் பார்வையில் ஒரேமாதிரியானவை போலத் தெரிந்தாலும் அவற்றில் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன.

மீண்டும் ஒரு ஆயுதப் போர் வரவேண்டுமென்று உள்ளூர விரும்புபவர்கள், அது இனிமேல் வேண்டவே வேண்டாம் தற்போது எமது பிரச்சனை சர்வதேசமயப்படுத்தப் பட்டுவிட்டது ஆகவே சர்வதேசரீதியில் எமது பிரச்சனைகளை முன்வைத்துப் போராடி எமது அரசியல் உரிமைகளைப் பெறலாமென நம்புபவர்கள், உள்ளூரில் தகுந்த அரசியலை முன்னெடுப்பதால் அரசுடன் உரசலில்லாமல் எப்படியாவது நன்மைகளைப் பெறுவோமென்று எண்ணுபவர்கள் என்று பலவிதமான தரப்புகள் பலவித சிந்தனைகளுடன் செயற்படுவதால் ஒரு சரியான தலைமைத்துவமும் போராட்ட வழிமுறைகளும், செயற்திட்டமுமின்றி ஆளுக்கொரு தரப்பில் நம்மவர்கள் செயற்படுகிறார்கள். ஜெனிவாவுக்குச் சென்ற மாகாண சபை உறுப்பினரின் நிலைப்பாட்டுக்கும், அவருக்கு உதவியாக மொழிபெயர்க்க முன்வந்தவரின் நிலைப்பாட்டிற்குமிடையில் சரியான ஒற்றுமையில்லாததால் மாகாணசபை உறுப்பினரின் கருத்துக்கள் அங்கே சரிவரத் தெரிவிக்கப்படவில்லை. ஜனநாயகத்தன்மையைப் பேணி அனைவரது கருத்துக்களையும் சர்வதேசம் அவதானிக்கச் செய்ய வேண்டுமென்னும் அரசியல் பெருந்தன்மை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இல்லாது போய்விட்டதும், தங்களது சொந்த நெறிப்படுத்தலின் கீழேயே எல்லோரும் செயற்படவேண்டுமென்று சிலர் மட்டும் சிந்திப்பதுமே இத்தகைய ஆரோக்கியமற்ற சூழ்நிலைகள் உருவாகக் காரணங்களாய் அமைந்துவிட்டன.

இலங்கையரசுக்கெதிரான போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தும் விடயம் தமிழ்த் தலைமைகளால் பெரிதும் விரும்பப்படாத காரணத்தினாலேயே, வடமாகாணசபையின் உறுப்பினரின் கருத்துக்கள் ஜெனிவாவில் முன்வைக்கப் படாது இருட்டடிக்கப் பட்டிருக்கிறது என்று அனுமானிப்பதில் எவ்விதத் தவறும் இருக்க முடியாது. அந்த விசாரணைக்காகப் படாதபாடு பட்ட பலரின் முகத்தில் மிகவும் சாமர்த்தியமாகக் கரிபூசப்படுகின்றது. தற்போது இந்த விடயம் வெளிச்சத்துக்கு வந்து கொண்டிருக்கின்றது. தலையில்லாமல் வாலாடாது என்பார்கள். வடமாகாணசபை உறுப்பினரின் கருத்துக்கள் வெளிப்படுத்தப்படாததற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்தின் ஆலோசனையும் வழிகாட்டலும்தான் காரணமாக இருந்திருக்கவேண்டும். அல்லாவிடில் மொழிபெயர்ப்பில் உதவச்சென்றவர் மாகாணசபை உறுப்பினரைப் பின்தள்ளிவிட்டு தன்னிச்சையாகத் தனது கருத்துக்களை மட்டும் முன்வைத்திருக்க முடியாது.

## அலசுவாரம்

அலசுபவர் : **மட்டைக்கிளப்பான்**

இன்று, தமிழீழத் தாயகமென்பதும் சுயநிர்ணய உரிமையென்பதும் ஏட்டளவில் எழுத்தளவில் மட்டும் நிற்கும் விடயமாக மாறிவிட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள்ளேயே அடிப்படை இலட்சியத்தைக் கணக்கிலெடுப்பதில் ஒத்த கருத்து இருக்கும் போலத் தோன்றவில்லை. பாராளுமன்றத்தில் மத்திய அரசாங்கத்தின் அமைச்சர்கள், உறுப்பினர்களுடன் நெருங்கியிருக்கும் தமிழர் பிரதிநிதிகள் சிலர் எமது தமிழீழக் கோரிக்கையை உள்ளூர மனதளவில் எப்படி எடுத்துக் கொள்கிறார்கள் என்பதையும், வடமாகாண சபைப் பிரதிநிதிகள் சிலர் அக் கோரிக்கையில் எந்தளவு ஆர்வத்தைக் கொணடிருக்கிறார்கள் என்பதையும் ஒப்பிட்டால் அதில் நிறைய வித்தியாசங்கள் இருப்பது தெரியவரும்.

கூட்டமைப்பின் தலைமையிடம் தமிழீழம் பற்றி உங்கள் கருத்தென்னவென்று கேட்டால் ஏதோவோர் பதிலை எதிர்பார்க்க முடியும். அதற்கு ஆயிரம் அர்த்தங்கள் இருக்கலாம். ஆனால் நிச்சயமாக நாம் தமிழீழத்தை வென்றெடுக்கப் போராட வேண்டுமென்னும் உறுதிப்பாடு அதில் இருக்குமா என்பது சந்தேகமே. நிலைமைகள் அவ்வாறானவோர் ஊகத்தையே செய்யும்படி தூண்டுகின்றன. வடமாகாண முதலமைச்சரிடம் அதே கேள்வியைக் கேட்டால் அவரது பதிலும் அத்தகையதாகவே இருக்கும். தலைமைகள் இந்த விடயத்தில் தடுமாறுவது துலாம்பரமாகத் தெரிகிறது. இத்தகைய தெளிவற்ற சூழலிற்தான் புலம்பெயர்ந்த தமிழர்களும், தமிழகத் தமிழீழ ஆர்வலர்களும், இலங்கையிலுள்ள தீவிர போக்குடையவர்களும் செயற்படவேண்டியிருக்கிறது.

அறிஞர் அண்ணா மாநில அரசைக் கைப்பற்றியபோது திராவிட நாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டது போலவே இலங்கையின் தமிழ்த் தலைமைகளும் எமது தாயகக் கோரிக்கையைக் கொள்கையளவில் மட்டும் வைத்துக் கொண்டு செயலளவில் விட்டுவிடக் கூடும்.

**வருடங்கள் ஒன்றன் பின் ஒன்றாக ஓடுகின்றன. அரசியற் தீர்வோ, செய்யப்பட்ட அநீதிகளுக்கான பரிகாரமோ இதுவரை கிடைப்பதாயில்லை. உலகம் மேலும் மேலும் கால அவகாசங்களை இலங்கையரசுக்குக் கொடுத்துக் கொண்டேயிருக்கிறது. காலப்போக்கில், எமது தமிழ்ப் பிரதேசங்கள் அத்துமீறிய குடியேற்றங்களால் கபளீகரம் செய்யப்பட்ட பிறகு கிடைக்கும் தீர்வினால் என்ன பயன்?**

கூட்டமைப்பு சர்வதேச விசாரணையை வலியுறுத்தாதது போலத்தான் எமது தாயகக் கோரிக்கையும் மிகச் சாதுரியமாகக் கைவிட்டுவிடுமோ தெரியவில்லை.

வருடங்கள் ஒன்றன் பின் ஒன்றாக ஓடுகின்றன. அரசியற் தீர்வோ, செய்யப்பட்ட அநீதிகளுக்கான பரிகாரமோ இதுவரை கிடைப்பதாயில்லை. உலகம் மேலும் மேலும் கால அவகாசங்களை இலங்கையரசுக்குக் கொடுத்துக் கொண்டேயிருக்கிறது. காலப்போக்கில், எமது தமிழ்ப் பிரதேசங்கள் அத்துமீறிய குடியேற்றங்களால் கபளீகரம் செய்யப்பட்ட பிறகு கிடைக்கும் தீர்வினால் என்ன பயன்?

ஏதோ நல்லது நடக்கும் என்று எதிர்பார்த்து எதிர்பார்த்து ஒவ்வொரு வருடமும் தமிழ் மக்கள் இலவுகாத்த கிளிகளாக ஏமாந்துபோகும் அவலநிலை எப்போது முடியுமோ தெரியவில்லை.

*- தொடருவம்*

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

seven | zero
graphic designers
020 7043 4319
G11, LOMBARD HOUSE | 2, PURLEY WAY | CROYDON | CR0 3JP



creative artwork from concept to design


Niru BRAND®
Bringing
Great
Food
to Life.
Suryaa
Roasted Curry Powder
900g
Quento
Roasted Rice Flour
Niru Frozen
Ready to Eat
Vegetable Briyani
Vada
Idly
Keep Frozen at -18°c
100% Natural No Preservatives
Special Offer £4.99
Coconut Milk
Tamarind Purée
Pure Gingelly Oil (Sesame Oil)
Nelli
Ice Cream Soda
Faluda
Aqua Coco
The No 1 Brand
Niru BRAND®
Quality you can taste
Niru Europe Ltd,Unit11,Mitcham Industrial Estate, 85 Streatham Road,Mitcham,Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk

# போட்டு வாங்கோ பாலாண்ணை

துக்கத்தின் பாற்பட்டு இந்த அஞ்சலி உரையை நான் எழுதவில்லை. ஒருவருடைய சாவுக்குப் பிறகு அவரது சாதனைகளை தெரிவிக்கும் சந்தர்ப்பமாகவே இதனைக் கருதுகிறேன்.

பாலுமகேந்திராவிற்கான அஞ்சலிக் குறிப்பு எழுதிய கை உளைவு இன்னும் மாறவில்லை எழுதிய மையும் இன்னும் காயவில்லை, ஆயினும், எழுதியே ஆக வேண்டும் என்னும் கட்டாயத்திற்கு என்னை ஆளாக்கினார் பாலா அண்ணன் என்று நாம் அன்புடன் அழைக்கின்ற கே.எஸ். பாலச்சந்திரன் அவர்கள்.

அளவெட்டி மகாஜனசபை மண்டபத்தில் *'அண்ணை றைற்'* என்ற ஓரங்க, ஓராளின் தனித்த நடிப்புடன் கூடிய நாடகம் பார்க்கிறேன். ஓரங்கமாகவும், ஓராளின் தனித்த நடிப்பாகவும் கொண்ட ஒரு நாடகத்தை பரீட்சார்த்தமாக முதலில் நிகழ்த்தியவர் கே.எஸ்.பாலச்சந்திரன் அவர்கள் தான். பரீட்சார்த்த முயற்சி மாத்திரமல்ல, படித்தோரையும், பாமரரையும் ஒரு சேர கவர்ந்த படைப்பு என்றும் இதனைக் கூறலாம்.

பாலச்சந்திரனின் நீண்ட கலைப் பயணத்தில் *'அண்ணை றைற்'* என்பது ஒரு நிழல் மாதிரி. அதில் அவர் அதிக நேரம் மினைக்கெட்டார் இல்லை. அது அவரது அடையாளமாகவும் குறிப்பிடமுடியாது. அவர் அதற்கும் அப்பால் பெரும் பாய்ச்சல் ஒன்றை நிகழ்த்தியவர்.

இப்பொழுது தொலைக்காட்சித் தொடர் எதுவும் பெறாத ஒரு வரவேற்பினை அப்பொழுது வானொலியில் தொடர் நாடகம் பெற்றிருந்தது. அந்நாடகத்தின் பெயர் *'தணியாத தாகம்'* பிரதி ஞாயிறு தோறும் பின்னேரம் 4.30 மணிக்கு இலங்கை மக்கள் வங்கி நடாத்துகின்ற நிகழ்ச்சி அது. *"அத்தானே அத்தானே எந்தன் ஆசை அத்தானே.."* என்ற ஒரு பாடலுடன் நிகழ்ச்சி தொடங்கும். கமலினி செல்வராஜன், சில்லையூர் செல்வராஜன் ஆகிய இருவரும் பாடுவார்கள். நிகழ்ச்சி ஆரம்பிக்கும். கே.எம்.வாசகர் தயாரிப்பில் *'தணியாத தாகம்'* நாடகம் வானொலிப் பெட்டி உள்ள வீடுகளில் சனங்கள் குவிந்திருப்பார்கள். பெரும்பாலும், பெண்கள் தாம். அவர்களது முகங்களில் அழுவதற்கான ஆயத்தம் தெரியும்.

*'அண்ணை றைற்'* நாடகத்தில் தனி ஒருவனாக அனைவரையும் சிரிக்க வைத்த பாலச்சந்திரன் இங்கு அனைத்துப் பெண்களையும் அழ வைத்து வெற்றி காண்பர். அண்ணனாக பாலச்சந்திரனும், தங்கையாக கமலினியும் தோன்றுகின்ற வேளையெல்லாம், யாராலும் அழாமல் இருக்க முடியாது.

ஒன்றைக் கவனியுங்கள், இது வானொலி. காற்று, குரலை மாத்திரம் தான் இங்கு காவி வரும், முகபாவனையோ, உடல் மொழியோ எதுவும் இங்கு தெரியாது. குரலில் மாத்திரம் அத்தனை உணர்வினையும் கொட்டி விடத் தெரிந்த கலைஞன், எப்படிப்பட்டவனாக இருப்பான்?

நான் ஐ.பி.சி. வானொலியில் பணிபுரிந்தபோது *'வல்லமைதாராயோ'* என்ற வானொலி தொடர் நாடகத்தை தயாரித்து நடித்தேன். அதாவது குரலால் நடித்தேன். எனக்கு இருந்த ஒரேஒரு முன் உதாரணம், கே.எஸ்.பாலசந்திரன் அவர்கள்.

அவரது உச்சம் என்று இப்பொழுது ஒன்றைச் சொல்ல வேண்டும். அது அவர் திரைப்பட நடிகனாக மிளிர்ந்தமை பற்றியது. ஈழத்துத் தமிழ்த் திரைப்பட வரலாற்றில் *'வாடைக் காற்று'* திரைப்படத்திற்கு முக்கிய அடையாளம் உண்டு. என்னைப் பொறுத்தவரையில் ஈழத்துத் தமிழ்த் திரைப்படத்தின் அடையாளம் என்னவென்றால், அது *வாடைக்காற்று* என்பேன்.

*'பொன்மணி'* திரைப்படத்தை சிறந்த படம் என்று பலர் கூறுவர். இருக்கலாம், எனக்கென்னவோ அத்திரைப் படத்தைப் பார்க்கின்றபோது, ஒரு சிங்களத் திரைப்படம் பார்க்கின்ற உணர்வு ஏற்பட்டது. *'புதிய காற்று'*, *'நான் உங்கள் தோழன்'*, *'கோமாளிகள்'* முதலானவை தமிழ் நாட்டுச் சினிமாக் குப்பைகளைப் பொறுக்கியவை. பொறுக்கியதைக் கூட ஒழுங்காகப் பொறுக்காதவை.

*'வாடைக்காற்று'*த் திரைப்படத்தில் பாலசந்திரன் அவர்கள் முக்கிய பாத்திரம் ஏற்றிருந்தார். அத்திரைப் படத்தில் இரண்டு நாயகர்கள், இரண்டு நாயகிகள் மேலும் சிலர் முக்கிய பாத்திரங்கள் ஏற்று நடித்திருந்த போதும், பாலச்சந்திரன் அவர்கள் வரும் இடங்களே உயிர்ப்புள்ளதாக எனக்கு இப்பொழுதும் நினைவில் நிற்கின்றது. அவர் திரையில் தோன்றும் கணமெல்லாம் நான் சிலிர்ப்புக்குள்ளானேன். அப்பொழுது சிவாஜிகணேசன், கமலஹாசன் யாவரிலும் பார்க்க உயர்ந்து நிற்றவர் பாலச்சந்திரன் அவர்கள்.

**இரவி அருணாசலம்**

**எழுதுவது என்னவெனில்**

கே.எஸ்.பாலச்சந்திரன் அவர்களை *'பாலா அண்ணன்'* என்று அன்புடனும், உரிமையுடனும் அழைக்கும் ஒரு காலம் எனக்கு வாய்த்தது. 1992இல் நான் கொழும்பிற்கு இடம்பெயர்ந்த பிறகு அடிக்கடி பாலாண்ணாவுடன் அளவளாவும் சந்தர்ப்பம் இருந்தது. அப்பொழுது நான் பணிபுரிந்த *'சரிநிகர்'* பத்திரிகையில் எழுதிய பத்திகளில் அவரையிட்டு இடையிடை குறிப்பிடுவதுண்டு. அது அவருக்கு அளவில்லாத மகிழ்ச்சி. *"எப்படி ஐசே இவ்வளவற்றையும் ஞாபகம் வைத்திருக்கிறீர் ?"* என்று அடிக்கடி வியப்பார். இப்படி அடிக்கடி வியக்கின்ற சந்தர்ப்பங்களை நான் வழங்கிக் கொண்டே இருந்தேன்.

அவரது *'கிராமத்து கனவுகள்'* ஒலிநாடாவு சிறப்பு நாடா வெளியீட்டு விழாவிற்கு சிறப்பு அழைப்பின் பேரில் போயிருந்தேன். அப்பொழுது தான் கவனித்தேன், சிங்களக் கலைஞர்கள் பாலாண்ணன் மீது எப்படி அன்பும், பரிவும், மரியாதையும் கொண்டிருக்கிறார்கள் என்று. சிங்களத் திரையின் உச்ச நட்சத்திரமான சபீதா பெரேரா என்ற நடிகை கிட்டத்தட்ட பாலா அண்ணை அணைத்தவாறு தன் அன்பைக் காட்டிக்கொண்டிருந்தார்.

சிங்களக் கலைஞர்கள் அவ்வாறு அன்பு கொண்டிருந்தாலும், சிங்கள அரசு அவரை உலைத்தது, சிப்பிலியாட்டியது. குற்றம் ஒன்றும் புரியாமல், தமிழன் என்ற ஒரே ஒரு காரணத்திற்காக 13 மாதங்கள் சிறையில் வைத்து, சித்திரவதை செய்து, அவரை வெளியில் துப்பியபோது, அவரை ஒன்றும் இல்லாதவராக்கிற்று. அதாவது, அவர் செய்த அரசாங்கப் பணி அவருக்கு இல்லை. அதுவரை காலமும் அவர் பணிபுரிந்ததற்கான ஓய்வூதியமும் அவருக்கு வழங்கப்படாது நிறுத்தப்பட்டது.

மனம் கசந்து, பாலாண்ணன் கனடா சென்றார். அங்கு அவர் கலைப் பணியைத் தொடர்ந்தாலும், அது காத்திரமாக இருந்ததா என்று தெரியவில்லை. *'ஒரு பேப்பர்'*க்கு தொடர்ந்து பத்திகள் எழுதினார். அதுதான் ஒரே ஒரு மகிழ்வு. கலை வாழ்வில் பெருவாழ்வு, வாழ்ந்து விட்டு, காலாமானார் பாலாண்ணன். "போய் வாருங்கள் பாலாண்ணா" என்று சொல்ல முடியவில்லை. அது அவருக்குப் பிடிக்காது. எனவே அவரது தமிழில் "போட்டு வாங்கோ பாலாண்ணை" என்று தான் சொல்லத் தெரிகிறது எனக்கு.

## உக்ரேனின் கிறிமியாவின்...

(12ம் பக்கத் தொடர்ச்சி)

இலட்சியமாக இருக்கின்றது. உகிரேனின் கீழ் தன்னாட்சி உரிமையுள்ள பிராந்தியம் என்றவகையில் கிரிமியப் பாராளமன்றம் தமது 'நாட்டை' இரசிய கூட்டாட்சியகத்தின் ஒரு பகுதியாக இணைக்கும் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. இனி இது மக்கள் மத்தியில் வாக்கெடுப்புக் விடப்பட்டு கிறிமியா இரசியாவுடன் இணைக்கப்படும். உக்ரேனில் இரசிய சார்பு ஆட்சியாளர்கள் அமையாமல் போனால் இரசியர்கள் அதிகம் வாழும் உக்ரேனின் கிழக்குப் பிராந்தியத்தில் இரசியாவால் பெரும் பிரிவினை வாதத்தை வளர்க்க முடியும்

### ◆ தெரிவுகளற்ற நிலையில் ஒபாமா

விளடிமீர் புட்டின் ஆர்ப்பாட்டமில்லா அதிரடி நடவடிக்கையால் கிறிமியா வைத் தனதாக்கியதும் அவரால் உக்ரேனின் கிழக்குப் பிராந்தியத்தையும் இழப்புக்கள் இன்றிக் கைப்பற்றலாம் என்ற நிலை இருப்பதாலும். அமெரிக்க நிர்வாகம் செய்வதறியாமல் நிற்கின்றது. வெறும் பொருளாதாரத் தடை என்றும் இராசதந்திரத் தனிமைப்படுத்துதல் என்றும் மிரட்டல்களை விடுப்பதைத் தவிர அமெரிக்காவால் பெரிதாக ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனால் இரசியாவின் நிதிச் சந்தை மேற்கு நாடுகளை முந்திக் கொண்டு புட்டினைத் தண்டித்தது. உக்ரேன் விவகாரத்தைத் தொடர்ந்து இரசியாவின் பங்குச் சந்தையில் இரசிய வர்த்தக நிறுவனங்களின் பங்குகள் தமது பெறுமதியில் 34 பில்லியன் (மூவாயிரத்துநானூறு கோடி) டொலர்களை இழந்தன. இரசிய அரசு தனது நாணயமான ரூபிளின் பெறுமதி மோசமடையாமல் இருக்கு பத்து பில்லியன் வெளிநாட்டுச் செலவாணியை இழக்க வேண்டி இருந்தது. அமெரிக்காவின் பொருளாதாரத் தடையை ஜேர்மன் உட்பட்ட சில மேற்கு ஐரோப்பிய நாடுகள் விரும்பவில்லை. இரசியாவிலிருந்து இறக்குமதி செய்யும் எரிவாயுவில் ஜேர்மனி பெரிதும் தங்கி இருக்கின்றது.

### ◆ உக்ரேன் மீண்டும் அணுக்குண்டைக் கையில் எடுக்குமா?

இரசியாவின் நகர்வுகளால் ஆத்திரமடைந்த உக்ரேன் தான் மீண்டும் ஒரு அணுக் குண்டு நாடாக மாறவேண்டும் என்கின்றது. 1991-ம் ஆண்டு சோவியத் ஒன்றிய விழ்ச்சியின் பின்னர் உக்ரேன் தனியான ஒரு நாடாகிய போது அதனிடம் நிறைய அணுக்குண்டுகள் இருந்தன. எண்ணிக்கை அடிப்படையில் உக்ரேன் அப்போது உலகில் மூன்றாவது அணுக்குண்டு நாடாக இருந்தது. ஆனால் அணுக்குண்டுகளை வைத்திருக்க விரும்பாத உக்ரேன் தனது குண்டுகளை இரசியாவில் வைத்து அழிக்க ஒத்துக் கொண்டது. அதன் பேரில் உக்ரேன் அரசு இரசியா, ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய நாடுகளுடன் ஒரு உடன்படிக்கையைச் செய்து கொண்டது. Budapest Memorandum உடன்பாடு எனப்படும் அந்த உடன்படிக்கையின் படி இரசியா, ஐக்கிய அமெரிக்க, பிரித்தானியாஆகிய நாடுகள் உக்ரேனின் பிராந்திய ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதாக ஒத்துக் கொண்டன.

இப்போது இரசியாவின் நகர்வுகள் அந்த உடன்பாட்டை மீறுவதாக உக்ரேன் குற்றம் சாட்டுகின்றது. அத்துடன் உக்ரேனால் மூன்று அல்லது ஆறு மாதங்களுக்குள் அணுக்குண்டுகளை உற்பத்தி செய்ய முடியும். அதற்குரிய தொழில்நுட்ப வல்லமையும் வளமும் உக்ரேனிடம் இருக்கின்றது. மேற்கு ஐரோப்பிய நாடுகள் தமது எல்லைகளை உறுதி செய்ய இரு பெரும் போர்கள் தேவைப்பட்டது

அநீதியிடம் சிக்கிக்கொண்டிருக்கும் நீதி..




பிரித்தானியா

TEL: 020 7043 4315 FAX : 020 7043 4312

உங்கள் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்க வேண்டுமா?

TEL: 647 724 4188 FAX : 416 438 7855

கனடா



# பாலு மகேந்திரா - அழகை யாசித்த ஓர் அற்புதக் கலைஞன் - 02



**இரவி அருணாசலம்**

*(கடந்த வாரத் தொடர்ச்சி)*

*மூன்றாம்பிறை* திரைப்படத்தைப் பற்றிக் கூறுகையில் அவர் சொன்னது இவைதாம், அவரது வாழ்வில் ஒரு கவிதைபோல, தென்றல் போல நடிகைஷோபாவருகிறார். அத்தனை சுகங்களையும் அள்ளிக் கொண்டு அத்தனை அழகையும் சுமந்து கொண்டு தேவதையாக வருகிறார். அவ்வளவு இன்பங்களையும் வாரி வழங்குகிறார். திடீரென்று அவளைக் காணவில்லை. என்ன காரணம்? எதுவும் தெரியவில்லை. ஒரு மூன்றாம் பிறையாக அழகாகத் தோன்றி சடக்கென மறைந்தது போல போனாள் அவள். அந்த ஷோபாவின் கதையை திரைக்கதையில் வியாக்கியானம் செய்தார் அதனால் *மூன்றாம்பிறை*யாகிற்கு.

பேச்சுவாக்கில் ஈழத்து அரசியல் நிலவரங்களைக் கேட்டார். 1983 சிங்கள இன வன்முறை தன்னை பாதித்ததின் வலி சொன்னார். அந்நேரம் மட்டக்களப்பு சிறையடைப்பு நிகழ்ந்திருந்தது. அது ஈழத்தமிழர்களுக்கு கிடைத்த முதல் வெற்றி என்றார். அது தன்னை மிகவும் பாதித்திருக்கின்றது என்றார். அதனை திரைப்படமாக எடுக்கப் போகின்றேன் என்றும் சொன்னார். பின்பு கம்பீரம் கரைந்து போய் யாசிக்கும் குரலில் கேட்டார். ‘தம்பி நீங்கள் என்னுடன் நிற்கிறீங்களா? அத்திரைப்படத்தை எடுப்பதற்கு என்னுடன் உதவியாளராக நிற்பீர்களா?’

எனக்கு அப்போது என்னில் எவ்வித நம்பிக்கையும் கிடையாது. மற்றும் நான் செய்த வேலையும் வேறு. அதிலும் மேலாக தமிழ்நாட்டில் தங்குவதையோ, யாழ்.பல்கலைக் கழகப் படிப்பை இடைநிறுத்துவதையோ என் நடுத்தரவர்க்க அறிவு ஏற்றுக் கொள்ளவில்லை.

என்முகம் என் சம்மதமின்மையை சொல்லிற்று. மூன்றாவது முக்கிய விசயம் இது தான். இதனை அவர் குரலில் சொல்கிறேன். *“நான் தமிழ்நாட்டில் நீண்ட காலம் இருக்க முடியாது போல் இருக்கிறது. எம்.ஜி.ஆர். என்னைத் துரத்துகிறார். நானும் ஓடுகிறேன். அவரும் விடாமல் துரத்துகிறார், நானும் ஓடிக்கொண்டு இருக்கிறேன். ஆனால் ஒரு நாளைக்கு களைச்சு விழுவேன். அவரது காலடியில் விழுவேன். விழக்கூடாது என்றுதான் நினைத்தேன். ஆனால், விழ வைப்பார்கள். ஏற்கனவே பாரதிராஜா அவருடைய காலடியில் விழுந்து விட்டார். மகேந்திரனும் விழுவார் என்று எதிர்பார்க்கவில்லை” ‘எம்.ஜி.ஆருக்கு சிறந்த நடிகர் என்ற விருது கொடுத்தால், அந்த விருதினை நான் எப்படி மதிக்க முடியும் என்று கேட்டவர் அவர். இப்பொழுது நான் ஒருவன் மாத்திரம் இருக்கின்றேன். என்னையும் தன் காலடியில் விழ வைப்பதற்காக எம்.ஜி.ஆர். எவ்வளவோ முயல்கிறார். நான் இலங்கையன் என்று கிளறுகிறார். இப்பொழுது ஷோபாவின் தற்கொலை அவர்களுக்கு வசதியாகிப் போய் விட்டது. எப்படியோ நான் இலங்கைக்கு துரத்தப்படுவேன் அல்லது எம்.ஜி.ஆர்.இன் காலடியில் விழுவேன், பார்ப்போம் என்ன நடக்கின்றது என்று”*

இதுவரைக்கும் பாலுமகேந்திரா எம்.ஜி.ஆர். இன் காலடியில் விழுந்ததாக நான் அறியவில்லை. அதுபோக சுயமான கலைஞனால் யார் காலிலும் விழமுடியாது.

அப்பொழுது நாங்கள் நடத்திவந்த ‘புதுசு’ இதழ்களின் எட்டு இதழ்கள் வந்து விட்டன. அவற்றைத் தொகுதியாகக் கொண்டு போயிருந்தேன். புதுசு நாலாவது இதழில் பாலு மகேந்திரா ஒளிப்பதிவு செய்த *‘முள்ளும் மலரும், சங்கராபரணம், அழியாத கோலங்கள்’* ஆகிய திரைப்படங்கள் பற்றிய ஒரு சிறுகுறிப்பொன்றை எழுதியிருந்தேன். அத்தொகுப்பை அவரிடம் கொடுத்தேன். வாசித்துவிட்டு நாளை தருகிறேன் என்றார்.

அடுத்த நாள் காலை அவர் வாசல் கதவைத் தட்டினேன். கதவு திறக்கும்போதே கையில் எட்டு ‘புதுசு’ இதழ்களும் இருந்தன. ‘சின்னப் பையன்கள் பென்னாம்பெரிய வேலை செய்கின்றீர்கள்’ என்றார். அதுதான் ‘புதுசு’வுக்குக் கிடைத்த ஆகப்பெரிய விருது என்று நம்புகின்றேன்.

பிறகு, அவரைச் சந்திக்க இருபது வருடங்கள் பிடித்தன. நான் புலம்பெயர்ந்தேன். என் கையில் *‘காலம் ஆகிவந்த கதை’* என்ற படைப்பு வந்து நின்றது. 2003 ஒக்டோபர் மாதம் பாலு மகேந்திராவைச் சந்தித்தேன். எனது புத்தகத்தைக் கொடுத்தேன். சந்தோஷப்பட்டார். 1984 ஜனவரியில் சந்தித்த விபரங்களைச் சொன்னேன். ஒன்றும் அவருக்கு ஞாபகம் இல்லை. ‘அப்படியா அப்படியா...’ என்று ஆச்சரியமாகக் கேட்டார். என் ஞாபகசக்தியை வியந்தார்.

இந்த இருபது வருடங்களுக்கிடையில் அவருடைய முக்கியமான படைப்புகளை பார்த்திருந்தேன். கறுப்பு, வெள்ளையில் வந்த அவரது முதலாவது திரைப்படமான *‘கோகிலா’*வை கூட பார்த்திருந்தேன். தமிழில் வந்த படங்களை விடுங்கள். மலையாளத்தில் வந்த *‘யாத்ரா, ஊமைக்குயில்’* ஆகிய படங்களைக் கூட பார்த்திருந்தேன். இந்த இருபது வருடங்களுக்கிடையில் அவர் மூவருக்கு சிறந்த நடிகருக்கான தேசிய விருதைப் பெற்றுக் கொடுத்திருந்தார். கமலஹாசன் (மூன்றாம்பிறை), மம்முட்டி (யாத்ரா), அர்ச்சனா (வீடு) ஆகியனவே அவை. எப்பொழுதும் தேசிய விருது பட்டியலில் அவரது படங்கள் இருந்தன.

துக்ககரமான விடயமொன்றும் இருந்தது. இந்த இருபது வருடங்களில், அவர் மீதான பிரமை கொஞ்சம் கொஞ்சமாக உடைபடத் தொடங்கின. அவர் அதிசிறந்த ஒளிப்பதிவாளர் என்பதற்கு எனக்கு மாற்றுக் கருத்து கிடையாது. நிமாஈக்கோஷ், மார்க்கஸ்பாட்லே, வின்சென்ற் முதலான ஒளிப்பதிவு மேதைகளுக்குப் பிறகு, ஒளிப்பதிவில் இவர் செய்த புரட்சி முக்கியமானது. அசோக்குமார், மதுஅம்பாட், பி.சி. ஸ்ரீராம், சந்தோஷ்சிவன் என்று இவர் பின் வந்தோரைச் சொல்லலாம். பாலுமகேந்திராவே இவர்களுக்கு வழியும், வெளியும், ஒளியும் ஏற்படுத்திக் கொடுத்தார்.

ஆனால், திரைப்பட நெறியாள்கை அல்லது திரைக்கதை என்று வருகின்றபோது, பாலு மகேந்திரா மூன்று முக்கிய திரைப்படங்களை மாத்திரமே கொடுத்திருக்கின்றார் என்பது என் தாழ்மையான அபிப்பிராயம். சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள். அவற்றில் *மூன்றாம்பிறை*யும் ஒன்று. மற்றயது *யாத்ரா, சந்தியாராகம் ஆகியன*

*வீடு* திரைப்படம் குறித்து என்னிடம் வேறு அபிப்பிராயம் உண்டு. ஒரு நடுத்தரவர்க்கம் வீடு கட்டுவதில் எதிர்நோக்கக்கூடிய சிரமங்களை விபரண வடிவில் சொன்ன திரைப்படம் அது. அதன் திரைக்கதை மிகப்பலவீனமாதொன்று.

*‘மறுபடியும்’* என்ற திரைப்படத்தை பலர் குறிப்பிடுவர். அதை பாலுமகேந்திராவின் சுயமான படைப்பு என்ற கருத்தும் பலருக்கு உண்டு. மகேஷ்பட் இயக்கிய ‘அர்த்’ திரைப்படத்தின் அப்பட்டமான தளுவலே கதையே *மறுபடியும்* திரைப்படம். அதிலும் கூட அர்த் திரைப்படத்தின் உயிர்ப்பு, *மறுபடியும்* திரைப்படத்தில் காண முடியவில்லை என்பது துயரமான செய்தி.

இதற்குப் பின் 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் பாலுமகேந்திராவைச் சந்தித்தேன். மேற்குறித்த தகவல்களை அவரிடம் கூறத் தயங்கவில்லை. அவர் ஒரு மாதிரியாக என்னைப் பார்த்தார். சடக்கெனச் சொன்னார் “*வீடு* திரைப்படம் தான் சிறந்ததாக யாவரும் குறிப்பிடுகின்றனர். *மூன்றாம்பிறை* வர்த்தக சமசரத்துக்குட்பட்ட திரைப்படம் என்பது தான் யாவரினதும் கருத்து”

“என்னவோ சேர் என் கருத்து இது, *மூன்றாம் பிறை*யில், சில்க்சுமிதா சம்பந்தமான காட்சிகளை நீக்கிவிட்டால், அது மிகச்சிறந்த திரைப்படமாக மிளிரும் என்றேன்” பிறகும் ஒரு மாதிரியாகத் தான் என்னைப் பார்த்தார். ஆனால், இப்பார்வையில் சற்று வித்தியாசம் தென்பட்டது. பயப்பிடுகிறார் அல்ல, ‘இவரிடம் ஏதோ விசயம் இருக்கின்றது’ என்று பார்க்கிறார். ஏனென்றால், பாலு மகேந்திராவின் அத்தனைத் திரைப்படங்களையும் பார்த்திருக்கின்றேன். அது மட்டுமல்லாது அவர் ஒளிப்பதிவு செய்த *‘இரு நிலவுகள்’, ‘உறங்கா நினைவுகள்’, ‘பொன்னி’ எச்சின் இரவுகள்’* போன்ற திரைப்படங்களைக் கூட ஓடி ஓடிப் பார்த்திருக்கின்றேன். அவருக்கு, என் இரசனையை குறைத்து மதிப்பிடச் சந்தர்ப்பம் இல்லை.

அவரை விட்டு விடைபெறுகின்ற சமயம், என் முதுகைத் தட்டி ‘கீப் இற் அப்’ என்றார். என் ஒரு கையைதன் இருகைகளாலும் பற்றினார், எனக்கு அப்பொழுது ஒன்றே ஒன்று தென்பட்டது அவர் ஓர் உண்மை மனிதன் என்று.

அதன் பிறகு, மூன்றாம் நாள் பாலு மகேந்திரா செல்பேசியில் அழைத்தார். “நான் உடன் உங்களிடம் வருகிறேன்”, அரை மணித்தியாலத்தில் வந்தார். அப்பொழுது அவர் சினிமா பற்றி ஒன்றுமே பறையவில்லை. அவர் பறைய வேறு சில சங்கதிகள் இருந்தன. அதில் ஒன்றை இந்த இடத்தில் நான் குறிப்பிட வேண்டும். இந்த இடத்தில் என் மௌனம் என்பது பாலுமகேந்திராவிற்கு நான் செய்யும் துரோகமாகும் என்பேன்.

அரசியல் பற்றியே நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தார். போகிற போக்கில் ஒரு வரி சொன்னார். ‘காசி ஆனந்தன் சைக்கிள் ஓடுகிறார், பாலு மகேந்திரா பின் கரியலில் இருக்கிறார், மட்டக்களப்பு கச்சேரியடியில் பாலுமகேந்திரா கைக்குண்டு வீசுகிறார்’. பாலுமகேந்திரா இதனை எனக்குச் சொன்னார்.

பாலுமகேந்திராவின் கையில் கைக்குண்டு எப்படி முளைத்தது என்றோ, ஏன் வீசினார் என்றோ அது கைக்குண்டோ அல்லது வெறும் கல்லோ என்றோ நான் எதனையும் விசாரிக்கவில்லை. ஏனென்றால் அதனை நான் நம்பவில்லை. பாலுமகேந்திரா புழுகுகிறார் என்று நினைத்தேன். அன்று மாலை காசி ஆனந்தனை சந்திக்க நேர்ந்தபோது பாலுமகேந்திராவை சந்தித்த விபரம் மாத்திரம் சொன்னேன். அப்பொழுது பாலுமகேந்திரா சொன்ன கதையை அட்சரம் பிசகாமல் காசி ஆனந்தன் சொன்னார். அதன் பிறகே அதனை நான் நம்பத் தலைப்பட்டேன். ஒன்றைத் தான் இப்பொழுது உறுதியாகச் சொல்வேன். இருவரும் சேர்ந்து இயற்றி இருக்க வேண்டும் அல்லது இது நடந்திருக்க வேண்டும் எதனை நான் எடுக்க? சொல்லுங்கள் நண்பர்களே.!

பாலுமகேந்திராவிற்கான என் அஞ்சலியில் இந்த ‘உண்மை சொல்லலில்’ நான் திருப்திப்பட்டு நிறைவாகச் சொல்கிறேன். ஒரு மகா கலைஞனுக்கு என் மனமுவந்த அஞ்சலி இது.




ஒரு பேப்பர்
ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £35 மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name: ______________________

Address : ______________________

______________________

______________________

Postcode: ______________________

Telephone: ______________________

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலையினையும்,
G11, Lombard House,
PURLEY WAY, CROYDON,
CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# மண்ணெண்ணெய்



## ஜே.கே

கோள்மூட்டி இன்னமும் ரீ..... என்று ஒரே சுருதியில் வானத்தில் சுற்றிக்கொண்டு இருந்தது. வெறும் மண்ணெண்ணெய் கானோடு வீடு திரும்பிய நமசிவாயத்தை வாசல்படியில் மறித்தபடியே மருமகள் நின்றாள்.

"என்ன அதுக்குள்ள எண்ணை முடிஞ்சுதா?"

"இல்ல கோமளா.. சரியான கியூ .. நாச்சிமார் கோயிலடி வரைக்கும் போய் நிக்குது"

"அதுக்கு?"

நமசிவாயம் தயங்கினார்.

".. மினக்கட்டு ஒரு லீட்டர் எண்ணைக்கு போய் ரெண்டு கட்டை கியூவில நிண்டு காயோணுமா? எண்டு வந்திட்டன்."

"ஏன் இங்க வந்தீங்கள்? .. அப்பிடியே எங்கேயும் போய் துலைஞ்சிருக்கலாமே "

குத்தினாள். அவருக்கு இது புதுதில்லை. குரலெழுப்பாமல் பதில் சொன்னார்.

"இல்ல பிள்ள.. கொஞ்ச நேரம் நிண்டு பார்த்தன்.. வெயில் தாங்கேலாம போட்டுது .. தலைய சுத்திச்சுது...."

"ஏன் கியூல நிக்கிற மத்தவனுக்கு சுத்தாதா? வேலை வெட்டி இல்லாம சும்மா தானே கிடக்கிறீங்கள்.. அதில போய் நிண்டு வாங்கினா குறைஞ்சா போயிடும்? வேளாவேளைக்கு அள்ளிக் கொட்டிதின்னமட்டும்தெரியுது..கறுமம்ஒருலீட்டர் மண்ணெண்ணெய் வாங்க தெரியேல்ல"

"கிளுக்", உள்ளே படித்துக்கொண்டிருந்த பேரன் சிரித்த சத்தம் கேட்டது. நமசிவாயம் கூசிக் குறுகி போனார். திரும்பித்திட்டலாமா? வேண்டாம். சண்டை பெரிசாகும். சிவநாதனிடம் இல்லாததை போட்டுக்கொடுப்பாள். அவனும் மனிசிக்கு தான் வக்காலத்து வாங்குவான். கடைசிக் காலத்தில் மகனோடு சண்டை பிடித்து அவரும் தான் எங்கே போவார்? எனக்கு வாய்த்தது இப்படி ஒரு மருமகள். இதில யார் என்ன செய்ய ஏலும் ?

நமசிவாயத்துக்கு பசி வயிற்றை கிள்ளியது. கிணற்றடியில் போய் முகத்தை அலம்பிவிட்டு, அப்படியே கொஞ்சம் வாளித்தண்ணியை குடித்துவிட்டு, மீண்டும் சைக்கிளை எடுத்துக் கொண்டு விரைந்தார். பரமேஸ்வரா சந்தியில் இருந்த சங்கக்கடையில் ஆரம்பித்த கியூ கம்பஸ், கலட்டி சந்தி வரை சென்று நாச்சிமார் கோயிலடியையும் தாண்டி நீண்டிருந்தது.. இரண்டு கட்டை கியூ இப்போது மூன்று கட்டை நீளத்தில். உரிஞ்சான் குண்டி சிறுவர்கள், மூக்குச்சளி சிறுமிகள், அரும்பு மீசை அரை காற்சட்டைகள், குடைவெட்டு பாவாடைகள், கூச்சல் போடும் கம்பஸ் மாணவர்கள், பத்திரிகை, புத்தகங்களோடு மூழ்கியவர்கள், அம்மாமாரின் விடுப்பு கதைகள் என்று ஒரு குட்டி யாழ்ப்பாணமே மண்ணெண்ணெய்க்காய் வெயிலில் எரிந்தது.

முதல் தடவை அவர் கியூவில் நின்ற இடம் இப்போது ஓரளவுக்கு முன்னேறி நெருங்கி இருந்தது. போய் அந்த இடத்திலேயே நிற்கலாம். ஆனால் பின்னால் நிற்பவர்கள் திட்டுவார்கள். ஊர்க்காரர்கள் தான். நமசிவாயத்துக்கு அவர்கள் எல்லோரையும் தெரியும். அவர் அதிலே நின்றுவிட்டு இடைநடுவில் ஏலாது என்று வீடு திரும்பியதும் அவர்களுக்கு நன்றாகவே தெரியும். ஆனாலும் விடமாட்டார்கள். ஒருவர் வரிசையில் குறைந்தாலும் பின்னால் நிற்பவருக்கு எண்ணை கிடைக்கும் வாய்ப்பு அதிகரிக்கிறது. அதனால் தெரிந்தவரை கண்டாலும் ஒரு குட்டி தலையசைப்பு. அவ்வளவே. உதவமாட்டார்கள். முடியாது. மண்ணெண்ணெயின் தேவை இது எல்லாவற்றையும் மீறியது.

மூன்று நாளைக்கு முன்னர் தான் லங்கா முடித்தா யாழ்ப்பாணம் வந்திருந்தது. ஆறு மாதத்துக்கு பிறகு வரும் முதல் மண்ணெண்ணெய் கப்பல். கப்பல் எண்ணையை இயக்கம், அரச ஊழியர், ஆஸ்பத்திரி, விதானை, கடைக்காரர் என்று ஆளாளுக்கு எடுத்தபின்னர் குடும்பத்துக்கு அரைலீட்டர் என்று அதிர்ஷ்டம் இருந்தால் கிடைக்கும். சுட்டிவிளக்கில் சுண்டிக் கொண்டிருந்த வீடுகள் இனிமேல் கொஞ்ச நாளைக்கு மண்ணெண்ணெய் விளக்குக்கு மாறும். இருள் எண்ணை தீரும்வரை கொஞ்சம் விலகியிருக்கும். அந்த அரை லீட்டருக்காக இத்தனை போராட்டம். உறவுகள், தெரிந்தவர்கள், அன்பு, பாசம் எல்லாமே அரை லீட்டர் மண்ணெண்ணெய்க்காய் எரிந்து சாம்பலாகும்.

எதற்கு தேவையில்லாத சோலி என்று நமசிவாயம் சத்தம்போடாமல் வரிசையின் கடைசியில் போய் நின்றார். உச்சி வெயில், தலையில் துவாயை போர்த்தி கொண்டு நின்றாலும் தலை சுத்தியது.

கோள்மூட்டி இன்னமும் ரீ.... என்று ஒரே சுருதியில் வானத்தில் சுற்றிக்கொண்டு இருந்தது.

கோள்முட்டி இது வந்து வேவு பார்த்துவிட்டு போனால், அடுத்ததாக குண்டு விமானங்கள் விரைந்துவரும். எந்த பிரதேசத்தில் சுற்றுகிறதோ அந்த இடத்தை படம்பிடித்து கொடுக்கும். தொடர்ந்து பொம்மர்கள் வரும். வந்து மூன்று தடவைகள் சுற்றி சுற்றி பதிந்து குண்டுகளை பொழிந்துவிட்டு திரும்பிவிடும். சில இறப்புகள், செத்தவீடுகள், துப்புரவாக்கல்கள், சோக கீதங்கள் என்று நிலைமை மீண்டும் வழமைக்கு திரும்பிவிடும்.

"இந்த சனியன் பிடிச்சவன் வெள்ளன கிடந்து சுத்துறான்.. எங்கட ஏரியாவில தான் இண்டைக்கு பூசை போல" அதுக்குள்ள எண்ணைய வாங்கிட்டு வீட்ட போயிடோணும்."

கியூவில் முன்னால் நின்றவர் சொல்லிக் கொண்டிருக்க நமசிவாயத்துக்கு வெள்ளன நடந்த சம்பவங்கள் ஞாபகம் வந்தது.

♦ ♦ ♦ ♦ ♦ ♦ ♦

வழமை போலவே அன்றைக்கும் நமசிவாயம் அதிகாலை எழுந்து கை கால் முகம் கழுவி, பூ ஆய்ந்து சாமியறை படங்களுக்கு வைத்தார். மனைவி படத்துக்கு முன்னே செவ்வரத்தை ஒன்றை வைத்து சிறிது நேரம் கண்மூடியபடி இருந்தவர், "நீ இருந்திருந்தா இந்த நிலை வந்திருக்குமா ? அப்பனே முருகா" என்று சொல்லியபடியே வீபூதி பூசியபடியே, வெளியே வர, கோமளா சிரித்தபடியே நின்றாள். கையில் மண்ணெண்ணெய் கான் இருந்தது.

கோள்மூட்டியின் ரீ... சத்தம் அப்போது தான் தூரத்தே கேட்க ஆரம்பித்தது.

"சங்கக்கடையில கூப்பன் கார்ட்டுக்கு அரை லீட்டர் மண்ணெண்ணெய் குடுக்கிறாங்கள்.. ஒருக்கா வாங்கி கொண்டு வாறீங்களா மாமா"

'மாமா' வில் ஓர் அழுத்தம் தெரிந்தது. நமசிவாயம் ஏதோ சொல்ல வாயெடுக்க முதலே,

"தேத்தண்ணிக்கு இப்ப தான் தண்ணி வச்சிருக்கிறன்.. அதுக்குள்ள வாங்கியோண்டு வாங்க என்ன?

"கா.." என்று ஆரம்பித்தவரை பேசவிடாமல் தொடர்ந்தார். "உங்கட கூப்பன் கார்ட்டும் எடுத்து வச்சிட்டன் மாமா.. இந்தாங்க.. டக் கொண்டு போயிட்டு வாங்க"

அவர் பேசாமல் கானையும் கார்ட்டுகளையும் கோமளாவிடமிருந்து வாங்கினார். அறைக்குள் போய் தன் பேர்சை எடுத்து பார்த்தார். முந்தைய நாள் எடுத்த பென்ஷன் காசு ஆயிரம் ரூபாயில், கோமளாவுக்கு ஐநூறு, கடன் இருநூறு கொடுத்தது போக மீதி முன்னூறு ரூபாய் இருந்தது. கார்டுக்கு அரை லீட்டர் படி ஒரு லீட்டர் எண்ணை எண்பது ரூபாய் ஆகும். மிகுதி இருநூற்றிருபது ரூபாயில் அடுத்த பென்ஷன் வரை சமாளிக்கவேண்டும். முடியாது. நமசிவாயம் தயங்கினார்.

"பிள்ள எண்ணைக்கு காசு?"

"பென்ஷன் காசு முன்னூறு ரூவா இருக்கோணுமே? அதுக்குள்ள குடிச்சிட்டீங்களா"

சொன்னபடியே கோமளா குசினிப்பக்கம் திரும்பிப்பார்க்காமல் நடந்துபோனாள். நமசிவாயம் தலைகுனிந்தபடியே கடைக்கு சைக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட்டார். முற்றத்தில் மகன் சிவநாதன் தேநீர் குடித்தபடியே உதயன் வாசித்துக்கொண்டிருந்தான்.

ரீ... நெருங்கிக்கேட்டது.

♦ ♦ ♦ ♦ ♦ ♦ ♦

"ஐயா என்ன வெங்கலாந்திக்கொண்டு நிக்கிறீங்க.. லைன் முன்னுக்கு போகுது.. ஆரும் பூரப்போறாங்கள்"

நமசிவாயம் சுயநினைவுக்கு திரும்பினார். யாழ்ப்பாண உச்சி வெயில் அனல் பறந்தது. ரீ... சத்தம் கொஞ்சம் குறைந்தால் போல இருந்தது. அல்லது அது எப்போதே திரும்பியிருக்கலாம். ஆனால் காதுகளில் இன்னமும் கேட்டபடி இருந்தது. கியூ இப்போது நன்றாக முன்னேறிவிட்டது. முன்னேற முன்னேற நெரிசல் அதிகமானது. முன்னுக்கு நின்று எண்ணையை வாங்கியவர்கள் திரும்பியபோது இவர்களை பார்த்து ஒருவித வெற்றிப்பெருமிதத்தொடு ஏளனமாக சிரித்துக்கொண்டு போவது போல தோன்றியது. சிலர் மோட்டார் சைக்கிளில் வந்து முன்னால் நின்ற சிறுவர்களிடம் காசுகொடுத்து இடத்தை பிடித்துக்கொண்டார்கள். அந்த சிறுவர்கள் மீண்டும் கியூவுக்கு பின்னால் போய் நிற்கவென ஓடினார்கள். ஒரு நடுத்தர வயது பெண்மணி, குளிர்கண்ணாடி அணிந்தபடி ஒயிலாக மண்ணெண்ணெய் கானோடு கடையை நோக்கி போய்க்கொண்டிருந்தார். அந்தப்பெண் வரிசையில் நிற்காமலேயே வாங்கிவிடுவாள் என்று நமசிவாயம் நினைத்துக் கொண்டார். அவருக்கு முன்னால் வரிசையில் மெல்லிய சலசலப்பு உருவானது. கம்பஸ் மாணவர்களோடு புதிதாக வந்த சிலர் சிரித்து பேசி இடையில் நைசாக நுழைய முயன்றார்கள். நமசிவாயத்துக்கு முன்னால் நின்றவர் விடவில்லை.

"தம்பியவை இப்பிடி இடைக்குள்ள பூந்தா எப்பிடி? நாங்க என்ன சிரைக்கவே இவ்வளவு நேரம் நிக்கிறம்"

